வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர் களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள் களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1935



## சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரிலுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு.
அண்ணுவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிருள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,

சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

**சகல மேக சித்தாதி எண்ணெய்**

**புட்டி 1-க்கு விலை ரூபா 5.**

# அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நாம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக!

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.**

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புருக்கி

நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப் பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச் சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M B. & C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,

District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2,

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

ஸ்ரீ மத் வள்ளி மலை,

திருப்புகழ் சுவாமி சச்சிதாநந்தா

அவர்களால் தொகுக்கப்பட்ட

# திருப்புகழ் பாராயணத் தவநெறித் திருமுறை.

இந் நூலின் நோக்கம், நாம் தினப்படி மானஸீக பூஜை வழியாக முருகனை நாவினால் பாடி அவனை வழிபடுவதற்கே யாகும். மற்றும் எவ்வளவோ திருப்புகழ் புத்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவை முறையே ஸ்ரீமத் அருணகிரிநாதர் பாடலுக்கு மாறுதல்கள் உள்ளபடியால், திருப்புகழே தொண்டாகக் கொண்டு விளங்கிவரும் ஷ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள், பலர் விருப்பத்தின்படி இந்நூலை, மிகவும் பிரயாசையுடன் தொகுத்துள்ளார். மெய்யன்பர்கள் இந்நூலை வாங்கி, பாராயணம் செய்ய, அதன் பெருமையும் பலனும் விளங்கும்.

தனி பிரதி விலை அணா 8.

புத்தகம் மொத்தமாய் வேண்டுபவர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு ரிப்ளை கார்டு மூலம் விவரம் அறியவும்.

குறிப்பு:—தபால் மூலமாய் வேண்டுவோர் 0—11—0 பதினோறணா ஸ்டாம்பு கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.

அயல் நாடுகளுக்கு வி. பி. மூலம், அனுப்புவது கிடையாது. 0—14—0 அணா மணியார்டர் மூலம் அனுப்பினால், புத்தகம் அனுப்புவோம்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. ஆ. கந்தசாமி முதலியார்,
ராதா ரைஸ்மில்,
ரெட்ஹில்ஸ் போஸ்டு, சென்னை மார்க்கம்.

---

31, வைத்தியநாத முதலி தெரு,
ஜி. டி. மதராஸ்.

---

க. கங்காதர முதலியார்,
11, முதல்நாராயணன் தெரு, ஜி. டி. மதராஸ்.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்



| மலர் | பவ௵ தை௴ 1௳ | இதழ் |
|---|---|---|
| 6 | 1935௵ ஜனவரி௴ 14௳ | 1 |



## பொருள் அடக்கம்


'தமிழரசு' புது வருட வாழ்த்து ... 2
ஆசிரியர் குறிப்புகள் ... 3
வியர்த்தமான காதலுக்குப் பலி 9
ஒற்றுமை முரசு ... 17
வெளி விகடம் ... 19
களிப்பும் நகைப்பும் ... 23
சிறு குடல் ... 26
சிறுவர் விருந்து ... 30
அக்கினி புராணம் ... 32
எதிர்பார்த்தல் ... 35
கோகிலத்தால் ஏமார்ந்த கோவிந்தன் ... 38
மேகலாம்பிகை ... 47
என் உபாத்தியாயர் ... 54
சகோதர வாஞ்சை ... 58
கண் விழியுங்கள்! எதிர்பாருங்கள்!! ... 67
மகா சக்தி கவசத்தின் மகிமை ... 68
என் அன்பைக் கவர்ந்த கண்ணாளா! ... 73


குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

## ‘தமிழரசு’ புது வருட வாழ்த்து

[S. சங்கரலிங்கம்]

கண்ணுதற் கடவுளும் கழகமோ டிருந்து
பண்ணுற வாய்ந்த பழந்தமிழ் மொழியில்
வல்லவன் என்றே பல்லவர் மொழியத்
திசைதொறுஞ் சென்று சொன்மழை பொழிந்து
சங்கம் பற்பல அங்கங்கு நிறுவி
அழியாப் பெரும்புகழ் அணியாக் கொண்டே
உலகை நீத்த உத்தமன் என்குரு
திருந்திய குணத்தன் திருநாவுக் கரசன்
கருத்திற் பிறந்த விழுப்பமை அரசே!
தோன்றிய நாள்முதல் தொடர்பிணி யின்றிக்
கிழமையிற் சின்னாள் கிளர்ந்து விளங்கினை
திங்களில் இப்போ திகழா நின்றனை
வையக மறிந்த வைத்திய நிபுணன்
காசைப் பெரிதாக் கருதா உளத்தன்
ஏழைக் கிரங்கும் இனிய குணத்தன்
அனுபவ வைத்தியப் பனுவ லாளன்
மாசில் குணத்தன் மாசிலா மணியைத்
தலைமை கொண்டு நிலவா நின்றனை
கற்றவர்க் கன்றி மற்றவர் தமக்கும்
உவப்பை யளித்தே உலவா நின்றனை
காதற் கதைகளும் கற்பனைக் கதைகளும்
வேதியர் புரட்டும் விற்பனர் பகட்டும்
ஆடவர் பெண்களை யடக்குந் தொரட்டும்
பற்பல எடுத்துப் பகரா நின்றனை
ஐந்தாண் டகல அடைந்தனை யாதே
புகாஅப் புதுமனை தோறும் புகுந்தே
இயற்றிய பணிபோல் என்று மியற்றி
வளர்பிறை போலத் தடையின் றோங்கி
மாநில மெங்கும் நீள்புகழ் நிறுவி
வாழ்க வாழ்க நீணெடுங் காலம்
தாழ்வின்றி யெவர்க்குந் தமிழர செனவே.

## நேயர்கட்கு வாழ்த்து

தண்டமிழ் நாட்டினருக்கு இந்நாளோர் நன்னாளாகும். தமிழரசு சந்தாநேயர்கட்கு இந்நாளோர் நன்னாளாக விருப்பதுடன் பெரிதும் மகிழ்ச்சியைத் தரும் நாளாகும். நமக்கு இந்நாள் வருடப் பிறப்பல்லவாயினும், இந்நாளை நாம் வருடப்பிறப்பினு மதிகமாய்க் கொண்டாடுகிறோம். வீடுகளெல்லாம் பரிசுத்தமுடையனவாய், மங்களமாய் விளங்குகின்றன. எல்லா வீடுகளிலும் பொங்கலிடுகின்றனர். பானைகளில் பால்பொங்கும்போது மங்கையர்கள் தங்கள் ஆனந்தத்தை, மகிழ்ச்சியைத் தெரிவிக்க குரவை இடுகின்றனர். சிறுமகாருட்பட ஆண்பெண் முதலிய எல்லோரும் தூய உடையணிந்து முகமலர்ச்சியுடனே தோற்றுகின்றனர். இன்று எல்லோர் முகத்திலும் குறுநகை தவழ்கின்றது. மற்றைய நாட்களில் எப்படியிருப்பினும் இன்றுமட்டும் தமிழ்மக்களெல்லாம் களங்கமற்ற, தூய்மையான, ஊக்கமும், உற்சாகமும் ஒருங்கே பொருந்திய மனத்தினராக மிளிர்கின்றனர். இதுகாறும் தங்கட்கு எய்திய இடுக்கண்களையும் துக்கங்களையும் மறக்கின்றனர். பகைவருடனும், பழைய பகையை மறந்து, நட்புக்கொள்ள விழைகின்றனர். உற்றார் உறவினர்களை கபடமற்ற மனத்துடன் நினைக்கின்றனர். மூதாதையர்களை நினைக்கின்றனர். சிற்சிலர் அவர்களை நினைத்து அவர்கட்கு அறுசுவை உண்டி பாங்குறப் படைத்து அவர்களிடம் தங்கட்குள்ள கனிந்த அன்பையும் நன்றியையும் காட்டிவழிபடுகின்றனர். இன்று எல்லோரும் வயிறார அறுசுவை உண்டி அருந்தி, அகமகிழ்வெய்துகின்றனர். இந்நாளை எல்லா வகையிலும் குதூகலமாகவே கழிக்கின்றனர். ஆ! தமிழ் நாட்டினருக்கு இதைவிட வேறு இன்பந் தருவதோர் நன்னாளும் உண்டோ? இல்லை என்றே கூறலாம்.

நிற்க, 'தமிழரசு' சந்தாநேயர்கட்கும் இன்னாளோர் மகிழ்ச்சியைத் தரும் நன்னாள் என்று ஏன் கூறினோமெனில், 'தமிழரசு'க்கு நேற்றுடன் ஐந்தாம் வயது பூர்த்தியாகிவிட்டது. இன்று ஆறாம் வயது ஆரம்பமாகிவிட்டது. கடந்த ஐந்தாண்டுகளிலும் 'தமிழரசு' 'என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற கட்டளைப்படி தன் சக்திக்கு இயன்றவாறு தமிழிலுலக்கு கடனாற்றி வந்துள்ளது. 'தமிழரசு' ஆற்றி இருக்கும் கடனை நாம் ஈண்டு எடுத்தோதுதல் அவசியமன்று. அதற்கு முந்திய பக்கத்தில் காணப்படும்

வாழ்த்துப்பா ஒன்றே போதுமானது. அருத்தமில்லாத சடங்குகளும், மூடநம்பிக்கைகளும் மலிந்து கிடக்கும் நாட்டில் அவைகளையொழிக்கும் நன்னோக்கத்துடன் கடனாற்றுவது அவ்வளவு எளிதல்ல. அதற்கு இடையூறுகள் பல நேரிடும். இருப்பினும் 'தமிழரசு' அவ்விடையூறுகளையும் பொருட்படுத்தாது சீரிய முறையில் கடனாற்றிவந்துள்ளது. இனியும் அவ்வாறே செய்யும். அதற்கு சந்தா நேயர்களின் ஆதரவு பெரிதும் வேண்டும். எனவே இதுவரை 'தமிழரசை' அன்புடன் ஆதரித்துவந்த சந்தா நேயர்களை இனியும் ஆதரித்து வருமாறும், அவர்களை உடனே எப்போதும்போல் முன்பணம் அனுப்பி தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம். தமிழ் நாட்டினரும் 'தமிழரசு' சந்தாநேயர்களும் இதைப்போல் எண்ணில்பல 'பொங்கல்' நன்னாளைக்கண்டு களித்து பல்லூழிகாலம் திடகாத்திரத்துடன் வாழ வேண்டுமாய் வாழ்த்துகிறோம்.

## இந்தியர் தலை எழுத்து

'கேடு என்பது ஒருபோதும் தனித்து வராது' என்பது ஆங்கில மொழியில் ஒரு பழமொழி. இதற்குப் பொருத்தமாகத் தமிழில் 'பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்னும் பழமொழி வழங்கப்படுகின்றது. இப்பழமொழிகள் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சாலவும் பொருத்தமே. ஏனென்றால் இந்தியர்கள் எங்கு சென்றாலும் அவர்கட்கு சுதந்திரவாழ்வே கிடையாது. மகிழ்ச்சியான வாழ்வும் கிடையாது. இந்தியா அடிமைநாடு என்பது ஒருபுற மிருக்கட்டும். இந்தியாவில் அவர்கள் வாழ்வு எவ்வித மிருக்கிறது? நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கஷ்ட ஜீவனமே செய்கின்றனர். இந்த ஜீவனத்துக்கும் அவர்கள் அல்லும் பகலும் அனவரதமும் உழைக்கவேண்டி யிருக்கிறது. போதாக் குறைக்கு இப்பொழுது பணமுட்டடையும் சேர்ந்து கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஓர்புறம் மக்களை வாட்டிவதைக்கிறது. இந்தியர்கள் இக்கஷ்டங்களை நிவர்த்திக்க வகையில்லாது, மார்க்கமில்லாது தத்தளித்து வாடுகின்றனர். இந்திய நாட்டிலோ இந்தியர்கள் வாழ்வு இவ்வாறு இருக்கிறது. வெளிநாட்டிலே அவர்கள் வாழ்வைப்பற்றிச் சொல்லவேண்டியதே கிடையாது. எங்கும் அவர்கள் தீண்டப்படாதாராக நடத்தப்படுகின்றனர். ஆனால் எந்த நாட்டிலும் மெய்வருந்த உழைத்து அந்நாட்டை செழிப்புறச்செய்வது என்னமோ இந்தியர்தான். ஆனால் அவர்கள் சுதந்திரமாய், நீதியாய் வாழ்வதற்குத்தான் இடம்கிடையாது. காடாய்கிடந்த தென்னாப்பிரிக்காவை வெட்டித் திருத்தி செழிப்பாக்கியது இந்தியர்களே. தங்காளிக்கா, உகந்தா முதலிய பிரதேசங்களையும் செழிப்புறச் செய்ததும் இந்தியர்களே. இந்திய சிப்பாய்களால் போராடிப் பிடித்து செலவான தொகைக்கு வருமான வரிமூலம் பணம் தந்துதவி வெறும் தரிசாய்க் கிடந்த நஞ்செய்

நிலமாக்கி, அந்நாடு செழித்தோங்க உதவிசெய்தது இந்தியர் மூல தனமும், உழைப்புமே. மற்றும் ஜான்ஜிபார் என்னும் நாட்டையும் செழித்தோங்கச் செய்து, கிராம்பு வியாபாரத்தில் அதை முதன்மை யான நாடாக்கியதும் இந்தியர்களே. ஆனால் அந்நாடுகளில் எல்லாம் இப்பொழுது இந்தியர்கள் நிலைமை எப்படி இருக்கிறது? அவர்கள் அவ்விடங்களில் குடியிருப்பதற்குங்கூட ஆபத்தேற்பட்டுவிட்டது. அந்தோ! இந்தியர்கள் வாழ்வுதான் என்ன வாழ்வு? அவர்கள் பிறருக்கு உழைக்கத்தான் உலகில் தோன்றினர்போலும். இது அவர் களுக்கு ஏற்பட்டுள்ள தலை எழுத்துப் போலும்.

மொத்தத்தில் இந்தியர்கள் நிலைமை இப்படி இருக்க, இப் பொழுது ஜான்ஜிபாரில் இந்தியர்கள் நிலைமை படுமோசமான போக்கை அடைந்து விட்டது. ஜான்ஜிபார் கிழக்கு ஆப்பிரிக்காவி லுள்ள பிரதேசம். இது மொத்தம் 7420 சதுரமைல்கள் விஸ்தீரண முள்ளது. அதில் ஜனத்தொகை 197000. அந்நாட்டை ஓர் சுல் தான் ஆளுகிறார். ஆனால் அந்நாடு பிரிட்டிஷ் பாதுகாப்பிற்குட் பட்ட (Protectorate) நாடு. அங்கு இந்தியர்கள் வியாபாரம் லேவாதேவி முதலியவைகள் செய்து வருகின்றனர். இந்தத் தன் மையில் அங்கு அவர்கட்கு நிலங்கரைகள் இருக்கின்றன. ஆனால் இப் பொழுது அவைகளுக்கு எல்லாம் ஆபத்து நேர்ந்துள்ளது. ஜான் ஜிபார் சர்க்கார் இந்தியர்களை பலவழியிலும் அல்லற்படுத்தி அங்கி ருந்து ஓடும்படியான சட்டங்கள் பல இயற்றியுள்ளனர். அவை களில் நிலப்பாரதீனச் சட்டமொன்று. அச்சட்டப்படி இனி அந் நாட்டில் இந்தியர்களுக்கு நிலவுரிமை கிடையாது. அதாவது இந்தி யர்கள் அங்கு நிலச்சுவான்தார்களாக இருக்கமுடியாது. அவர்கள் நிலத்தை அடமானமாக எழுதி வாங்கிக்கொண்டு கடன்கொடுத்த முறையில் அவர்கட்கு நிலத்தின்மீது எதாவது உரிமையிருந்தால், அவர்கள் அந்நிலத்தைக் கைப்பற்றி அதில்வரும் வரும்படியை இரு பதாண்டுகள் அநுபவிக்கலாம். இருபதாண்டுகட்குப் பின்னர் அந் நிலம் சொந்தக்காரருக்குப் போய்ச்சேரும். ஆனால் இந்தியர்கள் நிலத்தை ஒத்திக்கு வாங்கியிருந்தால், அவர்கள் அந்நிலத்தில் தங்கட் குள்ள உரிமையை முறையிட்டு, அதற்கு அநுபோகப்பாத்தியதை பெறவேண்டும். அந்நிலத்தையும் இருபதாண்டுகள்தான் அநுபவிக் கலாம். அதற்குள் கொடுத்த கடனுக்குச் சரியாக அதில் வருமா னம் வந்திருந்தாலும் சரி, அல்லது வாரிருந்தாலும் சரி, அந்த இருபதாண்டுகட்குப் பின் அந்நிலமும் சொந்தக்காரரைப் போய்ச் சேரும். இந்தியர்கள் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியவழியில் நிலம்வாங்கிச் நிலச்சுவான்தார்க ளாகவேண்டுமானால், அவர்கள் முன்னதாக அதற்கு அங்குள்ள பிரிட்டிஷ் ரெஸிடெண்டினிடம் அநுமதி பெறவேண்டுமாம். அந்தோ! இது எவ்வளவு கொடுமை யான சட்டம். இந்தியர் பணம் தெருவில் கண்டெடுக்கப்பட்டதோ?

அது அவர்கள் பாடுபட்டுத் தேடிய பணமல்லவோ? இப்பொழுது இச்சட்டத்தின் கொடுமையை ஜான்ஜிபார் சர்க்காரும் உணர்ந்துள்ளார்கள். எனவே அவர்கள் தாங்களே இதைப்பற்றி புதிதாய் விசாரணை செய்ய ஒரு கமிஷன் நியமித்துள்ளார்கள். அக்கமிஷன் விசாரணையின் முடிவு எப்படியாகும் என்று நாம் இந்நிலையில் எதுவும் கூற முடியாது. அவ்விசாரணையின் முடிவு வெளிவரும்வரை நாம் வாயைப் பொத்திக்கொண்டுதா னிருக்கவேண்டும்.

ஜான்ஜிபாரிலுள்ள இந்தியர்களுக்குள்ள மற்றொரு பெருங்குறை கிராம்பு வியாபாரம் சம்பந்தமானது. பல்லாண்டுகளாக இந்த வியாபாரத்தை இந்தியர்களே அந்நாட்டில் செய்து வருகின்றனர். ஆனால் இப்பொழுது ஜான்ஜிபார் சர்க்கார் 'கிராம்பு உற்பத்திக்காரர் சங்கம்' என்று ஒன்று தங்கள் ஆக்கினையினால் ஏற்படுத்தி இருக்கிறார்கள். பொதுஜனங்கள் அவ்விதம் செய்யவில்லை. இந்த வியாபாரத்தை இந்தியர் கையிலிருந்து பிடுங்கி அதை சர்க்கார் தாங்கள் ஏகபோகமாக வைத்துக்கொள்வே இவ்விதம் செய்திருக்கிறார்கள். அதற்காக அவைகளை விலையாக்குவதற்கும் ஓர் திட்டம் போட்டிருக்கிறார்கள். இதனால் அங்கு இந்தியர்கள் ஜீவிக்கவே வழியில்லாது போகிறது. அந்நாட்டில் கிராம்பு வியாபாரத்தை விருத்திசெய்து, அவ்வியாபாரத்தில் அந்நாட்டை உலகிலே முதன்மையாக நிற்கும்படிச் செய்தது இந்தியர்கள்தான். எனவே ஜான்ஜிபார் சர்க்கார் இவ்விதம் செய்வது செய்நன்றி கொல்லுவதாகும். சர்க்கார் இவ்விதம் செய்வதால் அந்த வியாபாரமும் க்ஷீணிக்கலாம். ஏனென்றால் இப்பொழுது கிராம்பு வியாபாரத்தில் மடகாஸ்கர்தீவு, பலமாய் போட்டிபோடுகிறது. எனவே இப்படிப்பட்ட நிலைமையில் ஜான்ஜிபார் சர்க்கார் இவ்விதம் செய்வது விவேகமற்ற செய்கையாகும்.

இவைபோக லேவாதேவிக்காரர் சட்டம் என்று ஒரு சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அநியாய வட்டி வாங்குவதை தடுக்கும் நோக்கத்துடன் இச்சட்டம் இயற்றப்பட்டிருந்தால் அதைப்பற்றி நாம் ஒன்றும் கூறமுடியாது. ஆனால் சட்டம் இயற்றியதின் நோக்கமதுவல்ல. இந்த லேவாதேவிக் கஷ்டங்களிலிருந்து அரபியர்களையும் ஆப்பிரிக்கா வாசிகளையும் (சுதேசிகளையும்) பாதுகாப்பதாக பாவனை காட்டி ஐரோப்பியர்கட்கு உதவி செய்வதற்காக இவ்விதம் புதை பொருளாகச் சட்டமியற்றப்பட் டிருக்கிறது. இந்தச் சட்டத்தால் இந்திய கடைவியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இப்பொழுது இந்தியர்கள் அரபியர்கட்கும் சுதேசிகட்கும் கடனுக்கு சாமான்கள் கொடுக்கின்றனர். இனி இவ்விதம்செய்ய அவர்கள் அஞ்சுவார்கள். ஏனென்றால் இந்தியர்கள் கடனுக்கு சாமான் கொடுத்ததின் விலை மிக அதிகமான தென்றோ அல்லது அநியாயமானதென்றோ கோர்ட்டார் கருதினால் அதை குறைக்க கோர்ட்

டார்கட்கு இச்சட்டம் அதிகாரம் கொடுக்கிறது. இதனல் நாம் மேலே கூறியபடி இந்தியர்கள் இனி கடனுக்கு சரக்குகள் கொடுக்க இசையமாட்டார்கள். இவ்விதம் இசையாதுபோனல் சுதேசிகளும் அரபியர்களும் ரொக்கங் கொடுத்து வாங்கவேண்டிவரும். அப்பொழுது அவர்கள் யாரிடத்தில் வாங்கினல் என்ன என்று நினைத்து ஐரோப்பியர்களிடத்திலும் வாங்கலாம். இப்படி யேற்படுமாயின் ஐரோப்பியர் வியாபாரம் சிறிது தலைதூக்குமாம். என்னே மதியீனம்! இச்சட்டத்தினல் இந்தியர்கள் பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, இப்பொழுது சகாயம் செய்வதாய் பாவனைகாட்டப்படும் சுதேசிகள் அரபியர்கள் நிலைதான் என்ன? இவர்கள் எக்காலத்திலும் ரொக்கங்கொடுத்தே சரக்குவாங்க இயலாதவர்கள். ஐரோப்பியர்களோ அவர்கட்கு கடனுக்கு சரக்குகள் கொடுக்கப் போவதில்லை. இந்தச் சட்டத்தின் பயனுக இந்தியர்களும் கடன் கொடுக்க மாட்டார்கள். எனவே, சுதேசிகளின்நிலையும் அரபியர்களையும் நிலையும் 'அரசனை நம்பி புருஷனை கைவிட்ட' தன்மைதான். இப்படியே இந்தியர்கட்கு இடையூருக பற்பல சட்டங்கள் ஜான்ஜிபார் சர்க்கார் இயற்றியுள்ளார்கள். மொத்தத்தில் இச்சட்டங்கள் எல்லாம் இந்தியர்களை பிழைக்க வழியில்லாது திண்டாடச் செய்து ஓட்டிவிட வேண்டும் என்ற நோக்கத்துடனே செய்யப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. நிலப்பாதீனச் சட்டம் ஏற்பட்டிருப்பதால் இந்தியர்கள் விவசாயிகளாக இருக்க முடியாது. 'கிராம்பு உற்பத்தியாளர் சங்கம்' என்று ஒன்று ஏற்படுத்தி அதைச் சர்க்கார் தங்கள் ஏகபோக பாத்தியதையாக ஆக்கிக் கொண்டமையாலும், லேவாதேவி சட்டம் இருப்பதாலும் அவர்கள் கொடுக்கல் வாங்கல் செய்யவும் முடியாது. ஜான்ஜிபாரிலுள்ள இந்தியர்கள் அங்கேயே நிரந்தரமாகக் குடியேறி அங்கே பிறந்து வளர்பவர்கள், கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி அந்நாட்டைச் செழிக்கச் செய்தவர்கள். எனவே அவர்கட்கு இவ்வித இடையூறு செய்வது செய்நன்றி கொல்லுவதேயாகும். இது 'கரையான் புற்றெடுக்க பாம்பு குடியிருக்கும்' என்பதுபோ லிருக்கின்றது. இவைகளுக்கு எல்லாம் பரிகாரம் வேண்டுமானல் இந்தியாவுக்கு பொறுப்பாட்சி வேண்டும். அஃதில்லாதவரை இந்தியர்கள் இவ்வாறு அல்லற்பட வேண்டியதுதான். பொறுப்பாட்சி இருந்தால் இந்திய சர்க்கார் தாங்களே நேராக எல்லாக் காரியங்களையும் செய்ய முடியும். ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஒருவரை கேட்டுத்தான் செய்யவேண்டுமென்ற நிலை இருக்காது. இந்த நிலை என்று வருகிறதோ அன்றுதான் இந்தியர்கட்கு கதிமோட்சம் ஏற்படும். எனவே தலைவர்கள் என்போர் ஒருமைப்பட்டு ஒரு முகத்துடன் உழைத்தால்தான் இதை அடைய முடியும்.

## பிரிவாற்ருமை

சென்னை மைலாப்பூர் குட்வின் கம்பனி சொந்தக்காரரும் டாக்டர் M. C. நஞ்சுண்டராவ் அவர்களின் இணைப் பிரியா தோழருமான டாக்டர் T. G. பிள்ளை என வழங்கி வந்த T. கோவிந்தராஜ பிள்ளையவர்கள் தமது 72-வது வயதில், டாக்டர் T. பாலகிருஷ்ணன், T. G. சேஷு, T. G. லோகநாத பிள்ளை, T G. சுந்திரம் பிள்ளை ஆகிய நான்கு குமாரர்களையும், அபுரூபம்மாள் என்னும் ஒரு குமாரத்தியையும், T. திருவேங்கடம் பிள்ளை, T. கிருஷ்ணசாமி பிள்ளை ஆகிய இரு சகோதரர்களையும் இன்னும் பேரன் பேத்திமார்களையும் ஆப்த நண்பர்களையும் 7—1—35ல் விட்டுப் பிரிந்து தமது சரீரத்தை நீத்தார். இவர் பிரிவு ஆற்றவொண்ணுதது. இப்பெரியார் மைசூரில் பிறந்து வளர்ந்து 45 வருடங்களுக்கு முன் தனது நண்பர் M. C. நஞ்சுண்டராவ் அவர்களோடு சென்னைக்கு வந்தார். இவர் பல பெரிய மனிதர்களின் வீட்டு வைத்தியராய் விளங்கினர். இவரிடம் நெருங்கிப் பழகிய நண்பர்களுக்கு இவர் பெருமை நன்கு விளங்கும். முகங்கோணர், இன்சொல்லாளர், பொய் பேசார், கடிந்துரையார், அன்பிற் சிறந்தார், ஆற்றல் மிக்கார், ஞானபானு, துன்பம் தெரியார், ஆனந்தமாய் வாழ்ந்தார். இவர் முடிவும் ஆனந்தமாகவே முடிந்தது. இப்பெரியார் (6—1—35) தமது இல்லத்தில் சத்சங்கம் நடத்தி வந்திருந்த சத்சங்கிகளை இரவு 9-மணிக்கு வழிவிடுத்து படுக்கைக்குச் சென்ருர். சுமார் 2-மணிக்குத் தனது மகளையும் இளைய மகனையும் எழுப்பி 'யான் சென்று வருகிறேன்' எனச் சொல்லி கண்ணை மூடிக் கொண்டார். உடனே டாக்டராய் இருக்கும் மூத்த மகன் வந்து மருந்து குத்தியும் பிரட்டியும் பார்த்து தம்மை விட்டுப் பிரிந்தார் எனத் தேர்ந்து, பிற சுற்றத்தாருக்கும் மற்றையோர்க்கும் தெரிவித்து இவரது பூதவுடலை சோதியிற் சேர்ப்பித்தனர்.

இப்பெரியார் அந்தியகாலத்தில் ஒரு பெரிய இல்லற ஞானியாய் விளங்கினர் என்பதில் ஐயமே இல்லை. ஆகவே, இவர் குடும்பத்தவரும் மற்றையோரும் இவர் படத்தை வைத்து ஆராதிப்பார்களேயானல், இவர் அடைந்ததைப்போன்ற மேலான பிரிவைப் பெறலாம்.

# வியர்த்தமான காதலுக்குப் பலி

—:o:—

[பி. என். கண்டன்]

'தேசீயக் கலாசாலை'க் கட்டிடம் பெரியதே யாயினும் மாலை நேரங்களில் விளையாட்டு நேரங்களைக் கழிக்க வசதியான இடம் அமைக்கப்படவில்லை. அதை முன்னிட்டே ராஜசேகரனும், கமலநாதனும் 'டென்னிஸ்' பந்தாட 'வில்சன்' கலாசாலைக்கு சென்று விடுவது வழக்கம். 'ராஜசேகரனும், கமலநாதனு'ம் உடலிரண்டே தவிர உயிர் ஒன்றே போன்றவர்கள். அவர்களது ஒற்றுமையைப் பார்க்கும் வேறு நண்பர்கள் வியக்கத் தக்க வகையில் அவர்கள் நடந்து கொண்டார்கள். அவர்களுக்கு 'டென்னிஸ்' பந்தாட்டப் போட்டிப் பந்தயமென்றால் எங்கு வேண்டுமாயினும் செலவைப் பொருட்படுத்தாது செல்வார்கள். 'ராஜசேகரனும் கமலநாதனும்' பி. ஏ. மாணவர்கள். 'வில்சன்' கல்லூரியில் இவர்களுக்கு எதிர்கக்ஷியில் அடிக்கடி



கமலா, சுலோசனா' என்ற இருமங்கையர் ஆடுவது வழக்கம். 'கமலாவும் சுலோசனாவும்' 'இண்டர் மீடியட்' வாசிக்கிறார்கள். 'கமலா' ஓர் நாகரீக அழகு வாய்ந்த கன்னிகை. கட்டுமஸ்தான தேகம். சிவந்தமேனி! ஒரு புறம் வகிடெடுத்து சீவிப்பின்னி தொங்க விடப்பட்ட நீண்ட கூந்தல், கண்ணுக்கு குளிர்ச்சி கண்ணாடி. அதற்கேற்ப காதில் வெள்ளைக் கல் டோலக்கும் உடுத்தி யிருக்கும் வெண்பட்டுச் சேலையும், இடது கையில் தொங்கும் கருப்புத் தோல்பையும், காலில் ஜோடும் மேன்மேலும் அவளது அழகை விருத்தி செய்தன. கமலா, ராஜசேகரனுக்கும் கமலநாதனுக்கும்

சிநேகமானுள். பந்தாட்ட விளையாட்டு முற்றி நாளடைவில் அவளுடைய வீட்டிற்கும் போகத் தலைப்பட்டார்கள். ராஜசேகரன் அவள் பேரில் முதலில் சாதாரண அன்பு வைத்தானெனினும் அது வரவர காதலாக மாறியது. அவன் அவளை சகோதரி முறையில் நடத்த முயற்சித்தும் அது முடியவில்லை. எனவே அவன் 'நான் கமலாவை காதலிக்கிறேன்' என்று தன் மனதை தைரியப்படுத்திக் கொண்டான். அதனுல் ராஜசேகரனுக்கு கமலாவை பார்ப்பதும் பேசுவதுமே ஆனந்தமாகத் தோன்றியது. 'ராஜசேகரன், 'கமலாவை' நேசிப்பது கமலநாதனுக்குத் தெரியாது. அவர்களுக்குள் நட்பு உண்டாகி ஓராண்டுக்கு மேல் ஆய்விட்டது. மூவரில் ஒருவரன்னியில் இருவர் உலாவச் செல்வதில்லை. அதிலும் கமலா யில்லாமல் வெளியில் செல்வதில்லை. கமலாவும் அவர்களன்னியில் உலாவச் செல்ல மாட்டாள்.

ஒருநாள் 'சர்க்கஸ்' பார்ப்பதற்காக 'காலேஜ் புரொபஸருடன்' மாணவர்களும் சென்ருர்கள். கமலா, ராஜசேகரன், கமலநாதன் முதலியோர்களும் சென்ருர்களென்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா? எள் விழக்கூட இட மில்லை. அல்ல அல்ல துப்பாக்கி வெடித்தால்கூட சப்தம் கேட்காது. அவ்வளவு பேரிரைச்சலும் ஜனங்களும். ஒருவாராக 9 மணிக்கு ஆட்டம் துவக்கப் பட்டது. நடிகர்கள் ஒவ்வொருவராக வந்து தங்களுக்குத் தெரிந்ததை செய்துவிட்டுச் சென்ருர்கள். பிறகு மிருகங்களின் வேலை. குதிரை யானைகளுடைய வேடிக்கை. அதன்பின் கொட்டகைக்குள்ளிருக்கும் இரும்பு கம்பிகளாலான சிறுகூண்டில் துஷ்ட ஜந்துவான 'புலி'யினுடைய வேடிக்கை. அப்பொழுது ஒரு பையன், அப்பொழுதுதான் செய்த சுண்டலை கூடையில் வைத்துக்கொண்டு சுண்டல், சுண்டல் என்று விற்க ஆரம்பித்தான். சுண்டலிலிருந்து புகையுடன் வாசனை வந்துகொண்டிருந்தது. புலியின் வேடிக்கை யாரம்பித்ததும் சுண்டல்காரப் பையன் கூட்டிற்கருகில் அமர்ந்து கொண்டான். புலி தான் செய்ய வேண்டியதைச் செய்யாமல் சுற்றிச் சுற்றி பார்த்துக் கொண்டே யிருந்தது. வேடிக்கை காட்டுபவன் அதை அடிக்கவே அது கோபத்துடன் உர், உர், என்று சப்தமிட்டுக் கொண்டே திரும்பவும் சுற்றுமுற்றும் பார்த்தது. உடனே எதிர்பாராவகையில் குப்பென்று பாய்ந்து சற்று விலகியிருந்த கம்பியின் வழியே புகுந்து சுண்டல் கூடையண்டை வந்து அதில் தன் வாயை வைத்துக் கொண்டது. அவ்வளவுதான். ஜனங்கள் மூலைக்கொருவராய் பறக்க ஆரம்பித்தனர். இரும்புக் கம்பிகளால் மோதுண்ட 'கியாஸ்லைட்டும்' உடைந்து குபு, குபுவென்று தீப்பிடிக்க கொட்டகை பற்றிக்கொண்டது. தாய்மார்கள் குழந்தைகளை தூக்குவதும் ஒருவன் மற்றவனைப் பற்றிக்கொண்டு ஓடுவதும் சிலர் கொட்டகையில் தாவுவதும் கொட்டகையினின்றும் கீழே குதிப்பதுமாக ஒரே குழப்பமுண்டாயிற்று. காலரிகளிலிருந்து இறங்குபவர்கள் வேகமாக இறங்கியதால் ஒன்றேடொன்று உருண்ட ஓசையும் கொட்டகை தீப்பிடித்து எரிவதால் உண்டான அக்கினி ஜ்வாலையும் ஜனங்களை விரட்டி யடித்தன.

ராஜசேகரன் கொட்டகையினின்றும் சிறிது தூரம் ஓடித் திரும்பிப் பார்த்தான். பின்னுல் ஓடி வருவதாக நினைத்திருந்த கமலாவைக் காணேம்; கமலநாதனையும் காணேம். 'அவர்களெல்லாம் ஓடி விட்டார்களா?' என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கு அவன் கண்டதென்ன? கமலாவின் மார்பில்

புலி காலை வைத்துக் கொண்டிருந்தது. கமலா பயத்தினல் மூர்ச்சையா யிருந்தாள். கமலாவை புலி அடிப்பதாகவே எண்ணினன். அச்சமயம் அவன் தன்னை காப்பாற்றிக் கொள்ள நினைத்தால் ஓடி விடலாம். ஆனல் அவன் அப்படிச் செய்யவில்லை. அவன் மனம் படபடத்தது. பயத்தினல நாக்குளர 'க்ரீச்' என்ற சப்தத்துடன் பாய்ந்தான். நாம் என்ன செய்கிறோமென் பதையும் மறந்து, தன்னல் புலியை எதிர்க்க யியலுமா என்பதையும், யோசியாது, தன்னிடம் இருந்த பிச்சுவாவால் புலியின் கழுத்தில் குத்தினன். அவ்வளவுதான் இவ்வளவு நேரம் சாதுவாக இருந்த புலி பெரும் சப்தத்துடன் பாய்ந்து ராஜசேகரனைப் பிராண்டிற்று. மறுபடியும் 'புலி'யை குத்தினன். புலி அவனது கரத்தைக் கடித்தது. அதனது கோபம் உச்ச நிலையை அடைந்தது போலும். புலியும் ராஜசேகரனும் ஐந்து நிமிடம் போர் புரிந்தனர். ராஜுவின் மேலெல்லாம் ரத்தம் வடிகிறது. அவனது மனம் சோர்வுற்றது. அவனல் முழுப் பலத்துடனும் சண்டை செய்ய இயல வில்லை. இம்மாதிரி இருக்கையில் கொட்டகையின் தீ கொழுந்துவிட்டு அகோரமாக எரிந்துகொண்டே இவர்களுக்கு சமீபம் வந்தது. 'தன்னல் இனி முடியாது' என்று நினைத்தான். அப்படி நினைத்த மாத்திரத்திலேயே தன் முழுப் பலத்தையும் இழந்தான். அச்சமயம் டப், டப் என்று இரு சப்தங்கள் கேட்டன. அவர்கள் இருந்த இடத்தில் புகை சூழ்ந்து கொண்டது. ராஜசேகரன் மூர்ச்சையானன். புலி எகிரி பாய்ந்தது. மறுபடியும் டப், டப், டப்டப் என்று நான்கு முறைகள் சப்தம் கேட்டது. புலி சாய்ந்து கால்களால் உதைத்துக் கொண்டே பெரும் பயங்கர சப்தத்துடன் ஓய்ந்தது. மறுநிமிடம் 'கமலநாதன் மூர்ச்சையா யிருந்த கமலாவையும் ராஜசேகரனையும் இருகரங் களிலும் யிடுக்கிக் கொண்டு தீயின் வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு கொட்டகையினின்றும் வெளியேறினன். ஆ என்னே அவர்களது தீரச் செயல்! என்னே அவர்களது நட்பின் பெருமை! கமலநாதன் அவர்களை தூக்கிக் கொண்டே கொஞ்சதூரம் வந்து படுக்க வைத்தான். அங்கு ஓடிக் கொண்டிருந்த ஜனங்களெல்லோரும் புலி இறந்ததெனக் கேட்டதும் தீயணைக்க முயற்சித்தனர். கமலநாதன் உடனே ஒரு டாக்ஸியை கூப்பிட்டு அதில் இருவரையும் வைத்து ஒரு பார்மஸிக்கு கொண்டு சென்றான்.

டாகடர் கமலாவைப் பரிசோதித்தார். 'அவள் பயத்தினல் மூர்ச்சையாயிருப் பதாகவும் கூடியசீக்கிரம் தெளியக்கூடுமென்றும்' சொல்லி ஏதோ மருந்தை உள்ளுக்குக் கொடுத்தார். சிறிது மூக்கிலும் தடவினர். உடனே ராஜ சேகரனை பரிசோதித்தார். 'அவனுக்கு பல இடங்களில் காய மேற்பட்டதால் ரத்தம் அதிகம் சிந்திவிட்டதாகவும், ஆத்திரத்தினல் ரத்தக் கொதிப்பெடுத்து நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், அவனது நிலைமை அபாயகரமான தென்றும் தன்னல் கூடியவரையில் முயற்சி செய்து பார்ப்பதாகவும் தெரிவித் தார். டாக்டர் அவனுக்கு சக்தியை உண்டாக்கக்கூடிய மருந்தை உள்ளுக்குக் கொடுத்துக் காயங்களைக் கழுவித் தக்க மருந்தைத் தடவினர்.

கமலநாதன் எண்ணுததெல்லா மெண்ணி ஏங்கினன். அவனுக்கு நித்திரை வரவேயில்லை. டாக்டர் எவ்வளவு தேற்றியும் அவன் மனம் நிம்மதி யடைய வில்லை. நடுநிசியானபின்பும் கமலநாதன் படுத்துக்கொள்ள வில்லை. அதற்குப் பின் நெடுநேரமானபின் கமலா 'ஐயையோ புலி, புலி என்று கத்தவாரம்

பித்தாள். உடனே கமலநாதன் அவளருகில் ஓடி 'ஒன்றுமில்லை; ஒன்று மில்லை. புலி எங்கே? அதெல்லாம் ஓடிவிட்டது பயப்படாதே' என்றான். கமலா பயத்தினால் கூச்சலிட்டுக்கொண்டே அவனை இருக அணைத்துக்கொண் டாள். தன்னை மறந்து ஐந்து நிமிடங்கள் அப்படியே இருந்து விட்டாள். பிறகு புலி அங்கில்லை யென்றும், தான் இருப்பது வேறு இடம் என்றுமறிந்த தும்-பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு வந்து சிறிது தாக்கவே தன்னால் இருக அணைக்கப்பட்டது ஒரு வாலிபனெனக் கண்டதும், சிறிது விலகினாள். கமலநாதனும் சற்று விலகி அவளுக் கெதிரிலுள்ள நாற்காலியில் அமர்ந்தான். பின்னும் அவள் கமலநாதனைப் பார்த்து 'நான் புலிக்கடியி லல்லவோ கிடந்தேன். நான் புலியால் அடிக்கப்படவில்லையா? இது யாருடைய வீடு, நான் இங்கு எப்படி வந்தேன்.' (பின்பக்கம் திரும்பி) 'ஐயோ! இங்கே யார் படுத்திருப்பது? அவருக்கென்ன அவ்வளவு கட்டுகள். இது ஆஸ்பத்திரியா? நான் ஏன் இங்கிருக்கவேண்டும்? எனக்கென்ன உடம்பு? என்று இம்மாதிரி அவள் தன்னையு மறியாமல் பிதற்றினாள். மறுபடியும் கமல நாதனைப் பார்த்து 'நீ யார்? ஏன் என் எதிரில் உட்கார்ந்திருக்கிறாய்? நீ தான் டாக்டரா? சரி, சரி' என்று எழுந்து நடக்கலானாள். உடனே கமலநாதன் அவளைப் பிடித்து உட்காரவைத்து 'கமலா என்ன இப்படி உளறுகிறாய். நான் யாரென்று உனக்குத் தெரியாதா? இதோ டாக்டர் வருவார். டாக்டர் சார்..................'

'என்னை எப்படி நீ தொடலாமா? என்னை கமலா என்று கூப்பிடுகி றாயே. நான் கமலாவா? டாக்டரையா கூப்பிட்டாய். நீதான் டாக்டரென்று நினைத்தேன். நீயேன் என்னைத் தடுக்கிறாய்?'

'கமலா உட்கார். நான் உன் நண்பன் கமலநாதனல்லவா.'

'ஆ நீ எனக்கு நண்பனா! ஹா! ஹா! ஹா! நான் தான் கமலா என்று எப் படித் தெரிந்து கொண்டாய்?' என்றாள். அதற்குள் டாக்டர்வந்து 'இது என்ன நான் எதிர்பாரா வகையில் பிதற்ற ஆரம்பித்துவிட்டாள்- சரி அதைப்பற்றி பயம் வேண்டாம். இந்த மருந்தைக் கொடுத்தால் எல்லாம் சரியாய் விடும்' என்று ஏதோ மருந்தை கமலாவிடம் கொண்டுபோனார்.

உடனே கமலா, 'டாக்டருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அதைப் பற்றி பயம் வேண்டாம். இந்த மருந்தைக் கொடுத்தால் எல்லாம் சரியாய் விடும். டாக்டரே இம்மருந்தை நீரே குடியும். சீக்கிரம் குடித்துவிடும்; இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்துவிடு வேன்' என்றாள். கமலநாதனும் டாக்டரும் அவளுக்கு பலவந்தமாக மருந்தைப் புகட்டினார்கள். மருந்து குடித்த சிலநிமிடங்களில் மயக்கமாய் படுத்துக்கொண் டாள். மறுபடியும் டாக்டர் ராஜசேகரனிடம் போய் உட்கார்ந்து கொண்டார்.

பொழுது புலர்ந்து பகலானதும் கமலா சிறிது சிறிதாகக் கண்விழித்தாள். ஆனால் அவள் ஒன்றும் பேசவில்லை. அவளுக்கு சிறிது ஆகாரம் கொடுக்கப் பட்டது. ராஜசேகரனுக்கு சத்துள்ள ஆகாரமாக சிறிது கொடுத்தார்கள். அன்றெல்லாம் கலாசாலை மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து கமலாவை யும் ராஜசேகரனையும் பார்த்துவிட்டுச் சென்றனர். மறுநாள் கமலா தன் சுய

உணர்வை யடையப்பெற்ருள். அன்றும் அவள் ஒன்றும் பேசவில்லை. அன்று டாக்டர் கமலநாதனிடம் தான் எதிர்பார்த்தபடி ராஜசேகரனுக்கு ஜன்னி வரவில்லை யென்றும், இனி பயமில்லை யென்றும் தெரிவித்தார். அப்பொழுது தான் கமலநாதன் முகம் மலர்ந்ததெனக் கூறலாம். அன்று ராஜசேகரன் கண் விழித்து தன் சுய உணர்வை யடையப் பெற்ருன். அவன் திடீரென்று சுய உணர்வை யடையப்பெற்ருல் பயத்தினுல் உடம்பு நடுநடுங்கி அபாயமாக முடியுமென்று டாக்டரே அவனுக்கு மயக்க மருந்தைக் கொடுத்துவிட்டார். அதற்கடுத்தநாள் கமலா பூரண சுகமடைந்தாள். அவள் முதல் நாள் செய்ததுபோலல்லாது எல்லாம் தெரிந்தவள்போல் 'ராஜசேகரனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது' என்று வினவ ஆரம்பித்தாள். பிறகு கொஞ்சநாளில் டாக்டரின் சிறந்த மருந்துகளாலும், கமலா, கமலநாதன் முதலியோருடைய ஒத்துழைப்பாலும் ராஜசேகரன் பூரணசுகமடைந்தான்.

ராஜசேகரன்:—(கமலநாதனைப் பார்த்து) நாங்களிருவரும் புலியிடம் அகப்பட்டுக்கொண்டோமே 'நீ எப்படி அங்குவந்து எங்களைக் காப்பாற்றினுய்' என்ருன்.

கமலநாதன்:—பையன்களுக்குப் பின்னுல் புரபசரும் அவருக்குப் பின்னுல் நானும் ஓடினேம். எனக்குப் பின்னுல் நீயும் கமலாவும் வருவதாக எண்ணி யிருந்தேன். கொஞ்சதூரம் ஓடினதும் புரபசருடைய கைத்துப்பாக்கி கீழே விழுந்தது. அதை அவர் கவனிக்காமல் ஓடிக்கொண்டிருந்தார். நான் அதை குனிந்து எடுக்கும் பொழுது திரும்பிப் பார்த்தேன். உங்களிருவரையும் காணேம். என் கையில் துப்பாக்கி யிருப்பதால் கொஞ்சத்தூரம் வந்து பார்த்தேன். திரைச்சீலை எரிந்துகொண்டிருந்த வெளிச்சத்தில் நீயும் புலியும் சண்டை செய்வது தெரிந்தது. தைரியமாக ஓடிவந்தேன். உன்மேலெல்லாம் ரத்தம். அப்பொழுது நீயும் கீழே விழுந்தாய். உடனே புலியை குறிவைத்து இருமுறை சுட்டேன். புலி என்மேல் பாய்ந்தது. நான் மறுபடியும் இருந்த நான்கு குண்டுகளையும் தீர்த்தேன். அப்பொழுதுதான் புலி இறந்தது. பிறகு நான் உங்களை பார்மஸிக்கு கொண்டுவந்தேன்' என்று அதன்பின் நடந்த எல்லா விபரங்களையும் சொன்னுன்.

அன்று கலாசாலை மாணவர்கள் ராஜசேகரனும் கமலாவும் பெரும் விபத்தினின்றும் தப்பினதை முன்னிட்டு விருந்து ஒன்று நடத்தினுர்கள்.

ராஜசேகரனுக்கு உடம்பு சரியாயில்லை. எனவே அவன் கலாசாலை விடுமுன் வீட்டுக்குச் சென்றுவிட்டான். கலாசாலை விடுவதற்கு சிறிது நேர மிருக்கையில் உடம்பு கொஞ்சம் சுமாராகத் தோன்றியதால் கமலாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். கமலா அப்பொழுதுதான் வீட்டினுள் நுழைந்தாள்.

ராஜசேகரன்:—'இன்னும் கமலநாதன் வரவில்லையா' என்ருன்.

கமலா:—தங்களுக்கு உடம்புசரி யின்மையால் தாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டதாயும், ஆதலால் தானும் உலாவ வரமுடியாதென்றும் வீட்டிற்கு சென்றுவிட்டார். தங்களுக்கு உடம்பு தேவலையா?

ராஜ:—முதலில் கொஞ்சம் தலைவலியா யிருந்தது. இப்பொழுது சற்றுச் சுகம். கமலநாதனையும் வரச்சொல்லு' என்றான். கமலா டெலிபோனில் பேசின பிறகு 'நாம் போகலாம்' என்றாள். எப்பொழுது தன் காதலைத் தனிமையில் தெரிவிப்போமென ஏங்கியிருக்கும் ராஜசேகரன் இதையோர் அரிய சந்தர்ப்பமாக எண்ணிப் புறப்பட்டான். இருவரும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டேவந்து ஏரிக்கரையி லமர்ந்தனர். அவர்களுடைய கால்களிரண்டும் தண்ணீரில் நின்றன. மாலைநேர வெயிலானது தண்ணீரில் தங்கத்தை உருக்கி வார்த்ததுபோல் மின்னிற்று.

கமலா:—தாங்கள் ஒருத்தியைக் காதலிக்கிறீர்கள்.........' இவ்வெதிர்பாரா வார்த்தையானது ராஜசேகரனுக்கு ஒருவித பயங்கரத்தையும் ஆனந்தத்தையும் உண்டுபண்ணிற்று.

ராஜ:—என்ன?

கமலா:—தாங்கள் ஒரு பெண்ணை காதலிக்கிறீர்கள். தாங்கள் காதல் ஒருதலைப்பட்ட காதலாக மாறிவிடின் தாங்கள் என்ன செய்வீர்கள் ?

ராஜசேகரன் திடுக்கிட்டான். கமலாவின் கேள்விகள் அவனை அற்புத சாகரத்தில் மூழ்கச்செய்தன. அவள் கேட்கும் காதலைப்பற்றிய இக்கேள்வி ராஜசேகரனுக்கு கூச்சத்தையும் விநோதத்தையும் தந்தது.

ராஜசேகரன்:—என்பேரில் அவளுக்கு ஆசை! அன்பு ஏற்படும்படி நான் நடந்துகொள்வேன். அவளை.........' கமலா சிறித்தாள். அந்த அர்த்தமற்ற அச்சிரிப்பு ராஜசேகரனது நாக்கை மேலே பேசவொட்டாமல் தடுத்தது. 'ஆம். தாங்கள் அப்படிச் செய்தும் வேறொருவனைக் காதலித்தால்.........' 'அப்படி நேருமாயின் காதலிக்கப்படும் வாலிபன் பாக்கியவா னென்றும் நான்.........'

அவ்வளவுதான்போலும். 'தங்களைப்போல் எல்லோரு மிருந்தால் உலகில் துன்பங்கள் ஒழியும். நான் என் மனதை வெளியிட்டுக் கூறுகிறேன். நான் மனப்பூர்வமாக ஒருவரைக் காதலிக்கிறேன்.'

ராஜ:—'அவன் மிக்க அதிர்ஷ்டவான்' என்றான். அவன் மனம் சொல்ல முடியாத நிலையிலிருந்தது. மேலே அவள் கூறப்போவதை ஆவலுடன் எதிர்நோக்கினான். அடுத்த வார்த்தையைக் கண்டு அவளது அதரங்களை முத்தமிட எண்ணினான்.

கமலா:—அவரும் என்னைக் காதலிக்கிறார். என் காதலர் யார் என்று தங்களுக்குத் தெரியுமா?

ராஜ:—'எனக்குத் தெரியும்' என்று புன்னகைசெய்து அவளை கட்டித் தழுவி முத்தமிட தன்னைத் தைரியப் படுத்திக்கொண்டான்.

கமலா:—அப்படியானால் இந்த மோதிரம் யாருடையதோ, அதில் செதுக்கப்பட்டிருக்கும் பெயர் யாருடையதோ, அவர்தான் என் காதலர், எங்கே அவரது பெயரைக் கூறுங்கள் பார்க்கலாம்.

மோதிரத்தை வாங்கியதும் அவன் தலை சுழன்றது; உதிரம் உறைந்தது. உலகமே அந்தகார மானதுபோல் உணர்ச்சி உண்டாயிற்று. அவன் பெயர் 'க...ம...ல...நாத...ன்' என்றான். குகைக்குள்ளிருந்து பேசுபவன்போலிருந்தது அவன் குரல். அதற்குள் கமலநாதன் வந்தான். ராஜசேகரனால் அதற்குமேல் அங்கிருக்க இயலவில்லை. மூவரும் வீடு திரும்பினர்; கமலாவை அவளது வீட்டில் விடுத்து இருவரும் அவர்களுடைய இல்லம் ஏகினர்.

ராஜசேகரனால் அன்று சரியாகச் சாப்பிட முடியவில்லை. அவனது மனம் சொல்ல முடியாத வேதனையிலிருந்தது. சரியான நித்திரையில்லை; பொழுதும் புலர்ந்தது. அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருந்தானே தவிர அவனது மனம் வேறொன்றிலும் செல்லவில்லை. அன்றுமாலை வழக்கம்போல் உலாவச் சென்றனர். ஏரிக்கரைமேல் அமர்ந்தனர்; ராஜசேகரன் கமலாவை தனியே விடுத்து கமலநாதனைச் சிறிது தூரம் அழைத்துச் சென்றான்.

ராஜ:—நண்பனே நான் உன்னை உள்ளன்புடன் நேசித்தேன்.........

கமல:—ஆனால் இப்பொழுது?

ராஜ:—ஆனால், ஆனால் சொல்கிறேன் கேள். என் ஆருயிர் நண்பனே, கமலா உன்னைக் காதலிக்கிறாள். நீயும் அவளை உள்ளன்புடன் நேசிக்கிறாய். நீங்கள் கலியாணம் செய்துகொண்டு சுகமே...............

கமல:—உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?

ராஜ:—அல்ல, நான் கமலாவை உள்ளன்புடன் காதலித்தேன். அவளும் என்னை காதலிப்பதாகவே எண்ணி யிருந்தேன். ஆனால்...ஆனால்...என் காதல் வியர்த்தமானது. இனிமேல் என்னால் சகோதர முறையில் நடத்த இயலாது. நான் உலகில் உள்ளளவும் அவளது நினைவில்லாமல் இருக்க இயலாது. ஒன்று எனக்கு கிட்டாதெனத் தெரிந்தும் நான் அதன்மேல் அவாக் கொண்டு உலகில் வாழ்வதைவிட இறப்பதே.........' அவன் நாக்கு தடுமாறிற்று. அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தான். கமலநாதன் கண்களில் நீர் பெருகிற்று. அவன் மூக்கில் கைவைத்துப் பார்த்தான். மூச்சு வருவதாக தெரியவில்லை. உடனே நல்ல காற்றுப் படுவதற்காக அவன் சட்டையை கழற்றினான். சட்டைப்பையிலிருந்து ஒரு சிறு பாட்டில் கீழே விழுந்தது. அதை எடுத்துக் கூர்ந்து கவனித்தான். அவனது விழிகள் பிதுங்கிவிடும்போலிருந்தன. 'ஹா' என்று தலையிலடித்துக்கொண்டு கீழே விழுந்தான். அச் சிறு புட்டியின்மேல் 'விஷம்' என்று எழுதியிருந்தது. கமலநாதன் அந்தப் புட்டியைத் திறந்தான். இரண்டொரு சொட்டு அவன் வாயில் விழுந்தது. 'ஓ! நண்பனே நீமட்டும் என்னை விட்டு ஓடிவிட்டதாக எண்ணிக் கொண்டாயோ? நீ ஓர் நண்பனுக்காக இறந்தாய். உன் காதல் மட்டும் வியர்த்தமான காதலல்ல. என் காதலும் வியர்த்தமான காதல்தான்' என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே அவன் தலை கீழே சாய்ந்தது.

கமலா ஓடிவந்தாள்; இதைக் கண்ணுற்றதும் அவள் தலை கிறுகிறுத்தது. 'நான் என் காதலைப்பற்றி தெரிவிக்கும்பொழுதே இதில் விசேடமுண்டென்று நினைத்தேன். ஹே! நண்பர்களே! நீங்கள் உண்மை நட்புக்காகவும் காதலுக்காகவும் உயிர்விட்டீர்கள். என் உண்மைக் காதலரே! நீர் இறந்த பிறகும் நான் உலகில் வேருசுகத்தை அனுபவிக்க இயலுமோ? என் ஆருயிர் காத

லரே! நாம் உண்மையாக நேசித்திருப்போமாயின் புது உலகத்திலேனும் நாம் சுகம் பெறுவோம். தற்பொழுது என் காதல் வியர்த்தமான காதலாக முடியினும் மறுஜன்மத்திலேனும் நமது காதல் கைகூடும்.........' கமலநாதன் கையிலிருந்த புட்டி இவள் கரத்தில் தென்பட்டது. புட்டியிலுள்ள விஷத்தைப் பருகினுள். சாய்ந்தாள்; அவள் கரம் கமலநாதன்மேல் விழுந்தது.

நேரம் ஆக ஆக காற்று ஜில்லென்று வீச ஆரம்பித்தது. ராஜசேகரன் புரண்டான்; அலறி அடித்துக்கொண்டு எழுந்தான்; தனக்கெதிரில் இரண்டு பிணங்கள் இருந்தன. இக்கோரக் காக்ஷி அவனை திக்பிரமை யடையச் செய்தது. அவன் சட்டைப் பைக்குள் கைவைத்தான். விஷமருந்து இருந்த புட்டியைக் காணும். 'ஹா என் நண்பனே! என் ஆயுட்காலம்கிட்டிற்று. ஆனல் நான் இறப்பதற்கு முன் இறந்துவிட்டதாக எண்ணிக் கொண்டாய். நான் இறப்பதற்கு கொண்டுவந்திருந்த விஷம் உங்கள் உயிர்களைக் கொன்றது. ஏ! கருத்தொருமித்த காதலர்களே! உங்கள் ஆத்மா சாந்தி யடையட்டும்' ராஜசேகரன் கரம் மடியிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்தது. கைத்துப்பாக்கி அவன் மார்பில் படிந்தது. குண்டு ஊடுருவிப் பாய்ந்தது.



## மதிப்புரை

"தாருல் இஸ்லாம்" கம்பெனியாரால் வெளியிடப்பட்டிருக்கும் "காதற் பொறுமையா அல்லது பொறுமைக் காதலா" என்ற நாவல் ஒன்று வரப்பெற்ருேம். அதில் இடை இடையே சில உண்மையாக நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளும், சிந்திக்கத்தக்க கருத்துக்களும் காணப்படுகின்றன. பரபரப்பை கொடுக்கக்கூடிய சம்பவங்களும், திடுக்கிடச் செய்யும் நிகழ்ச்சிகளும் நிறைந்திருக்கின்றன. இது படிப்போர் மனதைக் கவரும் தன்மையதாயிருக்கிறது. இதன் ஆசிரியர் திரு வி. என். ரங்கஸ்வாமி அய்யங்கார். வேண்டுவோர் 'தாருல் இஸ்லாம்' கம்பெனி லிமிடெட், 158-13 பிராட்வே, சென்னை. என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இது 456 பக்கங்களை கொண்டதாயிருக்கிறது. இதன்விலை ரூபா 1-8-0.

டைரிவரவு:—திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் (லிமிடெட், 6, பவழக்காரத்தெரு, சென்னை) வெளியிட்டிருக்கும் திருக்குறள் டைரி ஒன்று வரப்பெற்ருேம். இது முதியோர்களுக்கும், பள்ளிமாணவர்கட்கும் பெரிதும் பயன்படக்கூடியதா யிருக்கிறது. இதன் விலை அணு ஆறே,

# ஒற்றுமை முரசு

[சாமி சிதம்பரனார்]

பல்லவி.

கொட்டு முரசே வெற்றி கொட்டு முரசே!
குவலயம் ஒன்று கூடி விட்ட தென்றே (கொ)

சரணங்கள்.

1. மாநிலத்திற் சாதிபேதம் கூறி நிற்போர்
மடையர்அவர் வாழ்வுபோகக் கொட்டு முரசே!
தீநினைப்புக் கொண்டவர்கள் செய்கை மாயத்
தீர்த்துவெற்றிக் கூத்திடுவோம் கொட்டு முரசே! (கொ)

2. நான்குசாதி மக்களுக்குள் நாட்டி வைத்தார்;
நாலாயிரம் ஆகியவை கூடி னவே.
நான்குடனே நாலாயிரம் சாதி மாய்ந்தே
நாசமாயிற் றென்று சொல்லிக் கொட்டு முரசே! (கொ)

3. தோல்வருணம் தட்பவெப்ப பேதத் தாலே
தோன்றுமென்று கூறுவதே உண்மை யாகும்;
மேல்வருணம் கீழ்வருணம் இல்லை; ஒன்றே
மேவுகின்ற மக்கள் என்று கொட்டு முரசே! (கொ)

4. உணவுகொள்ளும் தானியங்கள் உண்டு பண்ணும்
உத்தமர்கள் வாழ்கவென்று கொட்டு முரசே!
பணம் பறித்துத் துன்பமின்றி வாழும் சோம்பர்
பாழடைந்து வீழ்கவென்று கொட்டு முரசே! (கொ)

---

பதிப்புரிமை ஆசிரியர்க் குரியது.

5. சாதிசொல்லும் சாத்திரங்கள் போக வென்றே
சாற்றிநின்று வெற்றியென்று கொட்டு முரசே!
நீதியற்றோர் சாதிபேதம் சொல்லி நிற்பார்
நீசர் அவர் மாய்கவென்று கொட்டு முரசே! (கொ)

6. மேற்குலத்தார் என்பவர்க்குள் மூடர் இலையோ?
மேதையர்கள் கீழ்க்குலத்தில் தோன்றல் இலையோ?
ஏற்கும்அறி வோடுதீரம் ஊக்கம் எல்லாம்
ஆர்க்கும்பொது என்றுகூறிக் கொட்டு முரசே! (கொ)

7. மாநிலமும் தாழ்ந்தவரைத் தாங்க விலையோ?
மாரிவளம் கீழவர்க்குப் பெய்தல் இலையோ?
மேனிலையர் என்பார்க்கிவை வேறும் உளவோ?
மேலும் இல்லை கீழும் இல்லை கொட்டு முரசே! (கொ)

8. பசிபிணிகள் தூக்கம்இவை யாவ ரிடமும்
பண்பெனவே நின்றிடுதல் பார்த்தி லீரோ?
நசிக்க வஞ்சர் கட்டிவைத்த சாதிபேதம்
காட்டினின்றும் ஓடவென்று கொட்டு முரசே! (கொ)

9. கலப்புமணம் ஓங்கவென்று கொட்டு முரசே!
காதல்மணம் வாழ்கவென்று கொட்டு முரசே!
பலத்தசாதி பேதம்போகக் கொட்டு முரசே!
பாரில்யாரும் ஒன்றுசேரக் கொட்டு முரசே! (கொ)

10. சாதிபோயின் நீதிஓங்கும் என்று முரசே!
சப்தமிட்டு வெற்றியுடன் கொட்டு முரசே!
வாதனைகள் நீங்கிபெரும் இன்ப மோடே
வாழ்ந்திருப்பர் மாந்தர்என்று கொட்டு முரசே! (கொ)

# வெளி விகடம்

மனேவி:—தங்கள் மீது எனக்கு என்ன அன்பு தெரியுமா?

கணவன்:—ஓ! தெரியும். எனக்கு சம்பளத்தேதி நெருங்கி வருகிறதல்லவா?

—வி. லோகநாதம்

கிழவர்:-பேரா, நீ சிங்கத்தைக் கண்டால் 30 அடி தூரத்திலும், புலியைக் கண்டால் 20 அடி தூரத்திலும், யானேயைக் கண்டால் 10 அடி தூரத்திலும் இருக்கவேணும், காதில் நுழைகிறதா?

பேரன்:—தாத்தா யானே பெரிய ஜந்துவாயிற்றே, என் காதில் எப்படி நுழையும்.

—சி. கண்ணு

---



நேத்திராத்திரி முழுவதும் கொஞ்சங்கூட தூக்கமே கிடையாது.

ரொம்ப வேலேபோலிருக்கிறது. பத்திரிகைக்கு ஏதேனும் கட்டுரை எழுதிக்கொண்டிருந்தீரா?

இல்லே சார். மூட்டைப்பூச்சி கடின்னு!

—N S. வேங்கடராமன்

---

கல்யாணி:—சாலே விநாயகரே! உனக்குப் பாலபிஷேகம் பண்ணிக் கொழுக்கட்டை நைவேத்தியம் பண்றேன். கொஞ்சம் மனசு வச்சு எனக்குக் கணக்கிலே நாற்பது மார்க்கு வாங்கிக் கொடுத்துடு.

பார்வதி:—என்னடீ! வழக்கமில்லா வழக்கமா பிள்ளேயாரைப் பிரமாதமா வேண்டறே?

கல்யாணி:—இல்லே மாமி! கணக்கு ஒண்ணுகூட ரைட்டாய் போடல்லே! அதற்காத்தான் வேண்டிண்டேன்.

—திருவை கே. வைத்தியநாதன்

சோமாஸ்கந்தன்:—(மூன்றுவயது பையன்) தாத்தா! நீ அங்கேயே நின்றுகொண்டிரு; நான் எப்படியாவது ஒரே ஓட்டத்தில் ஓடிவந்து உன் முதுகின்மீதேறி உன் தலையை மிதித்துவிடுகிறேன்.

தாத்தா:—(நகைத்து) 'எங்கே பார்க்கலாம்' இப்பொழுது சூரியோதயமாய் ஒரு ஜாமமாகிறது. இளவெயில் வீசுகிறது.

'இதோதாத்தா! இதோ'—என்று ஓடிவந்து அவர் நிழலின் முதுகில் கால்வைத்துப் பிறகு தலையில் கால்வைத்து நின்று 'இதோ மிதித்துவிட்டேன்! இதோ பார்!' என்று கூறி நகைத்தான்.

—சி. எம். ராமமூர்த்தி




தகப்பனார்:— என்டா பரீக்ஷை கேள்வியெல்லாம் சுலபம்தானே, நன்றாக பதில் எழுதியிருக்கிறாயா?

பிள்ளை:— கேள்வியெல்லாம் ரொம்ப சுலபம் அப்பா. ஆனால் பதில் எழுதுவதுதான் கஷ்டமாயிருந்தது.

—எம். சுப்பிரமணியம்

நோயாளி:—(ஆங்கிலேய வைத்தியரை நோக்கி) ஐயா, தலை நோவாயிருக்கிறது.

ஆ-வைத்தியர்:—எஸ், ஏடேக்.

நோயாளி:—இடக்கில்லையா, வாஸ்த்தவம்தான்.

—ஸ்ரீமதி பி. எஸ். சிவபாக்கியம்

காதலன்:—கண்ணே, நான் உன்னை அடையாவிட்டால் என் உயிரை விட்டுவிடுவேன்.

காதலி:—விஷத்தைத் தின்றா?

காதலன்:—ஆம்.

காதலி:—அப்படியானால் என் தமையன் மருந்துக் கடையில் வீரத்தை வாங்கித்தின்று என்மேலிருக்கும் காதலை நிரூபியுங்கள், பார்க்கலாம்.

—ஆர். தயாநிதி

உபாத்தியாயர்:—(ரிஜிஸ்ட்டரை வைத்துக்கொண்டு) வந்தவர்கள் பிரசன்ட் என்று சொல்லித் தொலையுங்கள்.

மாணவன்:—எங்களிடத்தில் ஒன்றுமில்லே. நாங்கள் உங்களுக்கு என்ன பிரசன்ட் செய்வது. நீங்கள்தான் நேற்று இல்லாததைப் பேசவே கூடாது என்று சொன்னீர்களல்லவா?

—ஸ்ரீமதி எம். எஸ். தேவசுந்தரி

கிட்டு:—இன்று இரவு 8 மணிக்குள் 100 ரூபா கிடைக்காவிட்டால் நான் இறக்கவேண்டியதுதான். எனக்கு உதவி செய்வாயா?

குப்பு:—நான் என்ன செய்வேன், என்னிடத்தில் விஷம் கிடையாதே.

—சி. மதுரை

புருஷன்:—நானுக அநேக முட்டாள்தனமான காரியங்களைச் செய்துகொண்டேன்.

வாயாடி மனைவி:—எங்கே நீர் செய்த முட்டாள் காரியங்களில் ஒன்றைச் சொல்லி விரலை விடும்.

புரு:—முதலில் உன்னை மணந்தது.

—K. S. N. முத்து

கோவிலன் நாடகத்தில் அவனும் மனைவியும் ஒரே சோபாவில் உட்கார்ந்து வெத்திலை போட்டுக்கொள்கிறார்கள்.

தகப்பன்:—அடே ராமா தூங்கிவிடாதே, கவனித்துக்கொள்.

ராமு.—அப்பா நேற்று நீங்க ஆபீஸுக்குப் போயிருக்கச்சே அம்மாவும் அடுத்தவீட்டு நாயுடுவும் இதேமாதிரி நம்ப ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்கள். நோக்குத் தெரியுமோ?

—சி. டி. வேலு

* * *

தன்பாட்டனுக்கு நூறு வயதென்று ஒருவன் ஜம்பம் சொல்லிக்கொள்ள அதைகேட்ட வேறொருவன் என்பாட்டன் பிழைத்திருக்கும் பட்சத்தில் நூற்றைம்பது (150) வயது என்று சொன்னான்.

—கே. காசி

குழந்தை அழும் சப்தத்தைக் கேட்ட ஓவர்ஸியர் சேவகனைப் பார்த்து அடேட் கோவிந்தசாமி, குழந்தையை தூக்காமல் உலக்கை மாதிரி நிற்கிறாயே.

கோ:—எஜமான், இந்நேரமா ஸ்ரீரங்கத்தில் உலக்கை பிடிச்ச கணக்கா கையிலேயே வைத்திருந்தேனுங்க. இப்பதான் அம்மா கிட்டே குடுத்தேனுங்க. —சி. டி. வேலு

உபாத்தியாயர் (பூகோள சாஸ்திரத்தை நடத்திக்கொண்டிரும் பொழுது):—பையன்களே, நாம் படுத்துக்கொள்ளப் போகும்போது தான் அமெரிக்காதேசத்து ஜனங்கள் எழுந்திருக்கிறார்கள்.

ஒரு பையன்:—சோம்பேறித் தடியர்கள் சார்.

—எம். எஸ். கமாலுதீன்

கதர் அபிமானி:—ஏனப்பா! கள் குடிக்கும் காசைக்கொண்டு ஒரு கதர் வேஷ்டி வாங்கிக்கட்டிக்கொள்ளக் கூடாதோ?

கள் குடியன்:—ஏனய்யா ரண்டணாவுக்கு சோகமான கள்ளுக் கெடக்குதே: அந்த விலைக்கு அது குடுப்பாங்களா சாமி.

—எம். சுப்பிரமணியம்

நீதிபதி:—உனக்கென்ன வயது.

சாக்ஷி:—25 வயது.

நீதிபதி:—உண்மைசொல். போனவருஷம்கூட அதேதான் சொன்னாய்.

சாக்ஷி:—ஆமாம்! ஒரு தடவை சொன்னதை திருத்தி பொய் சொல்லும் வழக்கம் என்னிடம் இல்லை. —கே. காசி

வக்கீல் தனது கட்சிக்காரனிடம் ஒரு தந்திப் பாரத்தில் எழுதிக் கொடுத்து, பணத்தை கட்டி தந்தி அடித்துவரச் சொன்னார். அவன் பணத்தை அந்த பாரத்தில் சுற்றிகட்டி அருகிலிருந்த தந்திக்கம்பி மரத்தில் கட்டி தன் கையிலிருந்த தடியால் ஓங்கி யடித்தான்.

—எஸ். என். திருவிக்ரமன்

# களிப்பும் நகைப்பும்

[திருவையாறு கே. வைத்தியநாதன்]

மக்கள் உள்ளத்தெழும் ஒருவித இன்ப உணர்ச்சியே களிப்பாம். அக்களிப்பு காரணமாக முகத்தே தோன்றும் ஒருவித மாறுதலே நகைப்பாகும். உள்ளத்திலெழும் உணர்ச்சியலைகள் உடல் முழுதும் மோதுகின்றன. ஆயினும் முகம் மட்டும் அவ்வலைகளால் பலரும் காணத் தக்க புறமாறுதலடைகிறது. அவ்வித மாறுதலைத் தடுப்பது இயற்கைக்கு மாறான செய்கை. அது சாதாரண மனிதன் எவனாலும் இயலாது. மேலும் இருதயத்தே உதித்த இன்ப உணர்ச்சியை வெளிப்படுத்தும்போதுதான் மனிதன் அதிக இன்பம் பெறுகிறான்.

* * *

நகைப்பிலும் அளவு உண்டு. இது களிப்பின் ஏற்றத்தாழ்வைப் பொறுத்தது. குறுநகை, பெருநகை முதலியன நகைப்பின் அளவைக் காட்டுவன. குறுநகையாவது ஓசையின்றி உதடுகளைக் கொண்டு தோற்றுவிக்கும் மகிழ்ச்சிக் குறி. வாய்விட்டு ஓசையோடு சிரித்தலே பெருநகையாம். குறுநகை புரிவதில் அதரங்களினிடையே ஒள்ளிய தந்தங்கள் அரும்புவது ஒருவகை. புன்முறுவலென்று கூறப்படுவதும் இதுவே. அஃதேபோல் பெருநகைப்பிலும் உடல் குலுங்கச் சிரிப்பது ஒருவகை. இதுவே 'ஆனந்தம்' என அழைக்கப் படுவது. இத்தகைய ஆனந்தம் களிப்பு வெள்ளம் கரை கடந் தோடும்போது உண்டாகும்.

* * *

பழுத்த சிரிப்பில் அழுகையுமுண்டு; இதுவே நகைப்பின் முதிர்வு. ஓசை மிகுதலும், விழிநீர் பெருகலும், உடல் ஓயாது குலுங்கலும், இத்தகைய சிரிப்புக்குரிய அடையாளங்களாம். இவ்விதச் சிரிப்பில் ஈடுபடும் சிலரது முகத் தோற்றம் எதிரில் நின்று பார்ப்பவர்களுக்கு விகாரமான காட்சி யளித்தலுமுண்டு இது சிரிப்பின் ஓர்வகையாகும்.

* * *

மாடிப்படிகளில் ஏறிச் செல்லுகையில், கால் தவறி படிகள் மீது உருண்டபடியே கீழே வந்து சேர்கிறார் ஒரு தொந்திச் செட்டியார்.

அப்போது அங்கே வந்த அவாது இள மனையாள் செட்டியார் உருண்டதைக் கண்டு திகைத்து நிற்க, செட்டியார் மெல்ல எழுந்து 'படியைத் தாண்டியபோது இந்த வேஷ்டி தடுக்கி விட்டது. அடிகிடி ஒன்றுமில்லை' என்று கூறி, உடம்பைத் தடவிக் கொண்டே பல்லை இளிக்கிறார். இதைத்தான் அசட்டுச் சிரிப்பென்று நாமெல்ல லாங் கூறுவது. இவ்வித அசட்டுச் சிரிப்பு மலிந்துள்ள சம்பவங் களுக்கு நமது தினசரி வாழ்வில் பஞ்சமே இல்லை.

* * *

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும்' என்பது ஒரு பழமொழி. அஃதேபோல் மகிழ்ச்சியும் மிஞ்சினால் மரணத்தையும் விளைவிக்கும். களிப்பு திடீரென உண்டானாலும், அளவு கடந்து விட்டாலும், மக்களுக்கு அபாயம் நேருவதுண்டு. தரித்திரத்திலேயே பிறந்து வளர்ந்த ஒருவன் எப்பொழுதோ தனது நண்பர்களது பேச்சைக் கேட்டு ஒரு அணு கொடுத்து ஒரு லாட்டரிச் சீட்டு வாங் கினான். பல மாதங்கள் சென்ற பின், இப்போது—உணவுக்கே வகை யில்லாது வாடித்தவிக்கும்போது, லாட்டரி மானேஜர் அவனுக்குப் பதினாயிரம் ரூபாய் விழுந்திருப்பதாகத் தந்தி யடிக்கிறார். அப்போ துண்டாகும் குதூகலத்தில், பேரானந்தத்தில் அவனது ஆவிக்கே மோசம் வருவதுண்டல்லவா? ஆதலால் பிறருக்கு ஆனந்த மூட்டத் தக்க எதுவும் நிதானமாய் அவரவர்களது மனப்போக்கை யறிந்து—உணர்ச்சி நிலையைத் தெரிந்து சொல்லுதல் நலம்.

* * *

கடனுக்கு வாங்கி வாழ்பவர்களைப் போலவே வட்டிக்கு வாங்கி நகைப்பவர்களும் உலகில் பலர் உளர். இவர்கள் வேண்டுமென் றுவது சிரிப்பைப் பெருக்கிக்கொண்டே போவார்கள். தம்முட னிருப்பவர்களின் அறியாமையைப் பரிகசித்துக்கொண்டே சிரிப்பை ஓங்க விடுதல் இவர்களது செய்கையாகும். இதையே எள்ளி நகை யாடுதல் என இலக்கியக்காரர்கள் கூறுவர்.

* * *

விகடம் நிறைந்த இடத்தில் மனிதனுக்குச் சிரிப்பு ஏற்படுவது இயல்பு; விகடம் மலிந்த புத்தகங்களிலும், விநோதம் கனிந்த காட் சிகளிலும், விசித்திரம் திகழ்ந்த பேச்சுக்களிலும் ஈடுபடும் யாருக்குத் தான் சிரிப்பு வாராதிருக்கும்! வயிறு வெடிக்கத்தக்க சிரிப்பு வரினும் அத்தகைய விநோதம் முதலியன நிறைந்த இடங்களை விட்டுப் பெயர நமக்கு மனம் வருவதில்லை.

* * *

உடலை எப்படி நகைகள் (ஆபரணங்கள்) அலங்கரிக்கின் றனவோ, அப்படியே முகத்தை நகை (சிரிப்பு) அலங்கரிக்கிறது. சிரிப்பற்ற முகம் மனிதனது இயற்கை யழகையும் குறைத்து விடும்.

இள நகையே முகத்தைப் பளபளப்பென ஒளி வீசச் செய்கிறது. குழந்தைகள்கூட புன்னகை தவழும் வதனத்தை யுடையவர்களிடமே அன்புடன் ஓடி விளையாடுகின்றனர்.

* * *

சிரித்துச் சிரித்துக் கெடுப்பவர்களும் உலகில் உண்டு. இதை நாம் அனுபவ வாயிலாகக் கண்டிருக்கிறோம். இத்தகையோரது சிரிப்பெல்லாம் போலிச் சிரிப்பே. உள்ளத்தில் கொண்ட பகையை வெளிக்குக் காட்டாது நகை முகத்தினரா யிருந்து, சமயம் நேர்ந்துழி இன்னல் விளைவித்துத் தம் பகை முடிப்பர். மேலும் தாம் கொண்ட கருமத்தில் கண்ணு யிருப்பவர் தம் கருத்து நிறைவேறும் பொருட்டு புறத்தே சிரித்தலுமுண்டு.

* * *

மடவார்களது புன்னகையில் மதிமயங்கி விடுகின்றனர் இளங் காளையர்கள். அம்மங்கையர்கள் புரியும் புன்முறுவல் மலரும் நாள் எது என ஏங்கி வாடுகின்றனர். மேலும் தலைவனது நகை முகமே பணியாளனது அச்சத்தைப் போக்குகிறது. சேனாதிபதியின் இன் முகத் தோற்றமே வீரர்களுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் அளிக்கிறது. எனவே, மக்கள் உள்ளத்தைக் கவர்வது, உற்சாகப்படுத்துவது, ஊக்குவது முதலியன யாவும் இள நகையின் வளமான செய்கைகளாம்.

* * *

கொண்ட கருமத்தில் வெற்றி பெற்றபோது மகிழ்ச்சி, எதிர்பாராவகையில் எவ்வித முயற்சியுமின்றி இன்பம் கிட்டும்போது மகிழ்ச்சி; இவ்விருவித மகிழ்ச்சிக்கும் அளவிலும் ஆற்றலிலும் வேற்றுமையுண்டு. எனினும், இரண்டும் உள்ளக் களிப்பை யுண்டாக்கத் தவறுவதில்லை. உள்ளக் களிப்பே உண்மைச் சிரிப்பு. உண்மைச் சிரிப்பே உடல் பூரிப்பு; இருதயக் களிப்பே இன்பத்தை யளிக்க வல்லது. இதுவே உடலை வளர்க்கும் சீரிய ஔடதமாகும். இத்தகைய உயர்ந்த உள்ளக் களிப்பு வெள்ளத்தில் குளித்து விளையாட நாம் அனைவரும் முயல்வோமாக.

# சிறு குடல்

[டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சிறு குடலில் அதிகப்படியான காற்று பிரவேசிக்குமானால் பேதிகாணும். இதனை உஷ்ணபேதி எனவும் அஜீரணபேதி எனவும் கூறுவர்.

இதற்கு காலநிலை மாறுதல், மலைகளின்மேல் ஏறுதல், அளவுக்குமீறி நடத்தல், உஷ்ணமான ஆகாரத்தை உண்ணல், அமிதவேலை செய்தல் முதலியவை காரணங்களாம்.

இரவில் கண்விழித்தல், ஜீரணிக்க முடியாத சில ஆகாரங்களை உண்ணல், அழுகிய வஸ்துக்களையோ அல்லது வேகாத பதார்த்தங்களையோ புசித்தல் ஆகியவற்றால் அஜீரணபேதி உண்டாகின்றது.

உஷ்ண பேதிக்கும் அஜீரண பேதிக்கும் வித்தியாசம் உண்டு. உஷ்ண பேதியானது சில சமயங்களில் சீதபேதியாகவும் மாறும்.

உஷ்ணபேதி கண்டவர்களுக்கு ஓமநீர், மஞ்சள் கியாழம், கரிவேப்பிலை கியாழம், நிமிளை பஸ்பம், படிகார பஸ்பம், சுக்குச் சூரணம், சிலாசத்து பஸ்பம், கட்டுவாதி மாத்திரைகள், கட்டுவாதி லேகியங்கள், மிளகு லேகியம், முதலானவைகளைக் கொடுத்துக் குணப்படுத்தலாம்.

ஆங்கிலர்கள் பிஸ்மத்மிக்சர், கனபினடைன், காம்பிரடைன், ஓமம்வாட்டர், டிங்சர் காம்பர், டிங்சர் அயோடின், மார்பியா, சோடா பைகார்ப், டோவர்ஸ் பவுடர் முதலான மருந்துகளைக் கொடுத்து இந்நோயைக் குணப்படுத்துகின்றனர்.

இத்தகைய ஔடதங்கள் எல்லாம் பயன்தராத பேதி ஒன்று இருக்கின்றது.

அந்த பேதியானது குடற்குள் சிக்குண்டிருக்கும் தலை மயிரினால் ஏற்படும் பேதியே யாகும். அத்தகைய பேதியைப் போக்க மருந்து கொடுப்பதில் பயனில்லை. அதற்கு இந்தியர்கள் சிகிச்சையே மேலானதும், ஆராய்ச்சியில் தேர்ந்ததுமாகும்.

சொணையோடு கூடிய நெல்லை 4, 5, காணும்படி வாயில் போட்-டுக்கொண்டு நீர் அருந்தினால் நெல்லின் சொணையில் குடற்குள்

ளிருக்கும் மயிர் சிக்குண்டு நெல்லுடன் கலந்து மலத்தில் வெளிப்பட்டு விடும். மயிர் வெளிப்பட்ட பின் பேதி நின்றுவிடும். இம்முறையை இந்தியர்கள் தவிர மற்ற எத்தேசத்தாரும் உணரவில்லை என்றால், நமது தமிழ் நாட்டு வைத்தியத்தின் பெருமையை என்னென்று கூறுவோம்.

குடற்குள்ளிருக்கும் மயிரை வெளிப்படுத்த நெல்லை உள்ளுக்குக் கொடுப்பது என்னும் வழக்கம் சர்வ சாதாரணமாகப் பாட்டிமார்களின் கை வைத்தியமாய் நம் நாட்டினர் கருதுகின்றனர். ஆனால் பிற நாட்டினர் இந்நோயால் குணமடையாமல் மாழ்கின்றனர்.

நம் நாட்டில் கை வைத்தியம் எனக் கருதும் சாதாரண வைத்தியத்தில் தீரும் நோய்கள், ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்ட பெரிய மருந்துகளாலும் நிவர்த்திக்க சாத்தியமில்லை என்னும் வகையில் நமது வைத்தியம் சிறப்புற்றது என்பதற்கு இதைவிடப் போதிய சான்று வேண்டியதில்லை.

குடல் பிறண்டு விடுமானால் அதனாலும் பேதி காணும். இந்நோய் மருந்தினால் குணப்படுவதில்லை. 'குடலேற்றம் தெரியாமல் கோடிப் பணம் செலவழிப்பினும் பிழைக்க மாட்டார்கள்' என்னும் பழமொழியை நமது பாட்டிமார்கள் கூறுவதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். ஆதலால் பேதியை நீக்குவதற்கு முதுகில் முள்ளந்தண்டுக்கு நேரில் சதையைப் பிடித்துத் தூக்கி விடுதலாகிய சிகிச்சை மேலாகக் காணப்படுகின்றது.

குடற்குள் அதிகப்படியான இரணம் ஏற்படில் அவ்விரணங்களில் சீழ் பிடிக்கும்போது சுரம் காணும். அந்த சுரம் இரணம் ஆறும் வரையில் இருக்கும். இரணத்தில் சீழ் பிடிக்க ஆரம்பிக்கும் காலத்தில் குறைவாகவும், சீழ் அதிகப்படில் அதிகமாகவும் சுரம் காணும். சீழ் வறளும்போது சுரமும் குறைந்தும் வரும். இவற்றை இரண்டு விதமாகப் பிரித்து வழங்கப்படுகின்றது. அவை யாவையெனில், சந்நிபாதம், அதிசார சந்நிபாதம் (டைபஸ், டைபாய்ட்) எனக் கூறுகின்றனர்.

சந்நிபாத சுரத்திலும் இரண்டு வகையுண்டு. ஒன்று 14 நாள் சுரம் அடித்தல். மற்றொன்று 22-நாள் சுரம் அடித்தல். இதை (டைபாய்ட், பாரடைபாய்ட்) என்பர். பாரடைபாய்ட் 14 நாளில் குணப்படுவதும் டைபாய்ட் 22 நாளில் குணப்படுவதுமாகும்.

சந்நிபாத சுரத்திற்குக் குடற்குள் ஏற்பட்ட இரணம் காரணம் என்றாலும், அவ்விரணத்தை ஆற்றுவதற்கு மருந்து பயன்படாது. ஆனால் மேற்கொண்டு இரணம் அதிகப்படாதபடி பாதுகாக்க வேண்டிய விதிகளை அனுசரிக்க வேண்டும்.

நீர் மயமான ஆகாரத்தைக் கொடுத்தல், அசைவரப் படுக்க வைத்தல், மலசலத்தையும் படுக்கையிலேயே கழியுமாறு செய்வித்தல், பால், சோடா, காய்ச்சி ஆறின நீர் இவைகளைக் கொடுத்தல் ஆகியவைகளால் இக்நோயை அதிகரிக்க வொட்டாமல் தடுக்கலாம்.

சந்நிபாத சுரமுள்ளவருக்கு எவ்வித அன்னமும், பழமும், காரமான வஸ்துக்களும் உள்ளுக்குத் தந்தால் கெடுதல் சம்பவிக்கும்.

ஆங்கில வைத்தியத்தில் ஆர்லிக்ஸ் மாவு கஞ்சியும், ஓவல்டீன் கஞ்சியும், சோடா பாலும், பாலும் எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்து வடிகட்டிய (வே) கஞ்சியும் கொடுப்பர்.

அதிசார சந்நிபாத சுரத்திற்கு ஆர்லிக்ஸ் மாவைத் தரலாகாது. ஏனெனில் ஆர்லிக்ஸ் கஞ்சியை பேதியாகும் சமயத்தில் கொடுத்தால், அதிகப்படியான பேதியாகும்.

குடற்குள் மேக இரணம் ஏற்படில் அதை அதிசார பேதி என்று சொல்லுவர். இதையே ஆங்கிலர்கள் (டியூபர் குலோசிஸ் ஆப் பவல்ஸ்) என்பார்கள். இவ்வியாதி கண்டவர்களுக்குப் பேதியாவதோடு சுரமும் காயும். இதற்குப் பாலும், தக்காளிப்பழ ரசமும், எலுமிச்சம்பழ ரசமும் சமனாய்க் கூட்டி ஆகாரமாகக் கொடுத்தல் நலம். எத்தகைய சிகிச்சையிலும் பெரும்பாலும் இந் நோய் குணப்படுவதில்லை.

குடற்குள் வாயு அதிகரித்து விடுமானால் குடல் பை புரளுவதாகக்காணப்படும். அதுசமயம் சரீரத்தில் குடலுக்குக் கீழ்ப்புறத்திலிருக்கும் ஐவ்வானது இலேசாக வழி விடும்படியான துவாரம் காணும்.

அதுசமயம் அதிகடையும் மலபந்தமும் ஏற்படில் குடலானது கீழே இறங்கும். மீண்டும் படுத்து உறங்கினால் மேலே ஏறிவிடும். குடலானது கீழே இறங்கும்போது சுரம் காணும். பீஜத்திற்கு மேல் வீக்கமும், வலியும் காணும். இதனைத் தமிழர் குடல்வாதம் என்றும், ஆங்கிலர் 'அர்னியா' என்றும் கூறுவர்.

இது இரண்டு பக்கங்களிலும் உண்டாகலாம்.

இந்நோய் நாள்பட இருக்குமானால் குடல் இறங்கும் வழி பெருத்து விடும். ஒரு சமயம் குடற் கீழே இறங்கும்போது துவார வளையமானது குடலைப் பற்றிக் கொண்டு, மேலே போகவிடாமல் செய்து விடுமானால் பிடிபட்ட குடலானது புண்பட்டு விஷம் கண்டு 24-மணி நேரத்திற்குள் மரணத்தை உண்டுபண்ணும். அதுசமயம் தாமதமின்றி ஆப்பரேஷன் செய்து விட்டால் பிழைப்பர். இதனையே 'ஸ்ட்ராங்கு லேட்டட் அர்ணியா என்பர்'. தமிழ் வைத்தியத்தில் இந் நோய் சுகமடையாது. இதனை அறுத்தே சிகிச்சை செய்தல் வேண்டும்.

குடல் வாதத்திற்குப் பேதியாகும் மருந்தையும் பிராந்தியையும் கொடுப்பர்.

ஆங்கில விதிப்படி அறுத்து குடல் இறங்கும் துவாரத்தைத் தைத்து விடுவது வழக்கம். இல்லையேல் (டிரஸ்) என்னும் ஒரு பெல்டால் குடல் கீழே இறங்க வொட்டாதபடி நடக்கும்போது கட்டிக்கொண்டும் உறங்கும்போது அவிழ்த்து விடுவதும் ஆகிய சிகிச்சையைச் செய்வார்கள். இதிலும் சிங்கில் டிரஸ் டபில்டிரஸ் என உண்டு.

தமிழ் முறையில் கச்சை கட்டுவர். அதாவது இரண்டு அங்குல அகலமும் 20 முழம் நீளமும் உள்ள நாடாவைக் கட்டிக்கொள்வதால் துவாரம் சுருங்கி குடல் கீழே இறங்காமல் காத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

## 'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?'

### (ஒரு விதவைப் பெண்ணின் சுயசரிதை)

இக் கதையை நம் 'தமிழரசு' இதழில் தொடர்ச்சியாக வாசித்து வந்த நண்பர்கள், ஜீவமணியின் வாழ்க்கை முடிவை யறிய இதன் பிற்பகுதியை ஆவலோடு எதிர்பார்த் திருப்பார்களாதலால், நூல் வடிவில் வருவதை நல்வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. நம் தமிழ் நாட்டு இளம் விதவை மகளிரின் பரிதாப நிலையை இந் நூலின் ஆசிரியர் அப்படியே படம் பிடித்துக் காட்டி யிருக்கிறார். இளம் விதவைகளை இந்து சமூகம் படுத்துங் கொடுமை—அறுதலிப் பட்டம்—நாத்திமார் படுத்தும்பாடு—ஊர்ப்பெண்கள் பழிதூற்றல்—விட புருடர்கள் மாய ஜாலம்—பெற்றோர் பாரபக்ஷம்—சபல புத்தியால் ஏற்படும் தீமை—ஆகியவைகள் இதில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன. மகளிர்க்குச் சொத்துரிமை யளித்தல், மறுமணம் செய்தல் நியாயமானவை யென்பதை, ஆசிரியர் தக்க காரணங்கள் காட்டி நிலைநாட்டி யிருக்கிறார். இக்கதையை வாசிப்போர் யாவரேனும் மனமுருகாம லிரார். இது தமிழ் மக்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டுவது அவசியம். இது உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அனேக படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. சொற்ப பிரதிகளே கைவச மிருப்பதால் உடனே ஆர்டருக்கு முந்துங்கள். வேண்டுவோர்,

6 அணு தபால் ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலிவீதி, சென்னை.




# புத்திசாலியான மனைவி

[சி. எம். இராமமூர்த்தி]

ஒருவன் ஒரு குருவைத் தேடி வேதாந்த சாஸ்திரம் கற்றுக் கொள்ளப் போனான். குரு அவனைத் தன் மாணவனாக ஏற்றுக் கொண்டு, வேதாந்த சாஸ்திரங்கள் கற்பித்து வருகையில், 'நீ எந்தப் பெண்களைப் பார்த்தாலும் சாக்ஷாத் சங்கரியாகவே எண்ணு' என்று உபதேசித்தார். அவன் வீட்டுக்கு வந்ததும் தன் மனைவியிடம் போய் மௌனமாய் நின்றான். மனைவி 'ஏன் இப்படி நிற்கின்றீர்கள்? என்ன கவலை?' என்று கேட்டாள். அவன் 'என் குருநாதன் எனக்கொரு உபதேசஞ் செய்திருக்கிறார். அது எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவளைச் சங்கரி தேவியாக நான் எண்ண வேண்டுமென்பது. அந்த உபதேசப்படி நீ சங்கரி யாகின்றாய். உன்னை நான் வணங்கத்தக்கவன்' என்றான்.

மனைவி புத்திசாலியாகையினால் இதைக் கேட்டதும், கக்கட வென நகைத்து 'நீங்கள் என்னைச் சங்கரியாகக் காண்பதுண்மையே. இந்த நியாய மிருக்கட்டும்! நான் உங்களைச் சங்கரனாகக் காண்கின்றேன். ஆதலால் சங்கரனும், சங்கரியும் பிரியாம லிருப்பதே சகஜம்' என்று கூறி புருஷனுடைய மனதைத் திருப்பி மகிழ்வித்தாள்.

---

# கெட்ட வழக்கத்தினால் வரும் கேடு

[கோ. ரா. சு. கோபாலன்]

ராமனிடம் எல்லா நல்ல குணங்களும் இருந்தன. இருந்தாலும் அவன் எப்பொழுதும் கோலி விளையாடுவதையும், அழுக்குத் துணிகளைக் கட்டிக்கொள்வதையும் விடவில்லை. ஒருநாள் அவன்

ஒரு குப்பையைக் கிளறிக்கொண்டிருக்கையில் இரண்டு பொம்மைகளை கண்டெடுத்தான். அது முதல் அழுக்குப்படிந்த இடங்களைக் கிளறும் குணத்தைக் கைக்கொண்டான்.

சுத்தம் சோறுபோடு மென்பதை அவன் அறியவில்லை. அவன் அழுக்காயிருந்ததால் யாரும் அவனோடு சேருவது கிடையாது. அக்கெட்ட பழக்கத்தை விட்டுவிடும்படி உபாத்தியாயர் எவ்வளவுதான் கூறியும் அவன் வழிக்கு வரவில்லை. எப்படியாவது அந்த கெட்டபழக்கத்தினால் ஒரு தடவை அடிபட்டுத் தேர்ந்து வரட்டுமென்று அவனுடைய பெற்றோர் பேசாமல் இருந்து விட்டனர்.

ஒரு நாள் ராமன் ஒரு பாழடைந்த பிள்ளையார் கோயிலையடைந்து கண்டதைக் கிளறினான். பைத்தியக்காரன்போல் இங்குமங்கும் சுற்றி யலைந்துவிட்டு பிள்ளையார் விக்கிரகத் தண்டை வந்தான். பிள்ளையாரின் தொப்புழ் துவாரம் மிகவும் ஆழமாக இருந்தது. ராமன் அதில் ஏதாவது இருக்கும் என்ற நோக்கத்துடன் தனது விரலை அதில் நுழைத்தான். அத்தொப்புழில் வெகு நாட்களாக ஏகபோகமாக ஆண்டு கொண்டிருந்த ஒரு பெரிய தேள் நறுக்கென்று ராமனின் விரலில் ஒரு போடுபோட்டது.

ராமன் வலிபொறுக்க முடியாமல் வீட்டுக்கு ஓடினான். வீட்டில் அவனுடைய கைவிரலுக்கு மருந்துபோட்டு குணப்படுத்தினர்.

அன்று முதல் ராமன் அழுக்கு என்றால் இரண்டடி எட்டி நிற்பான்.

# அக்கினி புராணம்

[டி. எஸ். ராமனுதன் பி. ஏ.]

கேளுங்கள் தண்டகாரண்ய வாசிகளே! அக்கினி புராணம் சொல்கிறேம் கேளுங்கள்.

அடாடா! ஏன் உதட்டை கடித்துக் கொள்கிறீர்கள். அரண்யவாசி யென்றதும் டார்வின் துரை ஞாபகம் வந்து விட்டதோ! பக்தி சிரத்தையாய் கேட்காவிடில், புராண சிரவணம் பயனற்றுப் போய் விடும். உஷார்.

ஆதியில் அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயகனை ஸ்ரீமந் நாராயணன் ஜக சிருஷ்டியை ஆரம்பித்து ஸர்வஜன ஸம்ரக்ஷணார்த்தம் அக்கினியையும், மாம்ஸத்தையும் ஏற்படுத்தினர். (இங்கு பௌராணிகர் ஒரு சிமிட்டா பொடியை எடுத்து உறிஞ்சுகிறார்.)

கேளுங்கள் நண்பர்களே! முதலில் ஜனங்களுக்கு நெருப்பின் உபயோகம் தெரியவில்லை? காட்டு மிராண்டிகளைப் போல் ஆடு, மாடுகளைக் கொன்று, குளம்பு கொம்பு நீங்கலாய் பச்சை மாமிஸத்தைப் பக்ஷித்து வந்தனர். (இன்றைக்கும் கோழி முட்டையை வேக வைக்காமல் உள்ளே தள்ளும் நண்பர்கள் நம்மேல் வழக்குத் தொடா வேண்டாமென்று நாம் கேட்டுக் கொள்ளுகிறேம்.)

எக்காலத்தில் எந்த அரசன் ஆண்டுவந்தபோது மாமிசத்தை நெருப்பில் வாட்டித் தின்னும் வழக்கம் ஏற்பட்டது என்று இது வரையில் ஒருவாாலும் கண்டுபிடிக்கப்படவில்லை. சென்ற இருபத்தெட்டு வருஷகாலமாக இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்ததில் (பௌராணிகர் சரித்திர ஆராய்ச்சியாளராய் மாறிவிட்டதில் நேயர்கள் வியப்பு அடைய வேண்டாம். உஸ்! இப்பொழுதே கொட்டாவி விடுகிறீர்களே!) நமக்கு ஒரு உண்மை வெளியாயிற்று. மாமிசம், நெருப்பு, என்ற இவ்விரண்டு வஸ்துக்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பிறகுதான் புலாலைத் தீயில் வாட்டி யுண்ணும் வழக்கம் தோன்றி யிருக்கிறது. திட்டமாக உங்களுக்கு வருஷம் மாதம் தேதி தெரிய வேண்டுமானல் சொல்லி விடுகிறேன். கி. மு. ஐயாயிரத்து அறுபத்தேழா மாண்டிற்கும், கி. பி. ஆயிரத்துத்

தொளாயிரத்து முப்பத்தி நான்காம் வருஷத்திற்கும் இடையிலுள்ள காலத்தில்தான் நெருப்பின் உபயோகம் கண்டு பிடிக்கப்பட்டது.

நேயர்களே! ஜாக்கிரதை! இவ்வுண்மைகள் புத்தக ரூபமாய் வெளியாகு முன், உங்கள் பெயர் கொண்டு பிரசுரித்து விடலா மென்று ஏப்பம் விடாதீர்கள், உங்கள் சமாசாரம் தெரிந்தே நம் ஆராய்ச்சிகளை காப்பிரைட் செய்து விட்டோம்.

நெருப்பின் உபயோகத்தை முதன் முதலில் உலகிற்கு விளக்கிய பெரியார் ஓர் சீன தேசத்து இடையன். (அப்பெரியாரின் பெயர் உச்சரிப்பு விதிகளுக்கு உள்ளடங்காமல் சில நண்பர்களின் தந்தங்களை தகர்த்து விட்டபடியால், நாம் அதை ஈண்டுக் கூறாமல் விடுத்துள்ளோம்.)

அவ்விடையன் தன் மகன் மண்டுகத்துடன் ஒரு குடிசையில் வசித்து வந்தான். ஒருநாள் விடியற்காலை தகப்பனார் பல் விளக்கும் பொருட்டுச் சமீபத்திலிருந்த குளத்திற்குச் சென்றிருந்தபோது, பையன் மண்டுகம்—தலையும் வயிறும் ஒன்றாய் இருந்ததால் இப் பெயர் ஏற்பட்டது—நெருப்பண்டை குளிர் காய்ந்து கொண்டிருந்தான். தீப்பொறிகள் சில கூரையில் விழவே, வீடு அக்கினிக்கு இரையாயிற்று.

வீட்டிற்குள் கட்டப்பட்டிருந்த சில பன்றிகளைக் காணாததால் மண்டுகம் சாம்பலைக் கிளறிப் பார்த்தான். நெருப்பிலிருந்து நெய் மணம் வீசிற்று. தன்னை அறியாமலேயே பையனுக்கு நாக்கில் ஜலம் சொட்டிற்று. ஆள்காட்டி விரலால் புகைந்து கொண்டிருந்த பன்றிக்குட்டிகளைத் தொடவே, தீ சுட்டு விட்டது. தபாலாபீசில் ஸ்டாம்பை வைத்துக் கொண்டு ஜலமில்லாமல் தத்தளிக்கும் ஜனங்கள் செய்வதைப்போல், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, விரலை வாயில் வைத்து உறிஞ்சினான். விரலில் ஒட்டிக் கொண்டிருந்த சுட்ட பன்றியின் மாமிசம் மண்டுகத்திற்கு தேவாமிர்தம் போல் இருந்தது. தகப்பனார் வருவதற்குள் பையன் நாலைந்து குட்டிகளை உள்ளே தள்ளி விட்டான்.

காலைக் கடன்கள் முடிந்து திரும்பிய தகப்பன் வீடு புகைந்து குட்டிச் சுவராய்க் கிடப்பதையும், தன் மகன் களிகொண்டு சாம்பலை விழுங்குவதையும் கண்டு கடுங்கோபம் கொண்டான். ‘அட நாசகாலி! நீ என்ன பேயா பிசாசா? வீட்டைக் கொளுத்தி விட்டு நெருப்பைக் கட்டி கட்டியாய் சாப்பிடுகிறாயே!’ என்று கூறி ஒரு தடியை எடுத்து மகனை நன்கு புடைத்தான். மண்டுகத்திற்கு இதெல்லாம் லக்ஷியமா? குச்சியால் குத்தி ஒரு பன்றியை தகப்பன்

மேல் விட்டெறிந்தான். சூடு பொறுக்க முடியாமல் தந்தை மகனைப் போல் விரல்களை வாயில் கவ்வினான். அவ்வளவுதான். அப்பா பிள்ளையின் சிஷ்யராய் விட்டார். பன்றிகள் ஒன்றன் பின் ஒன்றாய் மறைந்தன.

அதுமுதல் மண்டுகத்தின் குடிசை அடிக்கடி தீப்பிடித்து எரியத் தொடங்கிற்று; தகப்பனும் முன்போல் பிள்ளையை அடிப்பதில்லை. பன்றிகள் குட்டி போடுவதுதான் தாமதம். உடனே மண்டுகத்தின் வீடு அக்கினிக் கிரையாவது ஜனங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. கடைசியில் எப்படியோ சில காவாலிகள் மண்டுகத்தின் ரகசியத்தை மோப்பம் பிடித்து விடவே, சுட்ட மாமிசம் தின்ற அனாசார குற்றத்திற்கு அரஸ்ட் செய்யப்பட்டு, தகப்பனும் பிள்ளையும் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

தகப்பன் தலையில் அடித்துக் கொண்டு குற்றத்தை ஒப்புக் கொண்டான். மண்டுகம் மாத்திரம் மௌனம் சாதித்து நின்றான். கைதிகளை சிக்ஷிப்பதற்கு முன் பரிக்ஷார்த்தமாக ஜூரிகளிடம் கொஞ்சம் சுட்ட மாமிசம் கொடுக்கப்பட்டது. அவ்வளவுதான். ஜட்ஜ் ஆச்சரியப்பட, மஹா ஜனங்கள் திகைக்க, ஜூரிகள் எல்லோரும் ஒரே மனதாய் 'கைதிகள் குற்றவாளிகளல்ல!' என்று கூறி விட்டனர்.

ஜட்ஜ் மிகவும் புத்திசாலி. சுட்ட பன்றியில் ஏதோ சூக்ஷ்மம் இருக்க வேண்டுமென்று அவருக்குப் புலப்பட்டது. உடனே நாட்டிலுள்ள பன்றிகளையெல்லாம் விலைக்கு வாங்கினார். மறுதினம் ஜட்ஜியின் டவுன்ஹால் நெருப்புப் பிடித்து எரிந்தது. ஜூரர்களின் வீடுகள் புகையத் தொடங்கின. நாளடைவில் தேசமெங்கும் வீடுகள் அக்கினிக்கு இரையாயின; வீட்டு வாடகை அதிகரித்தது. இன்ஷியூரன்ஸ் கம்பனிகள் திவாலாகி விட்டன. விறகு பஞ்சம் சொல்லி முடியாது. பன்றிகள் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. நெருப்புப் பெட்டி வியாபாரிகள் விலையை உயர்த்தி நல்ல கொள்ளை யடித்தனர்.

பல நூற்றாண்டுகள் வரையில் ஜனங்கள் இவ்விதம் வீடுகளைக் கொளுத்தி மாமிசம் சுட்டு வந்தனர். உஸ்! ஆசிரியர் கோபித்துக் கொள்கிறார். அடுப்பின் அவதாரத்தைப்பற்றி மற்றொரு சமயம் பேசிக் கொள்வோம்.

# எதிர்பார்த்தல்!

[நா. சு. வே.]

நேயர்களே! உண்மையைச் சொல்லுங்கள். நான் இந்தத் தலையங்கத்துடன் ஓர் கட்டுரை எழுதுவேன் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா? அல்லது இந்தக் கட்டுரையை ஆரம்பிப்பதற்கு முன் இந்தக் கேள்வியைத்தான் கேட்பேன் என்று எதிர்பார்த்தீர்களா? இரண்டுமில்லையே? ஆமாம். நீங்கள் எவ்விதம் அவைகளை எதிர்பார்த்திருக்கக் கூடும். ஒருவேளை உங்களுக்கு ஜோஸ்யம் தெரிந்திருந்தால்..........?

நம் ஜீவியம் முழுவதும் நாம் எதையாவது எதிர்பார்த்த வண்ணந்தானிருக்கிறோம். அதிலும் நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நம்முடைய எதிர்காலத்தின் சுகத்தைப் பற்றித்தான். எவன்தான் தனக்கு வருங்காலம் கெடுதியாய் இருக்கும் என்று எதிர்பார்ப்பான்? நீங்கள்தான் சொல்லுங்கள். நிகழ்காலத்தைவிட எதிர்காலம் பன்மடங்கு மேலாய் இருக்கும் என்பதுதானே மனிதனுடைய எண்ணம்? இந்த எண்ணமில்லையேல், சந்தோஷமில்லை, உற்சாகமில்லை, தைரியமில்லை, எதுவுமில்லை. என் வியாக்கியானம் எப்படி? சரிதானே?

ஆனால் ஒன்று. இவ்வளவுக்கும் நாம் எதிர்பார்ப்பது நடக்க வேண்டுமே!

அது என்னமோ நான் சம்பந்தப்பட்டவரையில் நான் எதிர்பார்ப்பதோ அல்லது என்னைப்பற்றி மற்றவர்கள் எதிர்பார்ப்பதோ நடப்பதே கிடையாது. அது எனது அதிர்ஷ்டம். அதற்கு நான் என்ன செய்வது?

என் தகப்பனார் நான் கூடிய சீக்கிரத்தில் ஒரு பெரிய கற்றறிந்தவனாவேன் என்றுதான் எதிர்பார்த்திருந்தாராம். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடந்ததா? அதுதான் கிடையாது.

ஓர் சர்வ கலாசாலைப் பட்டத்திற்காக நான் எடுத்த படையெடுப்புகள் எனக்குத்தான் தெரியும்—ஏன்? சர்வகலாசாலையாருக்கும், என் நண்பர்களுக்குங்கூடத் தெரியும்? என் தகப்பனார் எண்ணம்போல் மாத்திரம் நான் ஒரு பெரிய கல்வியறிவுடையவனாகியிருந்தால் என்னை ஏன் என் வாத்தியாரும், இதர நண்பர்களும் 'மண்டு' என்றழைக்க வேண்டும்?

என் தகப்பனார் எதிர்பார்த்த வண்ணந்தான் நடக்கவில்லையே, நான் எதிர்பார்த்த மாதிரியாவது நடந்ததோ? அதுவும் கிடையாது. நான் கட்டும் மனக்கோட்டைக்கு நேர் விரோதமாகத்தான் எல்லாம் நடைபெறுகின்றன.

நான் ஒரு பெரிய கட்டுரை எழுதுபவனாக வேண்டு மென்பதுதான் என் பால்ய மனோரதம். எல்லாரும் அவரவர்களுடைய பால்ய மனோரதங்கள் நிறைவேறி விட்டதாகப் பெருமைப் படுத்திக் கொள்கிறார்களே? என் பால்ய மனோரதம் நிறைவேறி விட்டதா?

நான் இதோடு எத்தனையோ டஜன் கட்டுரைகள் எழுதி விட்டேன். ஆனால் எல்லாம் பிரசுரமாகி விட்டனவா? அந்த பேச்சுத்தான் இல்லை.

ஆனால் ஒன்று மாத்திரம் நடந்து விடுகிறது. என் கட்டுரைகளை ஆசிரியர் பிரசுரிக்காமற் போனால் அதை நிச்சயமாய் 'வேஸ்டு பேபர் பாஸ்கெட்'டில் போட்டு விடுவாரென்று நான் எதிர்பார்ப்பதுண்டு. அதுமாத்திரம் தவறாமல் நடந்து விடுகிறது.

நான் ஐந்தாவது வகுப்பில் ஆறாவது வருஷம் வாசித்துக்கொண்டிருக்கும்போது, ஒருநாள் எங்கள் வாத்தியார் சில மாணவர்களைப் புகழ்ந்து பேசும்போது 'அடே கிட்டு, நீ இன்னும் பத்து வருஷத்தில் ஒரு பெரிய சங்கீத வித்வானாய் விடுவாய் சாம்பு. ஒரு பெரிய கணித சாஸ்திரியாய் விடுவான். கோவிந்தனைப்பற்றித்தான் சொல்லவே வேண்டியதில்லையே. அவன் நிச்சயமாய் ஓர் ஒப்பற்ற சித்திரக்காரனாகி விடுவான்' என்று ஒவ்வொரு மாணவனையும் பார்த்துச் சொன்னார்.

நானும் என் நண்பன் ராகவனும் எங்களைப்பற்றி அவர் புகழ்ந்து பேசுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர் எங்களிருவரைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. அவர் கூறாததைப்பற்றி எனக்கு வருத்தமே கிடையாது. எந்த வழியிலாவது திறமை வாய்ந்திருந்

தால்தானே என்னைப்பற்றி அவர் பெருமைப்படுத்திக் கொள்வதற்கு? என்னிடம்தான் ஒன்றுமில்லையே!

ஆனால் என் நண்பன் ராகவன் சாதாரணப் பேர்வழியல்ல. அவன் ஒரு பெரிய 'கலாட்டா' செய்யும் பேர்வழி. கிளாசில் 'கலாட்டா'வை உண்டுபண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன் 'சார்! நீங்கள் எதிர்பார்த்தவைகள் நடந்தாலும் நடக்கலாம். நடக்காமற் போனாலும் போகலாம். ஆனால் நான் சொல்லப் போகும் விஷயம் கட்டாயம் நடந்தே தீரும் சார்' என்றான் ராகவன். 'அது என்னடா, அத்தகைய விஷயம்?' என்று எங்கள் வாத்தியார் கேட்டார். 'அதா சார்? நாம் ஒரு காலத்தில் நிச்சயமாய் இறக்கப் போகிறோ மென்பது சார். நான் சொல்லுவதில் ஏதேனும் சந்தேக முண்டா சார்.' என்று சொன்னான். குறும்பன் ராகவன் சொன்னதுதான் தாமதம். கிளாஸ் முழுவதும் இடி முழக்கம்போல் சிரிப்பாய் இருந்தது. (நீங்களும் சிரிக்கிறீர்களா? என்ன? இந்தக் கட்டுரையை முழுவதும் வாசித்து விட்டுச் சிரியுங்கள்.)

நண்பர்களே! நீங்கள் 'இந்தக் கட்டுரை நாங்கள் எதிர்பார்த்தபடி நன்றாயில்லை' என்று சொன்னாலும் சொல்லலாம். ஆசிரியரும் அப்படியே உரைக்கலாம். ஆனால் நான் எதிர்பார்த்தபடியே இந்தக் கட்டுரை பிரசுரமாய் விட்டது. இனிமேல் நான் எதிர்பார்த்தது போல் நடந்தேறுவதற்கு ஏதேனும் ஐயமுண்டோ? தெரிந்தால் சொல்லுவீர்களென எதிர்பார்க்கிறேன்.

---


கீழ்கண்ட ஊர்களுக்கு நமது 'தமிழரசு'க்கு

## ஏஜண்டுகள் தேவை

| | |
|---|---|
| செங்கற்பட்டு | ஆரணி |
| திருவண்ணாமலை | ஸ்ரீ வில்லிபுத்தூர் |
| திருப்பதி | செங்கோட்டை |
| வாணியம்பாடி | ஆறுமுகநேரி |
| கோட்டையூர் | திருச்செங்கோடு |
| கானாடுகாத்தான் | அம்பாசமுத்திரம் |
| ராமனாதபுரம் | தென்காசி |
| சிவகங்கை | பள்ளத்தூர் |
| ஸ்ரீ வைகுண்டம் | சக்கிந்திராபாத் |



# கோகிலத்தால் ஏமாந்த கோவிந்தன்

[V. R. நாதன், கொழும்பு]

செல்வச்சிறப்பில் அழகாபுரி போன்றும் அழகில் அமராவதி போன்றும் திகழ்ந்து விளங்கிய கமலபுரி என்னும் நகரத்தின் கடற்கரையில் ஓர்நாள் மாலை வேளையில் நாகரீக முறையில் ஆடையாபரணங்களணிந்த இரு வாலிபர்கள் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது சுமார் பதினாருட்டைப் பிராயமுள்ள ஒரு யௌவன மங்கை அவ்வழியாக கடற்கரையின் இரும்பு வாராவதியை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.



இம்மாதரசியைக் கண்ட அவ்விரு வாலிபர்களும் அவளது அழகில் ஈடுபட்டவர்களாக மனநிலை குன்றலாயினர். அம்மாதரசியின் ஸ்வரணத்தை நிகர்த்த தேக காந்தியையும், கட்டுமஸ்தான அவயவங்களையும், குவிந்த கன்னங்களையும், துவண்ட இடையையும், கடைந்தெடுத்தாற் போன்ற கைகால்களையும், வண்டினுங்கரிய நீண்ட கேசத்தையும், மூன்றாம்பிறை சந்திரன்போன்ற நெற்றியையும், தாமரை இதழ்கள் போன்ற கண்களினையும், கடைந்தெடுத்தாற் போன்ற மூக்கினையும், முத்தாரம் போன்ற பல்வரிசையினையும், அன்னநடை அழகினையும், காணின் முற்றுந் துறந்த முனிவர்களே நிலைதவறுவரெனின் அவ்விரு வாலிபர்களின் நிலையை அதிகம் கூறுவானேன் !

இவ்வாறான அழகுக்கு உறைவிடமாகிய அம்மாது சிரோமணியைக் கண்ட அவ்விரு வாலிபர்களில் ஒருவன் மற்றவனை நோக்கி, ‘நண்ப! அக்கட்டழகி யார்? நீ அறிவையோ?’ என்று வினவினான். இதனைக் கேட்ட மற்றவன், ‘அவள் யாரா யிருப்பின் நமக்கென் ! அவள்தான் பிரபல நாடகாரணியான கோகிலம்’ என்றான். இதனைக் கேட்ட அவ்வாலிபன், ‘ஆ! என்ன அழகு! ரவிவர்மாவால் தீட்டப்பட்ட எந்தப் பெண்ணுருவமும் இவளுக்கு இணையாகாதென்று திட்டமாய்க் கூறலாம்! இவளைப் படைக்க பிரமன் தனது முழுத்

திறனேயும் செலவிட்டான் போலும்! இவளேயன்றே உயிருக்கு உற்ற துணேவியாகக் கொண்டு காலங் கழித்தல் வேண்டும். அப்பொழுதன்றே ஜென்மம் சாபல்யமாகும்' என்று தனக்குள் சிந்தித்தவனுய் மனநிலே குழம்பித் தவித்தான். இவனது மனநிலேயைக் காணச் சகியாது ஆதவனும் அஸ்தமித்தான். அனேவரும் தங்கள் தங்கள் இல்லம் நோக்கி நடக்கலாயினர்.

இவ்வாறு கோகிலத்தை மனதில் எண்ணிய வாலிபன் யாவனென் அறிய நேயர்கள் ஆவல் கொள்வார்களாகையால் அதை சற்றே நோக்குவோம். இவனே தென்னுட்டு நாடக மேடைகளில் தெவிட்டாத தெள்ளமுதென விளங்கும் மாஸ்டர் கோவிந்தப்பா. நடையுடை பாவனேயும் சங்கீத ஞானமும் பேச்சுச் சாதுரியமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றேன். ஆயினும் சிற்றின்ப விஷயத்தில் சிறிதும் சளேக்காதோன். கண்ட பெண்ணின் மேல் கொண் காதலே, எவ்வழியினுலும் நிறைவேற்றி கற்பழிக்கும் கிராதகன்.

இன்னேரன்ன குணுனுபாவான் தன் இல்லம் சென்று ஒரு சோபாவில் சாய்ந்தான். கோகிலத்தின் திருநாமங்களேயே பஜித்தான். 'நானும் ஓர் நடிகன். அவளும் ஓர் நடிகை. இதுகாறும் நாங்கள் இருவரும் ஒன்ருய் நடிக்கும் தருணம் வாய்த்ததில்லே. இனி அப்படி ஒரு தருணம் வாய்ப்பின் அவளிடம் எனது எண்ணத்தை வெளியிட்டு என் விருப்பத்திற்கு இணங்கச் செய்யலாம்! கடவுள் சித்தம் எவ்வாறே' என்று தன்னுள் எண்ணினன்.

இவ்வாறு பன்னுட்கள் கழிந்தன. ஓர்நாள் மாலே வேளேயில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்ருன். கடிதத்தைப் பெற்ற கோவிந்தப்பா, அதை பிரித்துப் பார்த்தான். அதில்,

'ஐயா,

வரும் வியாழனன்று இவ்வூர் எலக்ட்ரிக் தியேட்டரில் 'விதிவசச் சிலம்பு' என்ற கோவலன் சரிதத்தை நடாத்தத் தீர்மானித்துள் ளாம். நாடகராணி மிஸ். கோகிலம் மாதவியாகவும், பின் கண்ணகியாகவும், நடிக்கச் சம்மதித்துள்ளார்கள். அச்சரிதத்தில் அன்றுதினம் கோவலனுக நடிக்கத் தங்களுக்குச் சம்மத மிருப்பின் உடனே தெரிவிப்பீர்களாக.

இப்படிக்கு,
பி எஸ், பதி,
கண்டிராக்டர்,
மன்னூர்புரி.

என்று எழுதப்பட்டிருந்தது. மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான். 'இன்றே என் எண்ணம் கை கூடியது. நிச்சயம் அக்கோகிலத்தை

வயப்படுத்துவேன்' என்று தன்னுள் எண்ணி எண்ணி மனமகிழ்ந்து, பி. எஸ். பதி அவர்களுக்கு 'சம்மதம்' என்று தந்தி மூலம் பதிலளித்தான். வியாழக்கிழமையை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தான். ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகம்போல் தோன்றின. இயற்கைதானே! சாதாரண வேளையில் காலங் கழிவது கருத்தில் தோன்றுவதில்லை. வருங்காலத்தை எதிர்நோக்கின், ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகம் போல் தோன்றுவது உலகறிந்த உண்மையேயன்றோ !

* * *

ஊர்களிலுள்ள வெள்ளைச் சுவர்களெல்லாவற்றிலும் விளம்பரங்கள பெரிய பெரிய எழுத்துக்களில் காணப்பட்டன.

நாடகாபிமானிகளே !

நீங்கள் நெடு நாட்களாகக் காணக் காத்திருந்த ஞானகான சபையார் வரும் வியாழனன்று இரவு 9-30 மணிக்கு மன்னார்புரி எலக்ட்ரிக் தியேட்டரில் "விதிவசச் சிலம்பு" என்ற கோவலன் சரிதத்தை தெற்றென நடித்துக் காட்டுவர். கோவலன் வேடம் புனையும் கோவிந்தப்பாவின் நடையுடை பாவனைகளையும், சங்கீத ஞானத்தையும், வாக்கு சாதுரியத்தையும், நாம் இங்கு எடுத்துக் கூறுவதினும் நேரில் கண்டானந்திப்பதே நேர்மை. நாடகாணி மிஸ். கோகிலம் முன் மாதவியாகவும், பின் கண்ணகியாகவும் நடிக்கப்போவது நாடகாபிமானிகளுக் குற்றதோர் நல்விருந்தெனச் சாற்றுவது மிகையாகாது' என்று அவைகளில் குறிப்பிடப் பட்டிருந்தன.

வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு மன்னார்புரி இரயில்வே ஸ்டேஷனில், கண்டிராக்டர் பி. எஸ். பதியும், அவரின் சகாக்களும், இன்னும் பல நாடகாபிமானிகளும், நடிகர்கள் இருவர்களையும் எதிர்கொண்டழைக்கச் சென்றிருந்தனர். சரியாக 4-30 மணிக்கு ரயில் வண்டி ஊதிக்கொண்டே வந்து நின்றது. பலர் மூட்டை முடிச்சுக்களுடன் அவசர அவசரமாக வண்டியில் ஏறினர். பலர் வண்டியினின்று இறங்கினர். அங்கு நடிகர்களை வரவேற்கக் கூடியிருந்த கூட்டத்தினிடையே ஒருவித குழப்ப மேற்பட்டது. ஏன் ? எதிர்பார்த்தவண்ணம் நடிகர்கள் வரவில்லை என்பதைத் தவிர வேறு என்னவாக இருத்தல் கூடும்? நடிகர்கள் 6-மணி வண்டியில் வரக்கூடுமென்றெண்ணி, அங்கு கூடியிருந்தோர் அகன்றனர்.

சுமார் 6-மணி இருக்கலாம். கண்டிராக்டர் பி. எஸ். பதி மன நிம்மதியின்றி, நடிகர்களின் வரவை எதிர்நோக்கியவண்ணம் தியேட்டரில் உலாவிக்கொண் டிருந்தார். அச்சமயம் ஒரு வேலையாள் அவரை யணுகி, இராஜபார்ட் கோவிந்தப்பா வந்துவிட்டதாகக் கூறி

யகன்ருன். சிறிது நேரத்தில், மற்ளுெரு வேலேயாள் தந்தி யொன்றைக் கொடுத்துச் சென்ருன். அதனைப் பிரித்து,

'உடம்பு அசௌக்கியத்தால் இன்றைய ஆட்டத்திற்கு வர இயலவில்லே. தயவுசெய்து மன்னியுங்கள்'.

கோகிலம்.

என்று வாசித்தார். அப்படியே பிரமித்தார். 'ஆ! இனி என் செய்வது? கோகிலம் நடிக்கப் போவதாக விளம்பரப்படுத்தி விட்டோம். அவளோ இன்று வர வியலாதெனத் தெரிவித்திருக் கிருள். தர்ம சங்கடம்!' என்று தனக்குள் கூறி வருந்திஞர். ஆழ்ந்த சிந்தனை செய்தார். சிறிது நேரம் சென்றது.

'ஆ! நான் ஏன் கலங்க வேண்டும்? இவ்வூர் கந்தன் ஸ்திரீ வேஷமணிந்து அரங்க மேடையில் தோன்றிஞல், அவனே அனே வரும் கோகிலமென்றே கருதுவர்! நடையுடை பாவனே, சங்கீதம், உடல் தோற்றம் எல்லாவற்றிலும் அவன் கோகிலத்திற்கு இலக்கான வனே. ஆகவே, அவனேயே இன்று ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றெண்ணி நடிகன் கந்தன் வீட்டிற்குச் சென்று விஷயம் அனேத் தையும் விபரமாகக் கூறிஞர். கந்தனும் அவரின் வேண்டுகோளுக் கிணங்கினன்.

* * *

சரியாக மணி 9-30. தியேட்டரில் முதல் மணி அடிக்கப் பட்டது. எள் விழ இடமின்றி கூட்டங் கூடிவிட்டது. இரண் டாவது மணியும் அடிக்கப்பட்டது. ஜனங்கள் மூன்ருவது மணியை அதிக ஆவலுடன் எதிர்நோக்கிய வண்ணமிருந்தனர். மூன்ருவது மணியும் அடிக்கப்பட்டது. எங்கும் நிசப்தமே குடிகொண்டது, முதல் திரை இழுக்கப்பட்டது. தேவகானம்போல் மங்கள வாத் தியங்களின் இன்னிசை எழுந்தன. அத்தருணத்தில் அரங்க மேடையில் ஒருவன் தோன்றி,

'நாடகாபிமானிகளே! இவ்வூருக்கு பிரதம நடிகர்கள் இருவர் களும் புதியவர்களாகையிஞல், அன்னவர்களுக்கு கௌரவமளித்து, அன்ஞர்கள் இக்கலேயில் தளர்ச்சியின்றி மேன்மையுடன் நாடக உலகத்தில் நற்பெயரெடுத்து வளர்பிறைச் சந்திரன் போல் விருத்தி யடைய ஆக்கமளிப்பீர்களாகுக. நிற்க, இங்குள்ள கனதன வான்களனேவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வ தென்ன வெனில், நாடக சம்பந்தப்படாத பாடல்களே பாடுமாறு வற்புறுத்தாம லிருக்கவேண்டு மென்பதேயாம்' என்று கூறி உள்ளே சென்ருன்.

நாடகம் ஆரம்பமாகியது. கந்தன் மிகவும் சிறப்பாக நடித் தான். நாடகாபிமானிகள் அனேவரும் கந்தனே—இமிடேஷன் கோகிலத்தை—உண்மை கோகிலமென்றே எண்ணி, நாடகத்தில்

கருத்தை யூன்றினர். கோவிந்தப்பாவும் கோகிலமென்றே எண்ணி, கொஞ்சலாக குலாவ ஆரம்பித்தான்.

சுமார் மணி 2 இருக்கும். பிரதம நடிகர்களுக்கு கிஞ்சிற்று ஓய்வுகொடுக்கும் பொருட்டு பக்கவாத்தியக்காரர்கள் தங்கள் தங்கள் கைத்திறனை—கைவரிசையை காட்டலாயினர். இத்தருணத்தில் இமிட்டேஷன் கோகிலம் தனக்கு அன்று எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட அதிர்ஷ்டத்தை ஒரு சோபாவில் ஸ்திரீவேஷத்துடன் சாய்ந்த வண்ணம் சிந்தித்துக்கொண் டிருந்தான். அதுபொழுது காமாதி இராக்ஷஸ கோவிந்தப்பா தன்னருகிலிருந்த மற்றொரு சோபாவில் வந்தமருவதைக்கண்ட இமிடேஷன் கோகிலம் பெண்கள் போல் அச்சம், மடம், நாணம், பயிர்பு ஆகியவற்றை கையாண்டான்.

சிறிதுநேரம் சென்றது; இமிடேஷன் கோகிலத்தை நோக்கி, அன்பு ததும்ப 'காதல் கனியே! அம்ம!' என்ருன் கோவிந்தப்பா. இதை செவிமடுத்த இமிட்டேஷன் கோகிலம்—நமது கந்தன்—சற்றுத் திகைத்தான். 'தான் ஒரு பெண்ணல்ல; ஆண் உருவே' என்று பதிலுரைக்க எண்ணினன். ஆனல், கண்டிராக்டர், பி. எஸ். பதி தனக்கிட்ட கட்டளையை சிரமேற்கொண்டு அவ்வாறு செய்யாது விடுத்து மௌனம் சாதித்தான். சிறிதுநேரம் கழிந்தது; மறுபடியும், 'கோகிலம்! உன்னை கடற்கரையில் கண்டது முதல், உன்னையே சதாகாலமும் தியானித்த வண்ணம் உள்ளேன். ஆகவே, மாதே! கருணை செய்வாயோ!' என்ருன் கோவிந்தப்பா.



இதனைக்கேட்ட கந்தன் வியப்பெய்தினன். ஒன்றும் விளங்காமல் சிந்தனை செய்தான். கோவிந்தப்பாவின் தீய எண்ணத்தை ஒருவாறு யூகித்தறிந்தான். தன்னை கோகிலமென்றே நம்பும்படி அதிகமாக அபிநயம் செய்தான். முடிவில் கோவிந்தப்பாவிற்கு புத்திபுகட்ட எண்ணி, சற்று நாணிக்கோணி, 'நானும் உங்களையே சதாகாலமும் எண்ணிக்கொண்டே யிருந்தேனுயினும், ஒரு ஆண்பிள்ளையிடம் ஒரு பெண்பிள்ளை எவ்வாறு விஷயத்தை வெளியிடுவதென்று வெட்கியே காலங்கடத்தினேன். கடவுளின் கடாக்ஷத்தால் நம் எண்ணம் கைகூட இன்று ஏதுவாகியது' என்று புன்முறுவலுடன் கூறினள்.

இதனைக் கேட்ட கோவிந்தப்பா சந்தோஷ சாகரத்தி லாழ்ந்தான். இறுதி நாடகம் மங்கள கரமாக முடிவடைந்தது. உடனே கோவிந்தப்பா கந்தனைநோக்கி, 'கண்மணி! கோகிலம்! எனது மோட்டார் வண்டியிலேயே ஊருக்குச் செல்லலாமன்றோ? ஏதாவது ஆக்ஷேப முண்டோ?' என்றான்.

இமிட்டேஷன் கோகிலத்திற்கு—நமது கந்தனுக்கு—உண்டான நகைப்பிற்கோ எல்லையில்லை. ஆயினும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு கோவிந்தப்பாவை நோக்கி, 'காதல! நான் இப்பொழுது சொல்லுவதுபோல் நீங்கள் செய்யவேண்டும். மறுத்தளிக்கலாகாது' என்றான்.

கோவிந்தப்பா:—'கண்மணி! நீ கூறுவதை நான் தடுத்தும் உரைப்பேனே! சீக்கிரமாகக் கூறு.'

கந்தன்:—தங்களுக்கு இன்று ஆட்டத்திற்குக் கிடைத்துள்ள ரூபாய் ஐந்நூறையும் இப்பொழுதே எனக்குக் கொடுத்தல் வேண்டும். அத்தொகை எதற்கென்று கேட்கலாகாது. சில காரியார்த்தமாக இவ்வூரில் தங்கிவர வேண்டியதிருக்கிறது.

கோவிந்தப்பா:—'இதுதானா ஓர் பெரிய காரியம்' என்று கூறி, தனக்கு அன்று கிடைத்த ரூபாய் ஐந்நூறையும் இமிடேஷன் கோகிலத்திற்களித்து, 'கண்ணே! காலதாமதமின்னியில் கமலபுரியில் சன்னதித் தெருவில் 27-வது நெம்பர் வீட்டில் என்னைச் சந்தி' என்று கூறி விடை பெற்றுச் சென்றான்.

பணத்தைப் பெற்ற நம் கந்தன்—இமிடேஷன் கோகிலம்—தனக்கன்று ஏற்பட்ட அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். இவ்விஷயத்தை பரம இரகசியமாக வைத்திருந்தான். கந்தனின் நடிப்புத்திறனை மெச்சி, கண்டிராக்டர் பி. எஸ். பதி ஐந்நூறு ரூபாயும், ஒரு தங்கப் பதக்கமும் நல்கினார்.

* * *

இந்நாடகச் சம்பவம் நடந்த நான்காம்நாள் மாலை 5-மணிக்கு கமலபுரி கடற்கரையில் ஒரு நாற்காலியி லமர்ந்தவண்ணம், 'இன்னும் ஏன் கோகிலம் என்னை வந்தடையவில்லை? யாது காரணமோ' என்று சிந்தித்துக்கொண் டிருந்தான் கோவிந்தப்பா. அதே வேளையில் அங்கு உண்மைக் கோகிலம் வரலுற்றாள். இவளைக் கண்ட கோவிந்தப்பா விரைந்தெழுந்து அவளை நெருங்கி 'கண்மணி! இத்தனை நாட்களேன் தாமதித்து விட்டாய்? உன்னைக் காணாத என் கண்கள் கண்களாயில்லை' என்று ஆரம்பித்தான்.

இதைக் கேட்ட கோகிலம்—நாடகக் கன்னிகையே யானாலும் கற்பையே கனகபூஷணமாக மதித்து வாழ்ந்துவரும் கோகிலம்—அவனை விளித்து 'ஏ! காமக் கசடனே! யாது கூறினை! உன் கண்மணி யாரடா? துஷ்டா! என்ன திமிர் உனக்கு! மதியிழந்தனையோ?' என்று கடுமையாய் மொழிய,

கோவிந்தப்பா:—அடி பாதகி, என்னைக் கைவிட்ட காதகி! உனக்கு நான் உழைத்து சம்பாதித்த ரூபாய் ஐந்நூறையும் அப்படியே கொட்டிக் கொடுத்ததையும் மறந்தனையோ?' என்றான்.

கோகிலம்:—அடே துன்மார்க்கா! யாரிடமோ இழந்து விட்டு, அதனால் மதிமயங்கி பித்தம் பிடித்தவனைப் போல பிதற்றுகின்றாய் போலும்! சென்றுவிடு. இன்றேல் கஷ்டத்திற்குள்ளாவாய்' என்றாள்.

இதனைக் கேட்ட கோவிந்தப்பா சித்தம் கலங்கி திகைத்து, ஒன்றும் புரியாதவனாய், 'இதுவும் என் விதிவசம் போலும்' என்றெண்ணி வீடு திரும்பினான். பழய சோபாவில் சாய்ந்தான். தனது ஏமாற்றத்தை எண்ணி எண்ணி பலபல நினைத்தான். அத்தருணத்தில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் செல்ல, அதனைப் பிரித்துப் பார்த்தான்.

ஏ, ஏமாந்த கோவிந்தப்பா!

உன்னுடன் நாடகம் நடித்து உன்னை ஏமாற்றி ரூபாய் ஐந்நூறையும் அபகரித்த யான் கோகிலமல்ல. வேறு ஒரு பெண்ணுமல்ல. நானும் உன்னைப் போன்ற ஒரு ஆடவனே! நீ ஒரு பெண்ணை கற்பழிக்க முனைந்ததற்கு நீ சம்பாதித்த ஐந்நூறு ரூபாயை யிழந்தது மட்டும் போதாது! ஆயினும் அது எல்லாம்வல்ல கடவுளால் விதிக்கப்பட்ட தண்டனை என்பதை அறிவாயாக.



மறுமுறையாக, உனக்கு இன்னொன்று வரைய முன் வந்தேன். தற்காலத்தில் இந்நாடகத் தமிழ் தாழ்ந்திருப்பதற்குக் காரணம், உன் போன்ற போலி நடிகர்களும், கற்பை விலைக்கு விற்கத் துணியும் சில நாடகக் கணிகைகளும் என்பதற்கு கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஆனால், நாடகக் கணிகைகளிலும் எத்தனையோ கற்பரசிகள் இருக்கின்றார்கள். எனையோரும் கற்புள்ளவர்களாக திகழ்ந்து விளங்க வேண்டுமாயின், உன்போன்ற காமக்கசட இராக்ஷச நடிகர்கள் இவ்வுலகை விட்டகல வேண்டும்.

அன்று தினம் நடாத்திய நாடகத்திலேற்பட்ட உனது ஏமாற்றத்தை நினைந்தாயினும், இனிமேல் உன் கெட்ட எண்ணங்களை

வேருடன் களைந்து, உலகிலுள்ள பெண் மக்களை உன் சகோதரிகளாக பாவித்து நடந்து கொள்வாயாக. அவ்வாறு செய்யின் நீ க்ஷேமமடைவாய் என்பதற்கு சிறிதும் ஐயமில்லை.

உன்னை ஏமாற்றி புத்தி புகட்டிய என்னை யாவனென அறிய நீ எவ்வித முயற்சி செய்தாலும், உன் முயற்சியில் வெற்றி பெற மாட்டாய். இதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இவ்விஷயம் ஒரு பெரிய மர்மம்.

இப்படிக்கு,

இமிடேஷன் கோகிலம்.

என்று வாசித்தான். தனது ஏமாற்றத்தை எண்ணி எண்ணி ஒரு பக்கம் ஏக்கமும் மற்றொரு பக்கம் அளவிலா ஆச்சரியமுங் கொண்டான். அப்பொழுதிருந்து தன் நடக்கையில் சீர்திருந்தும் விருப்பங் கொண்டான். இன்றைய உலகில் ஒரு சீர்திருத்த ஆண் மகனாகவும், நாடகத் தமிழுக்கு ஒரு கீர்த்திமானாகவும், ஏமாந்த கோவிந்தப்பா விளங்குகின்றானெனின் இவ்வுலகின்கண் மாறுதலை என்னென்றியம்புவது ?

---


வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடகநூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும் படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# மேகலாம்பிகை

[வி. ஜி. ராஜாக்கண்ணு]

ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு திருவொற்றியூர் ஹைரோட்டில் இருவர் சென்றுகொண்டு இருந்தார்கள். அன்று பௌர்ணமி ஆனதால் நிலவு பட்டப்பகல்போல் வீசியது. அதனால் பத்து பணிக்குமேல் முனிசிபல் மின்சார விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டன. அவ்விருவரில் ஒருவர் ஆண்பாலர், மற்றொருவர் பெண்பாலர். அவர்களை யாராவது பார்த்திருந்தால் அவர்களின் முகத்தைக்கொண்டே, அவர்கள் ஏதோ முக்கியமான வேலையாக செல்கிறார்கள் என்று உடனே அறிந்துகொள்வார்கள். அவர்கள் துக்கத்துடன் அடிக்கடி பெருமூச்சு விட்டார்கள். சுமார் அரைமையில் நடந்ததும் முகமூடி அணிந்த நால்வர் மரங்களின் பின் இருந்து வந்து அவர்களை பிடித்து அங்கு இருந்த மரங்களில்கட்டினார்கள். அவர்கள் நால்வரும் அச்சம் உண்டாக்கக்கூடிய பலவிதக் கடிதங்களை அவர்களுக்கு எழுதியிருந்தார்கள். அந்நால்வரின் நோக்கம் அவர்களை தனியாக அழைத்து பணம் பறிப்பதுடன், அவர்களின் குமாரத்தியையும் மணந்துகொள்ள வேண்டுமென்பதே. ஒரு கடிதத்தில் அவ்விருவரையும் அன்று இரவு அவர்கள் குறித்தவிடம் வராவிட்டால்



அவர்களுடைய குமாரத்தியை கொன்று விடுவதாக எழுதி இருந்தது. அதனல் அவர்கள் அந்த ஹைரோட்டின் வழியாக போய்க்கொண்டு இருந்தார்கள்.

'ஐயா, டாக்டரே! இப்பொழுது நாங்கள் சொல்லுகிறபடி நீர் நடக்கவேண்டும். எதிர்த்து கூறினல் இங்கேயே உங்கள் இருவரையும் கொன்று விடுவோம்' என்றுகூறி அந்நால்வரும் அவருக்கு சிலநிபந்தனைக ளிட்டனர். அவைகளுக்கு அவர் உட்படவில்லை. அவர்கள் அதிக கோபங்கொண்டனர். ஒருவன் தன் கையில் இருந்த கத்தியை ஓங்கினன். அதே சமயத்தில் கத்தியைப்பிடித்து இருந்தவனுடைய தோளில் பலமான அடிவிழவே, அவன் அலறி கீறே விழுந்தான். மற்றொருவன் மீதும் அடிவிழவே, மூவரும் கீழே விழுந்தவனை தூக்கிக்கொண்டு ஓடி மறைந்தார்கள். மரத்தில் கட்டப்பட்டு இருந்த இருவரும் தங்களை காப்பாற்றிய வாலிபனை உற்று நோக்கினார்கள். அவன் தன் முகத்தை ஒரு துணியால் மூடிக்கொண்டு இருந்தான். ஆகையால் அவனை யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுக்கு வயது இருபதுக்கு மேல் இருக்காது. அவன் அவர்களை அவிழ்த்துவிட்டு, வீட்டிற்கு போக வழி நடக்க ஆரம்பித்தான். அவர்கள் அவனை வழிமறித்து, 'ஐயா! உங்கள் பெயர் என்ன? நீங்கள் எங்கு இருப்பது? நீங்கள் தயவுசெய்து எங்கள் வீடுவரையில் வரவேண்டும்' என்று கேட்க, அதற்கு அவன் உடன்பட்டான். ஆனல் தன் பெயரை அவர்களுக்கு கூறவில்லை. அவர்கள் தங்கள் வீட்டிற் கருகில் வந்ததும், வாலிபன் மறைந்து விட்டான். திரும்பிப்பார்க்க வாலிபனை காணுது தங்கள் வேலையாட்களை அனுப்பி தேடச் செய்தனர். அவன் எங்கும் தென்படவில்லை. மேகலாம்பிகை என்னும் அவர்களுடைய மகள், தன் பெற்றோர்களை காணமல் துக்கத்துடன் உட்கார்ந்து இருந்தாள். தன் பெற்றோர்கள் வந்ததைக் கண்டதும், அவர்களிடம் ஓடிவர, அவர்கள் அவளை அணைத்து முத்தம் கொடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர். தங்களுக்கு நேர்ந்த ஆபத்தை அவளிடம் யாரும் கூறவில்லை. அவளுக்கு வயது 11 இருக்கும். இது நிற்க..............

வக்கீல் கனகசபாபதியின் வீட்டில் இதே இரவு பத்து மணிக்கு இருபது வயதுடைய வாலிபன் மேஜை அருகில் நின்றுகொண்டு இருந்தான். அவனுக்கு பத்தடி தூரத்துக்கு அப்பால் வக்கீல் உட்கார்ந்து இருந்தார். அவர் அவனை பார்த்து 'கமலசேகரா! உனக்கு எவ்வளவு உதவிகள் செய்தும் நீ எங்களை வெறுக்கிருய். உன் தாய் இறந்தபிறகு உனது தந்தை அதிக பலவீனமடைந்து உன்னை எங்களிடம் ஒப்புவித்து காப்பாற்றும்படி வேண்டினர். அவர் மிகவும் ஏழை. மாதம் இருபது ரூபாய்க்கு ஒரு குமாஸ்தா வேலையில் இருந்து வயிறு வளர்த்துவந்தார். அவரிடம் சொத்து ஒன்றும்

கிடையாது. நாங்கள் உனக்கு வேண்டிய பணமும், போர்டிங்க்குக்கு வேண்டிய பணமும் கொடுத்து வருவதின் பயனாக நீ இதில் கை யெழுத்துப்போட மறுக்கிறாய். அப்பா இப்பொழுதாகிலும் என் பேச்சைக் கேள்' என்றுகூற கமலசேகரன் மறுபடியும் கையெழுத் திட மறுத்து விட்டான். அவர் அவனை கோபத்துடன் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் எழுந்து தன் படுக்கைக்கு போய்விட்டார்.

வாலிபன் தன் அறைக்குள் சென்று தன் கம்பளி சட்டையை எடுத்து மேலே போட்டுக்கொண்டு படிக்கையின்மேல் உட்கார்ந் தான். 'என்ன! நேற்று இவர் தன் மனைவியிடம், அவர்கள் இப் பொழுது அனுபவிக்கும் எல்லா சொத்தும், இவ்வீடும் என் தகப்பனு டையது என்றும், என் தகப்பனார் பிரக்கியாதிபெற்ற வைத்தியர் என் றும் சொன்னாரே' என்று பலவித எண்ணங்கொண்டு இருக்கும் போது, யாரோ பேசுங்குரல் கேட்டது. மெதுவாக அங்குப போய் பார்க்க, வக்கீல் தன் மனைவியிடம், 'அவன், என்ன சொல்லியும் என் பேச்சை கேட்கவில்லை. இன்று அவன் தூங்கும்போது நமது தோட்டத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் தூக்கிப்போட்டு கொன்றுவிடலாம்' என்று பேசிக்கொண்டதைக் கேட்டான். கமல சேகரன் தன்னிடம் இருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு வெளி யில் வந்து அடுத்த வீதியில் செல்லும்போது, 'ஐயோ, என்னைக் காப் பாற்றுபவர் யாரும் இல்லையா?' என்ற ஒரு பெண்குரல் கேட்க, உடனே அவ்வீட்டிற்குள் சென்றான். அங்கு ஒரு பெண்ணை 22 வயதுள்ள ஒரு வாலிபன் பிடிக்க முயல்வதையும், அவள் அவன் கைக்கு அடங்காமல் அவ்வறையை விட்டு வோட முயற்சித்துக் கொண்டிருப்பதையும் பார்த்த கமலசேகரன், அவன் தலையின்மேல் அடிக்க, அவன் 'ஐயோ' என்று அலறியபடி வெளியே ஓடி விட்டான்.

பின் கமலசேகரன் அப்பெண்ணின் வரலாற்றை கேட்க, அவள் 'ஐயா! நான் டாக்டர் குமாரசுவாமியின் மகள். என் தந் தையும் தாயும் எங்கு சென்றார்களோ தெரியவில்லை' என்று வருத் தத்துடன் கூறினாள். வாலிபனுக்கு அப்பெண்ணை கண்டதும், அவளை மணக்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. பெண்ணே! 'பயப் படாதே, உன் தாயையும் தந்தையையும் அழைத்து வருகிறேன்' என்று கூறி வெளியே சென்றான். சில நிமிஷங்களில் திருவொற்றியூர் ஹைரோட்டின் வழியாக சென்றான். அங்கு இருவர் கட்டப்பட்டிருப் பதைக் கண்ட அவன், அவர்களை காப்பாற்றினான்.

தனக்கு நேர்ந்த ஆபத்தையும், தன்னை ஆபத்தில் காப்பாற்றிய வாலிபனைப் பற்றியும், அவனிடம் தான் கூறியதையும் விவரமாக மேகலாம்பிகை தன் பெற்றோர்களுக்கு கூறினாள். அவர்கள் அந்த

வாலிபனே தங்களை காப்பாற்றினவன் என்று நிச்சயித்து அவனை கண்டுபிடிக்க, பலவித முயற்சிகள் செய்தும் பயன்படவில்லை.

கமலசேகரன் 'பிரசிடென்சி கலாசாலை'யில் போர்டிங்கிலேயே இருந்து படித்து வந்தான். சில தினங்களில் கலாசாலையானது திறக்கப்பட்டது. கமலசேகரன் கலாசாலைக்கு சென்றான். பரீக்ஷையில் முதலில் தேறினான். அதனால் அவனுக்கு வேண்டிய புஸ்தகங்களும், துணிகளும் சாப்பாடும் கொடுத்து கலாசாலையின் தலைமை உபாத்தியாயர் அவனை அன்புடன் நடத்திவந்தார். விடுமுறை நாட்களில் அவன் உபாத்தியாயருக்கு வேண்டிய வேலைகள் செய்வான். 'அவன் பி. ஏ. பரீக்ஷையிலும் முதலில் தேறுவான்' என்று உபாத்தியாயர்கள் எல்லோரும்கூறுவார்கள். தலைமை உபாத்தியாயரின் மனைவியும், தங்களுக்கு புத்திர சந்தானம் இல்லாததால் இவனை தன் குமாரனைப்போல் அன்பாக நடத்திவந்தாள். கமலசேகரன் தான் வெளியே வரும்போது வக்கீல் எக்காகிதத்தில் இவனை கையெழுத்து போடச் சொன்னாரோ, அக்கடிதம் மேஜையின்மீது இருப்பதை கண்டு, அதை தன்னுடன் கொண்டுவந்திருந்தான். அதை கமலசேகரன் தன் தலைமை உபாத்தியாயரிடம் தந்தான். அதில் இவன் வரலாறு முழுவதும் அடங்கிய ஒரு கடிதமும் இருந்தது. அதை வாசித்ததும் அவர் கண்களில் நீர் ததும்பிற்று. ஏனெனில் கமலசேகரன் தந்தை அவரது அண்ணன். தனக்கும் தமையனுக்கும் நேர்ந்த சிறு சச்சரவால் இவர் தன் தமையன் இறந்தபோதும் போகவில்லை. அவருக்கு ஒரு குமாரன் இருக்கிறான் என்பதும் தெரியாது. அவர் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார். ஆனால் தனக்கும் அவனுக்கும் சொந்தம் உண்டென்பதை கமலசேகரனிடம் கூறவில்லை. அன்று முதல் அவர்கள் இவனை வெகு பிரீதியுடன் நடத்திவந்தார்கள். ஒருநாள் இவன் தண்டையார்பேட்டைக்கு போகவேண்டும் என்று உபாத்தியாயரிடம் கூற, அவர் தன் மோட்டாரை எடுத்துக்கொண்டு போகும்படி கூற, அவன் அப்படியே தானே வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். வண்ணாரப்பேட்டையில் டிராம் நிற்கும் இடத்திற்கு வரும்பொழுது ஆபீஸுக்கு போகும் ஜனங்களும், பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும், மாணவிகளும் அங்கு காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியாக தங்கசாலைக்கு வரும் திருவொற்றியூர் பஸ் ஒன்று அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு சிறுமியின்மீது மோத அவள் கீழே மூர்ச்சையாய் விழுந்தாள். உடனே கமலசேகரன் தன் மோட்டாரை நிறுத்தி அப்பெண்ணை தூக்கி தன் மோட்டாரில் வைத்துக்கொண்டு ஒரு டாக்டர் வீட்டிற்கு அழைத்து சென்றான். டாக்டர் சில மருந்துகள் கொடுக்க அவள் மயக்கம் தெளிந்து 'அம்மா, அப்பா' என்றாள். அவள் வார்த்தையை கேட்டு திடுக்கிட்டு உற்று நோக்க, சில நாட்களுக்கு முன் தண்டையார்பேட்

டையில் ஒரு துஷ்டனிடம் இருந்து தான்காப்பாற்றிய பெண் என்று அறிந்து, கண்களில் நீர் ததும்ப 'பெண்ணே! உனக்கு உடம்பு எப்படி யிருக்கிறது' என்று அன்புடன் கேட்டான். இக்குரலை கேட்டதும், இவனே இன்னான் என்று அறிந்து சந்தோஷப்பட்டு, 'ஐயா! தாங்களே என்னை மறுபடியும் காப்பாற்றினீர்கள். தங்களை என் பெற்றோர் பலவிடங்களிலும் தேடி பயனற்றதாயின. தாங்கள் யார்? எங்கு இருக்கிறீர்கள்?' என்று கேட்க, அவன் 'பெண்ணே! நான் என் தாய் தந்தையர்களை என் கண்ணால் கண்டது இல்லை. அவர்கள் உயிருடன் இருப்பதும் இல்லாததும் தெரியவில்லை. என் பெயர் கமலசேகரன். 'பிரசிடென்சி கலாசாலை'யின் தலைமை உபாத்தியாயர் என்னை இப்பொழுது வளர்த்து வருகிறார்' என்றான். அவன் வரலாற்றை கேட்ட மேகலாம்பிகை சந்தோஷப்பட்டு 'நான் தங்களை மணக்க இஷ்டப் படுகிறேன்' என்றாள். அவனும் அவள் இஷ்டத்திற்கு உடன்பட்டு, அவளை அழைத்துக்கொண்டு அவள் படிக்கும் பெண் பாடசாலையில் கொண்டு போய் விட்டான். அவள் அவனை நோக்கி 'அத்தான் தாங்கள் அடிக்கடி வந்துபோக வேண்டும் என்று அன்புடன் கேட்க, அவன் சம்மதித்தான்.

* * *

மேகலாம்பிகையின் தந்தை அவளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று எண்ணி தங்கள் வம்சத்திலிருந்த ஒருவனுக்கு ஏற்பாடு செய்தார்கள். அப்பொழுது அவர் மனைவி 'என் பெரிய அண்ணனுக்கு பிள்ளைகள் இருந்தால் அவர் குமாருக்கு கொடுக்கலாம். என் சிறிய அண்ணனும் இறந்துவிட்டார். அவருக்கு ஒருபையன் இருந்ததாக கேள்விப்பட்டேன். அவன் எக்கதியானானோ தெரியவில்லை' என்று பேசிக்கொண்டிருந்தாள். இவைகளை கேட்டுக்கொண்

டிருந்த மேகலாம்பிகை, 'கமலசேகரன் ஒருகால் நம் மாமன் மகனாய் இருக்கலாமோ' என்று எண்ணினாள். ஆனால் நிச்சயமாய் கூற முடியவில்லை.

மறுநாள் மேகலாம்பிகையின் தந்தை அவளிடம் அவள் விவாகத்தைபற்றி கூற, அவள் மறுத்து கூறவே, அவர் கடுங்கோபங் கொண்டு 'நீ என் மனதை திருப்தி செய்ய எப்படியும் நான் குறிப்பிட்டு இருப்பவனை மணந்துகொள்ளத்தான் வேண்டும்' என்று வற்புறுத்தி அவ்விடத்தை விட்டு சென்றார். அவள் மனம் பலவிதமாக வருந்தியது. மறுநாள் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வரும் பொழுது கமலசேகரனை கண்டாள். அவள் கண்களில் இருந்து நீர் பெருகியது. அவளுடைய துக்ககரமான முகத்தை கண்டதும் கமலசேகரன் அருகில் சென்று 'அன்பே! ஏன் இன்று உன் முகம் மாறுபட்டிருக்கிறதே' என்று கேட்டான். அவள் அழுதுக்கொண்டே தன் தகப்பனார் முடிவுசெய்திருக்கும் கலியாணத்தை குறித்து சொன்னாள். உடனே கமலசேகரன் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தான். அவனுடைய கண்களிலும் நீர் பெருகியது. அப்பொழுது மேகலாம்பிகை 'அத்தான்! நாம் எண்ணிய எண்ணம் எல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று. நாதா! நாம் இப்பிறப்பில் கணவனும் மனைவியுமாய் வாழ கடவுள் கிருபை புரியாவிட்டாலும் மறு ஜென்மத்திலாவது, நாம் கணவனும் மனைவியுமாய் வாழ கடவுளை அருள்புரியும்படி பிரார்த்திக்கலாம். கடவுள் அவ்விதம் அருள்புரிய ஒருக்காலமும் தவற மாட்டார். அத்தான்! இதோ தங்கள்முன் சத்தியம் செய்கிறேன். நான் தங்களையன்றி பிறபுருடரை கனவிலும் மணவேன். என் தகப்பனார் என் கலியாணத்தை கண்டு களிப்பதற்கு பதிலாக என்னை சுடலையில் சேர்த்து வருந்துவார். எப்படியும் நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று வருத்தத்துடன்கூறி தன் கையில் அணிந்திருந்த மோதிரத்தை அவனிடம் தந்தாள். அவன் அதை பெற்றுக்கொண்டு, 'அன்பே, நீ இவ்விதம் சத்தியம் செய்யலாமா. உன் தகப்பனார் கூறியபடி உனக்கேற்ற நாதனை மணந்து கொண்டு நீ சுகமாய் இருப்பதாக கேள்விப்பட்டால், என் மனம் சந்தோஷப்படும்' என்று கூறி அவளுக்கு துக்கத்துடன் விடை கொடுத்து அனுப்பிவிட்டு தன் இஷ்டம்போல் பல விடங்களுக்குச் சென்று, திரிந்துவிட்டு இரவு 10 மணிக்கு வீட்டிற்கு சென்றான். இவன் முகத்தைக்கண்டதும் இவரது சிறிய தகப்பனாராகிய கலாசாலையின் தலைமை உபாத்தியாயர் சங்கதி என்னவென்று விசாரிக்க அவன் ஒன்றும் இல்லை என்று கூறிவிட்டான். நாட்கள் பல சென்றன. மேகலாம்பிகையின் தந்தை கலியாணத்திற்கு எல்லாம் தயார் செய்து, பத்திரிகைகளும் அச்சடித்துவிட்டார். நாள் நெருங்க நெருங்க மேகலாம்பிகை வர வர துக்கத்தால் துரும்பாக மெலிந்து விட்டாள். சில நாட்களில் பாயும் படுக்கையுமாக ஆனாள். அக்காலங்களில் 'சேகரா—

கமலசேகரா—நான் இறப்பேன் என்பது திண்ணம். நீர் ஒரு தடவையாவது வந்து பார்க்கலாகாதா' என்று பலவிதமாக பிதற்றினாள். அவளுடைய தாய் தகப்பன் மிக்க துக்கத்திற்குள்ளானார்கள். கமலசேகரன் இன்னான் என்று அவர்களுக்கு தெரியவில்லை. டாக்டர்கள் கைசோரவிட்டார்கள். மேகலாம்பிகையின் தாய் தன் தமையனான பிரசிடென்சி கலாசாலை தலைமை உபாத்தியாருக்கு தெரியப்படுத்தினாள். அவர் உடனே வந்து சேர்ந்தார். மேகலாம்பிகை அடிக்கடி 'கமலசேகரா—கமலசேகரா' என்பதை கேட்டு திடுக்கிட்டார். மேகலாம்பிகையின் பெற்றோர்கள் அவர் முகமாறுதலின் காரணத்தை வினவ அவர் பதில் ஒன்றும் சொல்லாமல் தன் வீட்டிற்கு போய்விட்டார். அங்கு கமலசேகரன் துக்கத்துடன் படுத்திருப்பதை கண்டு, அவன் அருகில் சென்று 'குமாரா! நீ எப்பொழுதாவது மேகலாம்பிகை என்னும் மாதை சந்தித்ததுண்டா' என்று கேட்க, அவன் துக்கத்துடன் உள்ளதை உள்ளவாறே கூற, அவர் அவனை அழைத்துக் கொண்டு, தன் தங்கை வீட்டிற்குச் சென்றார். அங்கு மேகலாம்பிகை படுக்கையில் கிடப்பதைக் கண்டதும், கமலசேகரன் அவள் அருகில் சென்று, மேகலா, மேகலா, என்று அழைக்க அவள் கண்ணை திறந்து கமலசேகரனைப் பார்த்து, 'அத்தான்! இனி நான் சந்தோஷமாய் இறப்பேன்' என்று கண்களில் நீர் ததும்ப கூற, அவன் அவளைத் தேற்றினான். தன் நாதனைக் கண்டதும், மேகலாம்பிகையின் நோய் வெயிலைக் கண்ட பனிபோல் நாளுக்கு நாள் குறைந்து சௌக்கியமானாள். கமலசேகரனின் சிறிய தந்தை தன் மைத்துனனிடம் வாலாற்றை கூற, அவர்கள் அதிக சந்தோஷப்பட்டார்கள். அவ்வருடம் அவன் பி. ஏ., வகுப்பில் முதலில் தேறினான். கமலசேகரனுடைய தந்தையின் வக்கீல் பயந்து எல்லாப் பொருள்களையும் கமலசேகரனிடம் கொடுத்து விட்டார். ஒரு சுப தினத்தில் மேகலாம்பிகைக்கும், கமலசேகரனுக்கும், கலியாணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. தம்பதிகள் இருவரும் மன்மதனும் இரதியும்போல் இன்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.





# என் உபாத்தியாயர்

[ஜி. சுப்பையாராஜு]

என்னைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும்போது எனக்கு வயது ஐந்துதான். எனினும், அப்போது 'வாத்தியாராய்' இருந்த சாமுண்டியப்பரை நான் இன்னும் மறக்கவில்லை. பள்ளிக்கூடத்தையும் மறக்கவில்லை. அப்போது என்னுடன் படித்த பையன்களில் சிலரே இன்றுவரையில் எனது ஆப்த நண்பர்கள். அந்நாட்களைக் குறித்து என் மனம் துள்ளுகின்றது. மறுபடியும் அரிச்சுவடியில் சாமுண்டியப்பரின் கீழ் படிக்கும் பாக்கியம் (?) நேரில், அந்நாளில் நடந்துகொண்டவாறு நடந்து கொள்வேனோ என்ற சந்தேகம் பிறக்கிறது.

என்னுடைய தாயார் இதர தாயார்களைப் போல் என்னைச் சிங்காரித்து பள்ளிக்கு அனுப்புவதில்லை. என்னுடைய அக்காள் ஜானகிதான் அதையெல்லாம் பார்த்துக் கொள்ளுவாள். அவள் என் தலையை வாரி விடுவாள். தலை வாரியானதும், பச்சை வெல்வெட்டு கால்சட்டையும், மேல் சட்டையும் போட்டு விடுவாள். சாந்துப் பொட்டும் ஒன்று இடுவாள். எனவே தலையில் குல்லாவும், வெல்வெட்டு சட்டையும், ஒரு கையில் ஆப்பமும், மற்றொரு கையில் அட்டை யில்லாத பாலபாடமும் சிலேட்டுமாக பள்ளிகக்கூடத்திற்கு நான் போகையில், அங்கே மணி அடித்தாகி அநேகமாய் கடவுள் தோத்திரம் முடிந்து காலைப் பிரார்த்தனை ஆரம்பித்துக் கொண்டிருப்பார்கள். நான் பிந்திய பிரார்த்தனையில் கலந்துக் கொள்ளுவேன். இதனால் என்னமோ வாணியின் கடாக்ஷம் எனக்குக் கிடைத்த போதிலும், விக்கினேஸ்வரர் ஏதாவது விக்கினம்

செய்து கொண்டே வருகிறார் போலும்! நூற்றெட்டு 'கொழுக் கட்டை' எங்கம்மா செய்து நைவேதனம் செய்தும் ஷி ஆசாமியை ஏமாற்ற முடியவில்லை.

பிரார்த்தனை முடிந்ததும், வாத்தியார் 'என்ன, சிவாஜீ மகா ராஜாவுக்கு தூங்கி எழுந்திருக்க நேரமாகி விட்டதோ?' என்று என்னைக் கேட்பார். ஒவ்வொரு பையனையும் பெயர் வைத்துக் கூப் பிடுவதுதான் அவருக்கு வழக்கம். நான் வெல்வெட் சட்டை போட்டிருப்பதைக் கண்டால் அவருக்கு ஆத்திரம் பொங்கும். அதனால் என்னை 'சிவாஜி ராஜா' என்பார். பிறகு மேற்சொன்னபடி கண்டித்து விட்டு தண்டனையும் விதிப்பார்.

என்ன தண்டனை! தினசரி பையன்களை ஆஜர் எடுக்கிற வரை யில் நின்றுகொண்டே யிருக்க வேண்டும். அப்பொழுதெல்லாம் பெஞ்சுமேல் நிற்பதில்லை. ஏனென்றால், எங்கள் வகுப்பிற்கு பெஞ்சு கிடையாது. பாய்மேல்தான் உட்கார வேண்டும். அது கிழிந்து கிடக்கும். இந்தக் கிழிந்த பாய்கூட அழுக்காய்விடக் கூடாதென வாத்தியாருடைய வலது கைப்புற மூலையில் போய் நிற்க வேண்டும். இன்னொரு பையன்மீது வாத்தியாருடைய கருணைக் கண் படுகிற வரையில் தண்டிக்கப்பட்டவன் நின்றுகொண் டிருக்கவேண்டும். இரண்டு பேர் நிற்க இடம் இல்லாததால் மற்றவன் வந்ததும், முந்தி யவனுக்கு விடுதலை ஏற்பட்டு விடும். தினசரி ஆஜர் எடுப்பதற்கு பையன்கள் இருபத்தைந்து பேர்தானென்றாலும், ஒரு மணி நேர மாவது பிடிக்கும். ஒவ்வொரு பெயரையும் கூறி பையன்கள் பதி லளிக்க ஒரு நிமிஷம். அந்தந்த பெயர் வரும்போது வாத்தியாரின் மண்டகப்பிடி ஒரு நிமிஷம். ஆக ஐம்பது நிமிஷம் போக புஸ்த கத்தை நன்றாய் 'பிளாட்டிங் பேப்பரில்' ஒத்தி மடித்து தன் முன் உள்ள அரை மூடியோடு கூடிய ஜாதிக்காய்ப் பெட்டியில் திரும்பவும் வைக்க பாக்கிப் பத்து நிமிஷம் ஆய்விடும்.

அப்பொழுதெல்லாம் மேஜை கிடையாது. நான் சொன்னபடி ஒரு ஜாதிக்காய் பெட்டிதான். ஒரு ஓட்டை நாற்காலியுண்டு. அதற்கு ஒரு கை கிடையாது. பின்பக்கம் மட்டுந்தான் பிரம்பு இருக்கும். அடியிலுள்ள பிரம்பு போய் நான்கு சட்டங்கள் அடித் திருக்கும். ஒரு பக்கத்துக்கு கையில்லாம லிருந்தது எங்கள் வாத் தியாருக்கு சௌகரியம்தான். ஒரு காலைத் தூக்கி முழங்காலை மடக்கி நிறுத்தி வைத்துக் கொள்ளுவதற்கு அது அவருக்கு இசை வாக இருந்தது. அடியில் சட்டம் அடித்திருந்ததால், தனது மேல் வேஷ்டியை மடித்துப் போட்டுக்கொண்டு, உட்காருவார்; மேலே அவருடைய பூணூல் மட்டுந்தா னிருக்கும். சட்டை போட்டுக் கொள்ளுவது சகஜமாய் கிடையாது; இன்ஸ்பெக்டர் வருகிற அன் றைக்கு ஜாதிக்காய் பெட்டியில் தயாராய் இருக்கும் ஒரு வெள்ளைக்

'கழுஸை' எடுத்துப் போட்டுக்கொண்டு, தன் மேல் வேஷ்டியைத் தலையில் கட்டிக் கொள்ளுவார். அதுவும் இன்ஸ்பெக்டர் வந்து போகிற வரையில்தான். இம்மாதிரி மாரைத் திறந்து போட்டுக் கொண்டு, ஒரு கையில் 'படபட' என்று அடித்துக் கொள்ளும் விசிறி, மற்றொரு கையில் எங்களைத் 'தடதட' என்று அடிக்கும் பிரம்பு, இவைகளுடன் எங்கள் வாத்தியார் தனது நாற்காலியில் உட்கார்ந்திருப்பார்.

ஆஜர் எடுத்ததும் கொஞ்ச நாழி விசிறியின் சத்தம் கேட்கும்; அதில் வருகிற காற்றைவிட சத்தம் அதிகமாய் இருக்கும். பிறகு தனது மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்து மறுபடியும் மாட்டிக் கொள்ளுவார். (போட்டுக் கொள்ளுவார் என்றுரைக்காமல் மாட்டிக் கொள்ளுவார் என்று கூறவேண்டி யிருக்கிறது.) இரு பக்கத்து கம்பி போயிருக்கும். அந்தப் பக்கத்திலுள்ள துவாரத்தில் ஒரு கயிற்றைக் கோத்து மற்றொரு பக்கத்து கம்பியோடு சேர்த்து முடித்து தலை வழியாய் மாட்டிக் கொள்ளுவார்; கையில் வேறொரு காகிதத்தால் உறைபோட்ட அவருடைய 'பாலபாட' புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு பிரம்பை பெட்டியின் மேல் (விசிறியை விடமாட்டார்) வைத்து விட்டுப் பாடம் ஆரம்பிப்பார்.

இந்தப் பாலபாட புஸ்தகம் ஆரம்பிக்கு முன் நாங்கள் உயிரெழுத்து (உயிர் எழுத்து என்று நல்ல பெயர் வைத்தனர். அவற்றை கற்றுக் கொள்வதற்குள் உயிர் போய் விடும். அதனால்தான் அந்தப் பெயர் போலும்). மெய்யெழுத்துக்களைக் கற்றுக் கொள்ளும் வரையில், அவைகளை எழுதுவதற்காக ஒவ்வொருவர் எதிரிலும் மணல் குவித்திருக்கும். அதன்மேல் முதல் பன்னிரண்டு எழுத்துக்கள் எழுதக் கற்றுக்கொள்வதற்குள் எங்களுடைய விரல் ஓாங்குலம் தேய்ந்து போய் விடும். எழுதும்போது, 'அ'னா 'ஆ'வன்னா என்று சொல்லிக்கொண்டே எழுதவேண்டும். ஆனால் பன்னிரண்டு எழுத்துக்களையும் ஒப்புவிக்கும்போது, அ. ஆ, இ. ஈ: என்றே சொல்ல வேண்டும். எழுதிய பழக்கத்தால் நடுவில் மறந்து போய் 'எனா' என்று ஒருவன் சொல்லிவிட்டால், 'இவன்களைக் கட்டி மாரடிப்பது தலையெழுத்துத்தான்' என்று வாத்தியார் அந்தக் கேள்விக்கும் பதிலளிப்பார். இன்னும் உங்களுடன் மாரடிப்பதில் சாகத்தான் வேண்டும் என்பார்.

பாலபாடத்தில் அம்மி அரிவாள் முதல் வீதி என்பது வரையில் தலை கீழாய் நாங்கள் ஒப்பிப்போம். பின்னால் சில வாக்கியங்கள் உண்டு. அதில்தான் தட்டுக்கிடல். 'பன்றிக்குட்டி உறுமும். லட்டு தித்திக்கும்' என்றவாறு சில வரிகள் உண்டு. ஒருநாள் கோபாலன் என்பவன் 'லட்டு உறுமும்—பன்றிக்குட்டி தித்திக்கும்' என்று தவறி கூறினான். வாத்தியாருக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

'யாரடா இந்தப் பாடம் எழுதியது?' என்று கர்ஜித்தார். கோபாலன் மெதுவாக 'எங்கப்பா சொன்னாரே' என்றான். உண்மை யென்னவெனில், கோபாலன் தகப்பனருக்கு ஆபீசில் வேலை. துரை ஜமா பந்திக்கு வரும்பொழுது பன்றிக்குட்டி 'சப்ளை' செய்ய வேண்டியது அவர் பொறுப்பு. என்னமாய்த்தான் இந்தத் துரைகள் இதைத் தின்கிறார்களோ? ஒருவேளை தித்திக்கும்போ லிருக்கிறது என்று மற்றொரு குமாஸ்தாவிடம் அவர் சொல்லிக்கொண் டிருந்தார். கோபாலன் இதைக் கேட்டுக்கொண் டிருந்தான். உடனே பால பாடத்தைத் திருத்தி விட்டான். பன்றிக்குட்டிக்கு நேரில் தித்திக்கும் என்று எழுதிக் கொண்டான், உறுமும் என்ற பதத்தை தித்திக்கும் என்று இருந்த இடத்தில் போட்டு விட்டான்.

வாத்தியாருக்குக் கோபம் தாங்க முடியவில்லை. கோபாலனைப் பிரம்பால் வெளுத்து விட்டார். உடம்பெல்லாம் அவனுக்குத் தடித்துப்போய் விட்டது. 'இருங்கோ, உங்களை விடுவதில்லை' என்று அவன் அழுது கொண்டே தன் தகப்பனாரிடம் போய் சொல்லி விட்டான். அவர் தலைமை இன்ஸ்பெக்டருக்கு புகார் எழுதி விட்டார். தலைமை இன்ஸ்பெக்டர் துரை விசாரிக்க வந்தார். விஷயத்தை விசாரித்ததில், 'பன்றிக்குட்டி தித்திக்கும்' என்று கூறியதற்காக அடித்தாரெனத் தெரிய வந்தது. 'ஏன்! அதில் என்ன குற்றம். உண்மைதானே அவன் கூறினான்?' என்று கேட்டார். வாத்தியாருக்கு ஒன்றும் புலப்படவில்லை. பன்றிக்குட்டி என்னமாய் தித்திக்கும்? என்று விழித்தார். இன்ஸ்பெக்டர் துரை இந்த வாத்தியார் சொல்லிக் கொடுக்க லாயக்கில்லை என்று குறிப்பிட்டு, வேலையை விட்டுத் தள்ளிவிட வேண்டுமென்று ஹெட்மாஸ்டரிடம் சிபார்சு செய்து விட்டுப் போய்விட்டார். அப்போது எங்கள் வாத்தியாரின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

என்ன பண்ணுவார்! பாவம்! ஹெட்மாஸ்டர் ஏகாம்பரம் பிள்ளை. அவர் பன்றிக்குட்டியை வாரகப் பெருமாளாகக் கருதுகின்றவர். 'ஓய் சாமுண்டியப்ப தேவரே! உமக்கு லௌகிகமே தெரியவில்லை. இது வெள்ளைக்காரன் ராஜ்யம் என்று தெரியாதா? காலத்திற்குத் தக்கபடி பாடத்தையும் மாற்றிக்கொள்ள வேண்டாமா? எந்த வெள்ளைக்காரனைக் கேட்டாலும் பன்றிக்குட்டி தித்திக்கும் என்றுதானே சொல்லுவான்? இது உமக்குத் தெரியவில்லையே' என்று சொல்லி, அவரை மரியாதையாய் வீட்டிற்கு அனுப்பி விட்டார். அன்று முழுவதும் கோபாலனும் நானும்கூட வருத்தப்பட்டோம்.

நேயர்களே! என்ன யோசிக்கிறீர்கள்? நீங்களா யிருந்தால் என்ன செய்வீர்கள். பாவம்! எங்கள் வாத்தியார் இருக்கும் இடம் எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்திருந்தால் எனக்குச் சொல்லுகிறீர்களா?

---

# சகோதர வாஞ்சை

[ராசி]

விமலாவோ கைலாசமையரின் கடைசிப் புதல்வி. கைலாசமையருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. மூத்தவளான கமலாவோ, பூரண கர்ப்பிணியாயிருந்து, ஓர் ஆண் மகவைப் பிரசவித்தவுடன் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டாள். அவள் இறந்ததினம், வீட்டில் லக்ஷிமிபோல் இதுகாறும் பிரகாசித்து வந்த வனிதா ரத்தினம் மறைந்தவன்று, கைலாசமையர் வீடு பேய் பிடித்த வீடே போல் தோன்றியது. மூத்த பையன் கமலாவின் தம்பி, சாமிநாதனென்ற சாமா, டாக்டர் பரீட்சையில் தேறி வேலை தேடப் பினாங்கு சென்று அவ்விடத்தில் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்திருந்தான். இரண்டாவது பையன் ராமநாதன் பி. ஏ. வரையில் படித்துவிட்டுத் திருச்சியிலேயே ரயில்வேயில் வேலை பார்த்து வந்தான். மூன்றாவது பையனான மாயூரநாதனோ எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தான். இவனுடைய தங்கையே நமது விமலா.

கைலாசமையரின் தர்ம பத்தினி பார்வதியம்மாள். கைலாசமையரின் குடும்பம் ஒரு பழைய வைதீக குடும்பம். அவர் பையன்களின் படிப்பை முன்னிட்டுத் தமது சொந்த கிராமத்தை விட்டுத் திருச்சியில் வாழ்ந்து வந்தார். பழைய காலத்து ஆசார அநுஷ்டானங்களில் மிகவும் பிரேமை யுள்ளவர். ஆயினும் இக்காலத்துக் கொள்கைகளும் அவரைப் பாதிக்காமலில்லை. தமது புத்திரர்களில் ஒருவனையாவது வைதீகத் தொழிலுக்குத் திருப்ப வேண்டுமென்று எவ்வளவோ சிரமப்பட்டார். எவ்வளவு முயற்சி செய்தும் ஒன்றும் பயனில்லை. பையன்களெல்லாம் நல்ல புத்திசாலிகள். அதிலும் கடைசிப் பையனான மாயூரநாதனோ அதிமேதாவியாக விளங்கினான். 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி தனது புத்தி சாதுரியத்தை அதிகம் காட்டி வந்தான். கடைசிப் பையன் அதிக புத்திசாலியாக விளங்கியதால் அவனை எம். ஏ. வரையிலும் படிக்க வைத்து ஐ. ஸி. எஸ்; பரீட்சைக்கு அனுப்ப வேண்டுமென்று கைலாசமையர் முடிவாக எண்ணங் கொண்டார்.

விமலாவுக்கு அப்பொழுது வயது எட்டு. பள்ளிக்கூடத்திற்குச் சென்று படித்து வந்தாள். தமது இரண்டு பெண்களில் மூத்த பெண் இறந்து போகவே, இனிக் கடைசிப் பெண் ஒன்றே இருப்பதை எண்ணிப் பெற்றோர்கள் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக அப் பெண்ணின் பேரில் பட்சம் பாராட்டி வந்தனர். விமலாவோ அழகே உருவெடுத்து வந்ததைப் போல் விளங்கினாள். கமலையில் தோன்றும் விமலையைப் போல் தோன்றினாள். அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் அவளது அழகினுக்கு அழகு செய்பவன போல் விளங்கின.

மாயூரநாதனோ அவ்வருடம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் முதன்மையாகத் தேறி உயர்தரப் படிப்பிற்குத் திருச்சிக் கல்லூரியில் சேர்ந்தான். தனது ஒரே சகோதரி விமலாவின் பேரில் அவனுக்கு அளவற்ற அன்பு உண்டு. அதுசமயம் அவனுக்கு உயிர்த் தோழனாக ஏற்பட்டான் சுந்தரநாதன் என்னும் அரிய நண்பன்; சுந்தரநாதனும் மாயூரநாதனுடன் கல்லூரியில் அப்பொழுது சேர்ந்தான். சுந்தரநாதன் தனது தாய் தந்தையர்களைத் தனது இளமையிலேயே இழந்த துர்பாக்கியன். அவனுக்கும் ஒரேவொரு தங்கை உண்டு. தாய் மாமனது உதவியால் படிப்பதற்குத் தக்க வசதி யேற்பட்டது. மாயூரநாதனும் சுந்தரநாதனும் உடல் பிரியா நண்பர்களாய் வாழ்ந்து வந்தனர். எங்கு பார்த்தாலும் அவர்களை ஒருங்கே காண முடியுமே யல்லாது தனியாகக் காணுதல் மிகவும் அருமை.

விமலாவுக்குப் பத்து வயது நடக்கையிலேயே, அவளுக்கு விவாக வயது வந்து விட்டதெனக் கருதி, கைலாசமையரும் அரவது தர்ம பத்தினி பார்வதியம்மாளும் தக்க வரனைத் தேட வாரம்பித்தனர். உடனே அவள் பள்ளிக்குச் செல்வதும் நிறுத்தப்பட்டது. விவாகம் செய்வதற்குத் தக்க வயது வரவில்லை யென்றும், சாவகாசமாக 16 வயதில் கலியாணம் செய்யலாமென்றும், பள்ளிக்கூடத்திற்குச் செல்வதை நிறுத்த வேண்டாமென்றும் மாயூரநாதன் தனது பெற்றோர்களுடன் எவ்வளவோ போராடியும், செவிடன் காதில் சங்கூதினது போலாயிற்று. இவற்றிற்கெல்லாம் தனது பெற்றோர்களுடன் உடந்தையாக விருந்தவன் கைலாசமையரின் இரண்டாவது புதல்வன் ராமநாதனே.

அக்காலத்தில் சாரதாச் சட்டம் கிடையாது. ஆகவே வளரும் பெண் குழந்தைக்குக் கலியாணக் காலம் சமீபித்து விட்டதெனப் பெற்றோர்கள் நினைத்து விமலாவின் பதினோருவது வயதிலேயே அவளுக்குக் கலியாணத்தை நிறைவேற்றி வைத்தனர்.

மாப்பிள்ளை பையன் ராமமூர்த்தி மிகவும் புத்திசாலி. கைலாசமையருக்குச் சிறிது எட்டிய பந்து. ராமமூர்த்தியின் தாய் தந்தை

யர்கள் திருச்சிக்குப் பக்கத்தில் புத்தூர் என்னும் கிராமத்தில் குடியிருந்தார்கள். பையனும் திருச்சிக் கல்லூரியிலேயே வாசித்து வந்தான்.

ராமமூர்த்திக்குச் சாம்பமூர்த்தி என்ற இளைய சகோதரன் ஒருவனுண்டு. விமலா பெரியவளாவதற்கு முன் பல நல்ல நாட்களில், தன் புக்ககத்திற்குப் போய் விட்டு வருவது வழக்கம்.

விமலாவுக்குப் பதின்மூன்று வயது நடக்கையில், மாயூரநாதன் எம். ஏ. பரீட்சையில் முதலாவதாகத் தேறினன். முதலாவதாகத் தேறியது குறித்துப் பல பரிசுகள் அவனுக்கு வழங்கப்பட்டன. பெற்றோர்களின் மகிழ்ச்சியை அளவிட்டுரைக்க முடியாது. கைலாசமையர் தாம் எண்ணியபடி மாயூரநாதனை ஐ. சி. எஸ். பரீட்சைக்கு அனுப்பவேண்டுமென்று போாவலுட னிருந்தார்.

மாயூரநாதனின் உயிர்த் தோழனை சுந்தரநாதனே எம். ஏ. பரீட்சையில் சாதாரணமாகவே தேறினன். ஆசிரியனுக இருக்க வேண்டுமென்று தனது இளம்பிராயத்தி லிருந்தே எண்ணி வந்தவனுதலால், எல். டி. பரீட்சைக்குப் படிக்கச் சென்னை சென்று விட்டான்.

மாயூரநாதனே அலகாபாத்தில் நடந்த ஐ. சி. எஸ். தேர்தலில் முதன்மையாகத் தேறி லண்டனுக்குப் போய் விட்டான்.

விமலா சிறந்த குணங்கள் வாய்ந்த சாமர்த்தியமுள்ள பெண்ணுகையால் புக்ககத்தில் மிகவும் கொண்டாடப்பட்டாள். சகல காரியங்களிலும் நன்கு பழகி, வீட்டுக் காரியங்களைச் செவ்வையாக உணர வேண்டுமென்று எண்ணிய மாமன் மாமி முதலியோர், விமலா பெரியவளாவதற்கு முன்பே அவளைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டனர். 'மாமி மெச்சிய மருமகளில்லை' என்ற வாசகத்தைப் பொய்யாக்கி மாமி மெச்சிய மருமகளானுள் விமலா.

நம்முடைய எண்ணப்படியோ விருப்பத்தின்படியோ, உலகில் காரியங்கள் நடப்பதில்லை. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கின்றது. பி. ஏ. வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த விமலாவின் கணவன் ராமமூர்த்தி இன்புளுயன்சா காய்ச்சலில் திடீரென மாண்டு போனுன். விமலா தன்னுடைய பதின்மூன்ருவது வயதிலேயே விதவையானுள். விமலாவின் வைதவ்யத்தை நினைத்து உற்ருர் உறவினர் யாவரும் அழுது தீர்த்து, அவரவர் வீடு போய்ச் சேர்ந்தனர். கலியாணம் என்பது என்ன? விதவையின் தன்மை இத்தகையது? என்னும் விஷயங்களைக் கனவிலும் உணர்ந்தறியாத சின்னஞ் சிறுமியாகிய விமலாவுக்குக் கலியாணமும் அதன் பின்னர் வைதவ்யமும் வந்து சேர்ந்தன. என்னே இந்து சமூகத்தின் முறை!

விமலாவின் குணாதிசயங்களை மெச்சி, அவளுடைய மாமன் மாமியார் அவளைப் புக்ககத்திலேயே வைத்துக் கொண்டார்கள். விமலா பெரிய மனுஷியானாள். அன்றே அவளைத் துன்பம் தொடரத் தலைப்பட்டது.

ராமமூர்த்திக்குச் சாம்பமூர்த்தி என்ற ஒரு இளைய சகோதரன் இருந்தான் என்பது நமக்குத் தெரியும். இந்தச் சாம்பமூர்த்தி வாஞ்சைக்கு அதிகமான உணர்ச்சியை விமலாவிடம் காண்பிக்க ஆரம்பித்தான். உலக விஷயங்களில் அதிகமாக அநுபவமிராத சின்னஞ் சிறுவயதில் அதிக தவறுகள் நேருவது பிரத்தியட்சம். அத்தகைய சிறுவயதில் செய்யக்கூடிய தப்பிதங்களை மகத்தானதாக நினைத்துக் கொண்டு நமது இந்து சமூக வாழ்வைக் குலைத்துக் கொள்வது இந்துக்களின் பெரும் பேதமை.

வாஞ்சைக்கு அதிகமான உணர்ச்சியை.........காண்பிக்க.........

விமலாவுக்கும் சாம்பமூர்த்திக்கும் கள்ளநட்பு ஏற்படலாயிற்று. சின்னஞ் சிறுமியாகிய விமலா என்ன செய்வாள்? பருவக் கோளாறினால் ஏற்பட்ட சிறு தப்பிதங்களைப் பெரிதாக மதிக்கலாமா? தனது சிறு வயதிலேயே தனக்குக் கலியாணமாகவில்லையே என்று விமலா புரண்டு புரண்டு அழுதாளா? எய்தவனிருக்க அம்பென்ன செய்யும்? ஒன்றுமே வினைத் தெரியாத சிறு பருவத்தில் விமலாவுக்குக் கலியாணத்தைச் செய்து வைத்த பெருந் தப்பிதத்திற்குப் பாத்திரர்களாகிய தாய் தந்தையர் இருக்கும் போது விமலா என்ன செய்வாள்?

விமலாவுக்குக் கர்ப்பம் வளரத் தலைப்பட்டது. எத்தனை நாள் தான் திருட்டுத்தனத்தை மறைத்து வைக்க முடியும்? சாம்பமூர்த்தி விமலாவை வெறுக்க ஆரம்பித்தான். விஷயம் வெளி வருவதற்கு முன்னரே சாம்பமூர்த்தி எங்கேயோ கம்பி நீட்டி விட்டான். விமலா தனது நிலைமையை நினைத்துப் பெரிதும் வருந்தினாள். பாவம்! அவள் என் செய்வாள்?

விமலா கர்ப்பமாயிருக்கும் சங்கதி மாமன் மாமிக்குத் தெரிந்தது. இந்து சமூகத்தைத் தாங்களே தாங்கிக் கொண்டிருப்பவர்களாக எண்ணிக்கொண் டிருக்கும் விமலாவின் மாமன் வீட்டார்

தங்களுக்குப் பெரியதோர் அவமானம் வந்து விட்டதாகக் கருதி, விமலாவை விபசாரிக் கர்ப்பிணி எனத்திட்டி அவளை வீட்டை விட்டு வெளியே விரட்டி விட்டனர். சாம்பமூர்த்தி எங்கு போனானோ தெரியவில்லை. அவனைக் குறை கூறுவார் ஒருவரையுங் காணோம்.

'ஆணெல்லாங் கற்பை விட்டுத் தவறு செய்தால், அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ?' என்ற தமிழ் நாட்டுக் கவிச் சக்கரவர்த்தியின் மொழி எவ்வளவு உண்மையானது.

ஐயோ பாவம்! விமலா என்ன செய்வாள்? எங்குத்தான் செல்வாள்? இளம் நங்கையாகிய விமலாவுக்கு பதினைந்து வயது முடியுமுன்னரே கலியாணமும், வைதவ்யமும், விபசாரிக் கர்ப்பிணி என்ற பட்டமும் கிடைத்து விட்டன.

புக்ககத்தார் தன்னைத் தூத்தி விட்டதை நினைந்து நினைந்து மனம் புண்ணாகி, நொந்த மனத்துடன் விமலா தனது பெற்றோர்களின் வீட்டிற்குச் செல்லலானாள். அவள் வேறு எங்குச் செல்ல முடியும்? தன்னை எவ்வளவோ அன்பாகவும், ஆதரவாகவும், வளர்த்த தனது தாய்தந்தையர் தன்னை மிகவும் அன்புடன் ஏற்றுக் கொள்வார்கள் என எண்ணினாள். ஆனால் புக்ககத்தாருக்கு நேர்ந்த அவமானம் பிறந்தகத்தாருக்கும் இல்லாமல் போகுமா? இந்து சமூகமே அழிந்து விட்டதாகக் கருதினார்கள் விமலாவின் தாய் தந்தையர். விபசாரி என்ற பெயர் பெற்ற பின் விமலாவுக்கு இந்து சமூகத்தில் இடமேது?

'எங்கள் வயிற்றில் பிறந்த பெண்ணானாலும் எங்கள் கண் முன் நில்லாதே. எங்கள் வீட்டில் நீ காலெடுத்து வைக்காதே, கண்டிப்பாய் உன்னை இங்கு இருக்க விடமாட்டோம். எக்கேடாவது கெட்டுப்போ. நீ இருப்பதைக் காட்டிலும் எங்கேயாவது ஆற்றிலோ குளத்திலோ வீழ்ந்து இறந்தொழிந்து போ' என வாயில் வந்தவாறு வைது வீட்டு கதவைக் கெட்டியாகத் தாளிட்டு விட்டனர். 'பெற்ற மனம் பித்து' என்று கூறுகிறார்களே. அது எவ்வளவு தூரம் உண்மை என்பது இது மூலமாகத் தெரிகிறதல்லவா?

தன் பெற்றோரால் ஏற்கப்பட மறுத்த விமலா, தான் சிறு வயதில் ஆடியோடிக் களித்த தனது வீட்டின் வெளித் திண்ணையில் துயரமே உருவெடுத்த பாவைபோ லிருந்தாள். 'தனது அண்ணனாகிய ராமநாதனோ, அவனது சம்சாரமோ ஒரு அன்பு வார்த்தையாகிலும் தன்னிடம் பேசவில்லையே. தனது அண்ணனான மாயூரநாதன் இவ்விட மிருந்தாலாவது சிறிது மனம் ஆறுதலடையலாம். அவனோ லண்டனுக்குச் சென்று ஒரு வருடத்திற்கு மேலாகிறது. அவன் எப்பொழுது வருவான் என்பதும் தெரியவில்லை. அவன் திரும்பி வந்தால்தானென்ன? அவன்தான் நம்மை ஏற்றுக் கொள்

வானென்பது என்ன நிச்சயம்?' எனநினைத்து விம்மிவிம்மி அழுதாள். அவளது துயரத்தைக் கண்ட இரவோ பின்னும் இருண்டது. துக்கம் அதிகரித்துக் தூக்கம் வரவில்லை. பின்பு ஒருவாறு தேறி, 'இனி இவ்வுலகில் இருந்துதான் பயன் என்ன? உயிரில்லாத தர்மங்களையும் அனுபவத்துக் கொவ்வாத சட்டங்களையும் கொண்டுள்ள இந்து சமாஜத்தில் நான் இருக்க இடம் இல்லையெனில், நான் இவ்வுலகிலிருந்தும் பயன் இல்லை. இறப்பதுதான் சிறந்தது. நான் இறத்தலினாலாவது இந்துசமூகம் சிறிது தூய்மையை அடையட்டும், என்னை வீட்டை விட்டுத் துரத்தியபோது எனது தாய் தந்தையர் நான் இறப்பதற்குரிய வழியொன்றைக் காட்டி விட்டுச் சென்றார்களே! அவ்வளவு அன்பையாவது செலுத்தினார்களே! 'ஆற்றிலோ, குளத்திலோ வீழ்ந்து இறந்தொழிந்து போ' என்ற வாக்கியம் எவ்வளவு அருமையான வாக்கியம்! காவேரியம்மன் பக்கத்தில் ஓடும்போது நமக்குக் குறைவென்ன?' என்றிவ்வாறு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கடைசியாக காவேரியாற்றில் வீழ்ந்து இறப்பதற்குத் தீர்மானித்து விட்டாள்.

மாதமோ ஆடி மாதம். காவேரி யாறு கரை புரண்டு ஓடுகிறது. நேரமோ காலை நான்கு மணியாகப் போகும் சமயம். இன்னும் இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் பொழுது நன்கு புலர்ந்து விடும். தில்லை நாயகன் படித்துறைப்பக்கம் செல்லலானாள்.

இஃதிவ்வாறாக, மாயூரநாதனின் நண்பனான சுந்தரநாதனே இப்பொழுது திருச்சிக் கல்லூரியில் ஆசிரியனாக இருந்து வருகிறான். சுந்தரநாதன் தினந்தோறும் காலையில் நாலு மணிக்கே எழுந்து காவேரி ஸ்நானம் செய்துவிட்டு வருவது வழக்கம். தவிர அன்று காலை, சிறிது துரிதமாகவே தனது படுக்கையைவிட் டெழுந்து, காலைக் கடன்களை முடிக்க எண்ணினான். காரணம், அன்று காலை 8மணிக்கு மாயூரநாதன் சென்னையிலிருந்து திருச்சி வருகிறான். மாயூரநாதன் ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் போனவர்களில் மிகவும் சிறந்தவன் எனப் பெயர் பெற்றான். லண்டனிலிருந்து நேரே பம்பாய்வந்து இறங்கி, அங்கிருந்து முந்தின நாள் சென்னை வந்து சேர்ந்தான். சென்னையிலிருந்து அன்று காலை 8 மணிக்கு தான் திருச்சி வருவதாகவும், தன்னைத் திருச்சி ஜங்ஷனில் சந்திக்கும்படியும் தனது நண்பன் சுந்தரநாதனுக்கு மாயூரநாதன் கடிதம் எழுதி யிருந்தான்.

ஆகவே அன்று காலை சுந்தரநாதன் வழக்கப்படி தில்லை நாயகன் படித்துறைக்குப்போய் ஸ்நானம் செய்துகொண் டிருந்தான். சிறிது தூரத்தில் அழுகைக் குரலொன்று கேட்பதாகச் சுந்தரநாதனுக்குத் தோன்றியது. அச்சமயத்தில், அத்தகைய அழுகைச் சத்தம் கேட்பதற்குரிய காரணம் என்ன வென்று சற்று உற்று நோக்கினான்.

தான் ஸ்நானம் செய்யுமிடத்திலிருந்து 100 அடி தூரத்தில் ஒரு உருவம் நின்றுகொண்டிருப்பது தென்பட்டது. அது ஒரு பெண்மணியின் உருவமாகவும் தோன்றியது. அவ்விடம் ஒருவரும் இல்லை என எண்ணி, தன்னந் தனியாகத்தான் இருப்பதாக நினைத்து, விமலா தனது கருத்தை முடித்துக் கொள்ளவே அவ்விடம் கிழக்குப் பக்கத்தைப் பார்த்து நின்று கொண்டு, நெஞ்சமுருகிக் கரைந்து அழுவாளாயினள்.

கிழக்குப் பக்கமாக தண்ணீரின் மேற்படியில் நின்று கொண்டு, தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டு பிரலாபிக்கும் உருவம் ஒரு பெண்மணியென கண்டதும் சுந்தரநாதனுக்குச் சிறிது திகில் உண்டாயிற்று. தண்ணீரில் வீழ்ந்து ஒருவேளை தனது உயிரை மாய்த்துக் கொள்ளுவாளோ எனப் பயந்தான். நீந்துவதில் மிகவும் பழகியிருந்தபடியால் என்னதான் செய்கிறாள் எனத் துணிந்தவண்ணம் நோக்கினான். சுந்தரநாதன் மேற்புறமும் அப்பெண்மணி கீழ்ப்புறமும் இருந்தபடியால் அப்பெண்மணி யாரெனக் காண முடியவில்லை. தவிரவும் அப்பெண்மணி எதிர்ப்புறமாகத் தனது பார்வையைச் செலுத்தி யிருந்தபடியால் கண்டுகொள்ள முடியவில்லை. சுந்தரநாதன் மேற்குப்பக்கத்தில் இருந்ததால் ரொம்பவும் சௌகரியமாக இருந்தது. சிறிது சிறிதாக அப்பெண்பா லறியாவண்ணம் அவளருகில் நெருங்கினான். மாயூரநாதன் திருச்சியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அடிக்கடி மாயூரநாதனின் வீட்டிற்குச் சென்று வந்தவனாகையால், சுந்தரநாதனுக்கு விமலாவை நன்கு தெரியும். சிறிது நெருங்கி வந்து அவளுடைய குரலைக் கேட்டதும், அது விமலாவின் குரலாக இருந்தது. நெஞ்சம் திடுக்கிட்டான் சுந்தரநாதன். இச்சமயத்தில் விமலா இவ்விடம் வருவதற்குக் காரணமே தெரியவில்லை. ஒன்றும் சத்தம் செய்யாமல் கவனித்தான்.

விமலாவோ காவேரியம்மனை மீண்டு மொருமுறை வணங்கி, 'ஐயோ! இந்து சமூகமே! யான் இறத்தலினாலாவது உனது மனம் சிறிது இளகட்டும். இன்னும் என்னைப்போன்று எத்தனை பெண் மணிகள் காவேரி யம்மனுக்கு இரையாக இருக்கின்றார்களோ தெரியவில்லை. உன்னுடைய மனம் என்ன கல்லினும் வலிதோ; இரும்பினும் வலிதோ; இருடியத்தினும் வலிதோ; இனியாவது நீ சிறிது தூய்மை யடைவாய் என நினைக்கிறேன். இந்து சமூகம் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டாலும் காவேரி யம்மனாவது என்னை ஏற்றுக்கொள்ளச் சித்தமா யிருக்கிறாளே" என நெஞ்சிரங்கக் கூறிவிட்டுத் திடீரெனக் காவேறியாற்றில் வீழ்ந்து விட்டாள்.

இமை கொட்டாமல் இவைகளை யெல்லாம் கவனித்து வந்த சுந்தரநாதனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. விமலா பத்தடி தூரம்

போயிருக்க மாட்டாள். சரேலெனப் பாய்ந்தான் தண்ணீருக்குள். நன்கு நீந்திப் பழகினவனாதலால் இரண்டே நிமிஷத்தில் விமலாவைக் கரையேற்றினான்.

விமலாவோ பிரக்ஞையற்றிருந்தாள். உடனே ஒருவண்டியை வைத்து விமலாவைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் சுந்தரநாதன். முதலில் செய்யவேண்டிய சிகிச்சைகளை யெல்லாம் செய்தான். சிறிது பிரக்ஞை வந்தது. உடனே டாக்டர் ஒருவரை வரவழைத்து அவளுக்குத் தக்க மருந்துகளைக் கொடுக்கச் செய்தான். பாவியாகிய தன்னைக் காத்து ரக்ஷித்தது தனது அண்ணனின் அரிய நண்பனாகிய சுந்தரநாதனெனக் கண்டாள் விமலா. கண்ணிலிருந்து நீர் அரும்பிற்று.

காலை சரியாக எட்டுமணிக்குச் சுந்தரநாதன் மாயூரநாதனைத் திருச்சி ஜங்ஷனில் சென்று சந்தித்தான். ஆனால், சுந்தரநாதன் தன்னுடைய முகத்தில் மகிழ்ச்சியை வருவித்துக் கொள்வதற்கு எவ்வளவோ முயன்றும் முடியாமற் போய்விட்டது.

நண்பர்கள் இருவரும் வண்டியொன்றில் ஏறிக்கொண்டனர். சுந்தரநாதன் முகத்தில் ஒருவித மனக்கவலை யிருப்பதை மாயூரநாதன் நன்கு கவனித்தான். போகும் வழியில் எல்லா விஷயங்களையும் சாவதானமாகச் சொன்னான் சுந்தரநாதன். தன்னுடைய தாய் தந்தையரின் கல்மனத்தை நினைக்க, மாயூரநாதனுக்குப் பெருந் துயரமுண்டாயிற்று. இப்படியும் உலகத்தில் மாதா பிதாக்கள் இருக்கின்றார்களா என எண்ணினான். அவளுடைய ஆருயிரைக்காத்தவன் தனது நண்பன் சுந்தரநாதனென அறிந்ததும் ஆனந்தமடைந்தான். நேரே தன்னுடைய பெற்றோர்களின் வீட்டுக்குப் போகாமல், தன் பேரன்புக்குரிய தனது உடன் பிறந்தாள் விமலா இருக்கும் இடமாகிய சுந்தரநாதனின் வீட்டிற்கே சென்றான். விமலாவைப் பார்த்தவுடன் ஓவெனக் கதறினான். அவளும் அண்ணாவெனக் கதறினாள். பெருந்தன்மையாளனாகிய சுந்தரநாதன் அவர்களிருவருக்கும் மனம் ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னான். மாயூரநாதன் சிறிது ஆறுதலடைந்து 'ஐயோ! விமலா! உன்னை இக்கதியிலா நான் காணவேண்டும். கல்மனம்படைத்த நமது தாய்தந்தையர் உன்னை இக் கதிக்கா ஆளாக்கினர். எனது பேரன்புக்குரியவளாகிய உன்னை நான் உயிருடனாவது பார்த்தேனே. எனது உயிர் நண்பன் சுந்தரநாதன் இல்லாவிடில் உன்னை இப்பிறப்பில் நான் எவ்வாறு உயிருடன்காண்பேன்?

'பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னையுள பொருளை யெல்லாம் பெறலாகும்'

ஆனால் இப்பிறப்பில் உடன் பிறப்பை மாத்திரம் பெறலாகுமோ? உன்னை உயிருடன் கண்ட எனக்கு அரியது வேறு ஒன்று உண்டோ? நீ அநுபவித்த கஷ்டங்களை யெல்லாம் மறந்துவிடு. என் உயிரிருக்கு மளவும் உன்னைக் கைவிடமாட்டேன். உன்னை உயிரோடு காணவைத்த சுந்தரநாதனுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய

வல்லேன்' எனத் தனது மனக்கருத்தை வெளியிட்டு விமலாவைத் தேற்றினன். தனது தமயனுடைய அன்புகலந்த வார்த்தைகளைக் கேட்டு விமலா மனந்தேறி யிருந்தாள்.

தம்மால் தூரத்தி யடிக்கப்பட்ட விமலாவை மாயூரநாதன் ஏற்றுக்கொண்டான் என்பதைக்கேட்டு, கைலாசமையரும், பார்வதியம்மாளும், ராமநாதனும், மாயூரநாதனைக் காணவரவேயில்லை. ஆயினும் தனது தாய் தந்தையர்களைத் தானுவது போய்ப் பார்த்து விட்டு வரலாமென எண்ணி ஒரு நாள் தனது பெற்றோரின் வீட்டிற்குச் சென்றுன் மாயூரநாதன். அங்கு ஒருவராவது இவனை மதிக்கவில்லை; பேசவும் இல்லை. பெற்றதாயே வாயை மூடிக்கொண்டிருக்கும்போது மற்றவர்களைப் பற்றிப் பேச்சென்ன. ஐ. சி. எஸ். பரீட்சையில் முதலாவதாகத் தேறி சிறப்புடன் வந்துள்ள தங்கள் புத்திரனுகிய மாயூரநாதனைக் காட்டிலும், விமலாவால் இந்துசமூகத்திற்கு வந்துள்ள அவமானமல்லவோ அவர்களுக்குப் பெரிதாகப் பட்டுவிட்டது. பேசாமல் மாயூரநாதன் திரும்பி விட்டான்.

மாயூரநாதனை நாகப்பட்டணத்திற்கு, சப்கலெக்டராக நியமித்திருப்பதாக உத்திரவு வந்தது. மாயூரநாதன் விமலாவைக் கூட்டிக்கொண்டு தனது அரிய நண்பன் சுந்தரநாதனிடம் விடைபெற்று, நாகப்பட்டணம் போய்ச்சேர்ந்தான். நாகப்பட்டணம் போய்ச் சேர்ந்த நான்கு மாதத்திற்கெல்லாம் விமலா ஒரு அழகிய ஆண் மகவை ஈன்றுள். விதவாவிவாகத்தில் மாயூரநாதன் மிகவும் பற்றுக்கொண்டிருந்தமையால் விமலாவுக்கு கூடியசீக்கிரம் கலியாணம் செய்துவைக்க வேண்டுமென எண்ணினன். தன்னை ஆபத்தினின்றும் காப்பாற்றி அருள்புரிந்தவரும், சுந்தர புருஷருமாகிய சுந்தரநாதரையே விமலா நேசித்தாள். சுந்தரநாதனும் விமலாவையே திருமணம் செய்துகொள்ள விரும்பினன். சுந்தரநாதனுக்கு விமலாவைக் கொடுப்பதைக் காட்டிலும், வேறு கைம்மாறு செய்யமுடியாதென எண்ணிய மயூரநாதன் ஒரு சுபமுகூர்த்தத்தில் அவ்விருவருக்கும் விமரிசையாகத் திருமணத்தைச் செய்துவைத்தான். விமலாவின் குழந்தைக்கு அப்பொழுது ஓராண்டு நிரம்பியது. சுந்தரநாதனின் விருப்பப்படி அக்குழந்தைக்குக் காந்தி நாதனெனப் பெயரிடப்பட்டது.

சுந்தரநாதனுடைய தங்கை அன்னபூரணியை மாயூரநாதன் மணஞ்செய்து கொண்டான். வைதவ்யமானது வைபவமாகவே முடிந்தது. சமயமேற்பட்டபோதெல்லாம் சுந்தரநாதனும் விமலாவும் நாகப்பட்டணத்திற்கு வந்து போய்க்கொண் டிருக்கிறுர்கள். மாயூரநாதன் அன்னபூரணியுடன் சுகமாகக் காலங் கழித்து வருகிறுன். கைலாசமையரும், பார்வதியம்மாளும் சொந்த கிராமத்திற்கே போய்விட்டதாகக் கேள்வி. அவர்களைக் குறித்துக்கவலைப்படுவார் ஒருவருமில்லை.

# கண் விழியுங்கள்! எதிர்பாருங்கள்!!

[கோபால சமுத்திரம் ச. நெல்லையப்பர்]

வாழ்க! தமிழரசு வாழ்க!! நலமுடன்
ஆழ்ந்த கருத்தால் அறிவுற வோங்குக!!!

பாரத நாட்டு மக்களே! துயிலெழுங்கள்! புது வருடம் பிறந்து விட்டது! நம் முன்னேற்றத்திற்குப் பற்றுக் கோடாகிய பேருபகாரியை எதிர்பாருங்கள்!!! தமிழரசின் தைத் திங்களை உற்று நோக்குங்கள்! ஊழியம் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை உன்னிப்பாருங்கள்! சந்தாதாரர்களாக ஆகுவதற்கு முன் வாருங்கள்! எது தடபுடலாக ஆரம்பித்து விட்டதாக கோபித்து தடியடி தூக்க வேண்டாம, ஏன்? எதற்காக? என்று வினவின், சற்று நிதானமாயிருந்து கேளுங்கள்.

வறுமையின் கொடுமையால் பீடிக்கப்பட்ட நமது முன்னேற்றத்திற்கு ஏதுவாயுள்ளது முதன் முதலில் பத்திரிகையுலகேயாம். நம் தமிழபிவிருத்தியையும், தேச முன்னேற்றத்தையும் நாட்டுப்பற்றையும் கருதி வரும் பத்திரிகைகளில் 'தமிழரசே' தலைசிறந்தது என்பதில் யாதொரு ஐயமுமில்லை. பத்திரிகை என்றால் என்ன? அதனால் மக்களுக்கு யாது பயன்? என்ன முன்னேற்றத்தைக் கொடுப்பது? என்னும் கொள்கைகளையே கொண்டு பொலிவுற்று விளங்கும் இத் தமிழரசை நாம் ஆதரியாதது ஏனோ! வறுமையின் கொடுமை இத்தன்மையது என்றுணர்ந்து அதற்குத் தக்கபடி தகுந்த சகாயத்துடன் வெளிவரும் இப்பத்திரிகையை ஆதரிப்பது நம் கடமையன்றோ!

எளிய செந்தமிழ்நடையும், ஆழ்ந்த கருத்தை விளைவிக்கும் அரிய கட்டுரையையும் உடைய தமிழரசே! உன்னால் உதவி யடைகின்ற நாங்கள் எங்களால் செய்யக்கூடிய சிறிய உதவி யாதெனில், உன் அபிவிருத்திக்கு உன்க்கு சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்க நாங்கள் என்னாளும் மறவோம் என்பதே. 'குடியுயரக் கோனுயரும்' என்பது எங்கள் மனதில் பதிந்திருக்கிறது.

நலம்பெறும் சிறந்த கட்டுரையாளர்களையும், ஆசிரியரையும் பெற்ற தமிழரசே! நீடூழிகாலம் வாழ்க!! கடவுள் கருணை செய்வாராக!!! மேன்மேலும் பத்திரிகை ஓங்குக!!!!

# மகா சக்தி கவசத்தின் மகிமை

['நளினம்']

பத்மவலம் நாயுடு சங்கக் கட்டிடத்தில் பெருங்கூட்டம். ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அணியணியாக வீற்றிருந்தனர். அவர்களிடையே சந்தோஷ ஆரவாரமும், கரகோஷமும் அடிக்கடி ஏற்பட்டன. இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குங் காரணமென்ன? நமது ரங்க பாஷியம் பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் முதன்மையாகத் தேரியதைக் கொண்டாடுவதே யாகும். அப்பாராட்டுக் கூட்டத்தில் அச்சமூகப் பெரியார் பலர் ரங்கபாஷியத்தை வானமளாவப் புகழ்ந்து பேசினர். தேவலோகப் பிரகஸ்பதியே ரங்கபாஷியமாக இம்மண்ணுலகத்தில் அதிலும் தங்கள் நாயுடு சமூகத்தில் அவதரித்திருக்கிறார் என்றுகூட வற்புறுத்திக் கூறினார்கள் என்றால் வாசக நேயர்கள் ஆச்சரியப்படக்கூடாது. ரங்கபாஷியம் இப்புகழ் மாலைகளை யணிந்து எழுந்து நின்று தனது நன்றியறிதலைத் தெரிவிக்-

கையில் அவனுடைய தோள்கள் மேருமலைபோல் பூரித்துப்பருத்தன. ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி மாணவனைப் போல் கம்பீரமாக நின்று பலவித அபிநயங்களோடு ரங்கபாஷியம் தன் கையை அடிக்கடி மேஜைமீது பலமாக ஓங்கி யடித்தும், பூட்ஸ் கால்களை அடிக்கடி தரையில் உதைத்தும் சப்தஞ்செய்து பேசியதைக் கண்டு பல பெண்கள் அப்படியே சொக்கி மயங்கிப் போயினர். முதியோர் பலர் தங்கள் மகளிரை ரங்கபாஷியத்துக்குக் கொடுக்க அப்போதே விரும்பினர். கூட்டங்கலைந்து ரங்கபாஷியம் பிரமுகர் பலர் சூழ

வெளிவரும்போது கழுத்தில் விழுந்த ஏராளமான மலர் மாலைகளைச் சுமக்க முடியாது தளர்நடை நடந்து வந்தான். இவ் வைபவத்தைக் கண்டால் யாருக்குத்தான் பொறாமை யுண்டாகாது?

* * *

இரண்டு வருடங்கள் விரைந்து சென்றன. ஆனால் ரங்கபாஷியத்துக்கு உத்தியோகம் மட்டுங் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்குக் கால் விலங்குகளாக மனைவியும், ஆறுமாதக் குழைந்தையுமிருந்தன. செல்வத்தில் பிறந்து வளர்ந்த சீமாட்டியான அவனது மனைவி செய்யுந் தடபுடல் காரியங்கள் குடும்பத்தையும், அவனையும் மிகவும் நெருக்கடியில் கொண்டு வந்துவிட்டது. பொருள் வருவாய்க் கேதுவாகிய உத்தியோகத்தைப் பெறுவதற்கு அவன் எவ்வளவோ பகீரதப் பிரயத்தனமெல்லாஞ் செய்தான். 'மெட்ராஸ் மெயில்' முதலி ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் 'Wanted' விளம்பரங்களையே கவனிப்பான். அவற்றில் குறிப்பிடும் விலாசங்களுக்கெல்லாம் தவறாது 'அப்ளிகேஷன்' அனுப்பி யனுப்பி ஒன்றும் பயன் காணாது அலுத்துப் போனான். சென்னையிலுள்ள பிரபல கம்பெனிகள், ஆபீஸ்களுக்கெல்லாம் நேரே சென்று சென்று அங்குள்ள மானேஜர், சொந்தக்காரர்களிடம் தன்னுடைய கல்வித் தகுதிகளாகிய யூனிவர்ஸிடி டிகிரிகளையும், ஆசிரியர்கள் அளித்த நற்சாட்சிப் பத்திரங்களையும் காட்டி, தன் குடும்ப நிலைமையை அவர்கள் மனமிரங்கும்படி எடுத்துச் சொல்லி, தனக்கு ஏதாகிலும் வேலை கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டு வந்தான். ஆனால், அவனுக்கு அங்கெல்லாம் பாதகமான பதில்களே கிடைத்து வந்தன. ரங்கபாஷியத்திற்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தினந்தோறும் அவனது மனைவி செய்து வரும் சித்திரவதையை அவனால்




சகிக்க முடியவில்லை. ஒரு தம்பிடியும் வருவாயில்லாத இக்காலத்தும், அவள் தன் உதாரித் தனத்தை விடாது, உள்ள பொருளை எல்லாம் விற்று தடபுடலாகச் செலவு செய்வதைக்கண்டு ரங்கபாஷியம் மனம் புழுங்கினான். இதனால் அவன் வீடு வெறு வீடாய்ப் போய்விட்

டது. கையிலோ ஒரு காசும் இல்லை; கடன் கொடுப்பாரோ யாரு மில்லை. என் செய்வாள் ரங்கபாஷியம் மனைவியான ராதாபாய். குழந்தையுட்பட அனைவரும் பட்டினி கிடக்கவேண்டி நேர்ந்தது. ரங்கபாஷியம் அப்ளிகேஷனும் கையுமாய் ஆபீஸ் ஆபீஸாய் நுழைந்து பார்த்துவிட்டு, ஒன்றும் பயன் காணுது தள்ளாடித் தள்ளாடி மெல்ல நடந்து சோர்ந்த முகத்தோடு வீடு வந்துசேர்வான். அங்கு தன் இளம் மனைவியின் வாடிய முகத்தையும், பசியினல் இடை விடாது வீறிட்டழும் குழந்தையின் நிலைமையையுங் கண்டு கண்ணீர் வடித்து மயங்கி விழுவான். ஒரு நாளாயிற்று; இரண்டு நாளாயின. பட்டினி கிடந்து வாழும் பரிதாப நிலைமை மூன்ருவது நாளும் நீடிக்க லாயிற்று. ராதாபாய்க்கு ரௌத்ராகாரமான கோபம் வந்தது. அன்று மாலை ரங்கபாஷியம் ஏங்கிய மனத்தனாய் வீடு நுழைந்தான். இவனைக் கண்டதும் ராதாபாய் பெண் புலிபோல் சீறி விழுந்து, "இன்றும் வெறுங் கையோடுதான் வந்திராக்கும். இப்படி ஊரைச் சுற்றி விட்டுச் சாயங்காலமானல் வீடு சேருவதென்ற நியதிவைத் துக்கொண்டிருந்தால், நாங்கள் எல்லாம் எப்படிப் பிழைப்பதென்று நினைத்துக்கொண் டிருக்கிறீர்கள்? ஒரு தம்பிடி கூட சம்பாதிக்க வகை தெரியாத உங்களுக்குப் பெண்டாட்டி எதற்கு? பிள்ளை எதற்கு?—உம். ஒரு சாதாரண கட்டை வண்டி யிழுப்பவனுக்கு வாழ்க்கப்பட்டிருந்தாலும் நான் சுகத்தை யடைந்திருப்பேன். பாழாய்ப்போன என் பெற்ரோர்கள் படிப்பு படிப்பு என்று அழுது, உனது பி, ஏ. பட்டத்துக்கு என்னைப் பலியிட்டார்கள். கௌரவத் துக்கு மாரடித்துக் கொண்டு பட்டினி பசியாய்க்கிடந்து சித்திரவதை படுவதைவிட, ஏதாயினும் குளம் குட்டையில் விழுந்து இறப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது' என்று கர்ஜித்து விட்டு, மூக்கைச் சீந்திப் போட்டாள். இவளது கொடுமையான வார்த்தை ரங்கபாஷ்யத்தின் புண்பட்ட மனதில் வேல் பாய்ந்தது போலி ருந்தது. அவனது உடலில் ஓடும் இரத்தம் கொதிப்படைந்து உரைந்து போயிற்று. பொறுமைக் குணம் காற்றில் பறந்தது. அவன் முகம் சிவந்து கண்களில் தீப்பொறி பறக்க ராதாபாயை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு, விரைவாக வெளியேறினன். வெளி வாயிலை யடைந்ததும் அவன் திரும்பி உள்ளே பார்த்தான். என்ன நினைத்தானே. அவன் மேலும அங்கு நிற்காது படபடப்போடு வடக்கு நோக்கி நடந்தான். ஐயோ! அந்நேரத்தில் எங்கு செல் கிருன். தற்கொலை செய்து கொள்ளவா? பிழைக்க வழி தேடவா? கடவுளையன்றி வேறு யாரறிவார்?

* * *

ஒரு வருடம் விரைவில் ஓடி யொளிந்தது. பூந்தமல்லி ஹைரோட்டில் ஒரு பெரிய பங்களா. அதன் வாயிலில் ஏராளமான

மோட்டார்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. சீமான்களும், சீமாட்டிகளும், ஜமீன்தார்களும், ராஜாக்களும், அப்பங்களாவில் குழுமியிருந்தனர். அப்பங்களாவின் முகப்பில் 'பிரபல ஜோசிய நிபுணர்' என்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பலகை யொன்று மாட்டப் பட்டிருந்தது. இஜ்ஜோசியரை பேட்டி கண்டு



பேசுவதற்கே முன் குறிப்பிட்ட கனதனவான்களெல்லாம் அவரது கடைவாயிலில் காத்துக் கொண்டிருந்தனர்.

புரொபஸர்—கங்காநாத் இந்த உலகத்தை யெல்லாம் சுற்றிப் பலவிதமான வினோதங்களை யறிந்து வந்திருக்கிறாரென்றும் அதுவன்றி, இமயமலைக்குச் சென்று, கௌரீ—சங்கர் எழுந்தருளி அம்மலைச் சிகரத்தில் ராஜயோகஞ் செய்துகொண் டிருக்கும் வியாச பகவானிடம் சிஸ்ருஷை செய்து பலவிதமான வித்தைகளையும், அஷ்டமா சித்திகளையும் அடைந்திருக்கிறார் என்றும், அம்மகா சித்தியினாலேயே, அவர் உலகத்திலுள்ளவர்களுடைய தலைவிதிகளை யெல்லாம் தம் ஓலையில் எழுதி வைத்திருக்கிறார்கள், இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலங்களைப் பற்றிய நிகழ்ச்சிகளை யெல்லாம் தவறாது சொல்லி வருகிறார் என்றும், அவர் அளிக்கும் மகாசக்தி கவசம் சகல சித்திகளையும் தரக்கூடியதா யிருக்கிற தென்றும், சென்னைமா நகரமக்கள் பலவாறு பேசலானார்கள். நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாயிற்று. பல மாகாணங்களி லிருந்தும் மக்கள் வந்து ஜோசியம் கேட்டுச் செல்லலாயினர். உலகத்தின் பல பாகங்களிலுள்ள ஜனங்கள் மகாசக்தி கவசத்தை தபால் மூலமாகப் பெற்று பெரும் பயனடைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது; இவ்வளவு பிரசித்திபெற்ற புரொபஸர்—கங்காராம் யாரென்று நினைக்கின்றீர்கள். நமது ரங்கபாஷியமே என்றால், ஆச்சரியத்தால்

வாயைப் பிளக்கிறீர்களல்லவா! தோழர்களே! பரம தரித்திரனு யிருந்த ரங்கபாஷியம் இவ்வளவு சீக்கிரத்தில் எவ்வாறு அஷ்டைஸ் வர்யவனுகி விட்டான் என்பது உங்களுக்குப் பெரும் பிதிரா யிருக்கிறதன்றே! ரங்கபாஷியம் இதற்குமுன் வெறும் ஏட்டுக்கல்வி நிபுணனு யிருந்தான். அதனுல் தரித்திரனு யிருந்து கஷ்டப்பட்டான். இப்போது உலகத்தில் பிழைக்கும் வழி எதுவென்பதைக் கண்டு பிடித்து விட்டான். ஆதலால் அதன்பயனை யனுபவிப்பதில் ஒன்றும் நூதனமில்லை யல்லவா! இதுதான் மகாசக்தி கவசத்தின் மகிமை.

---

தகப்பனுர்:—பாபு! உன் வகுப்பில் யார் கெட்டிக்காரன்.

பையன்:—அடுத்தவீட்டு ஆனந்தன் அப்பா.

தகப்:—எப்படி.

பையன்:—வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது புஸ்தகத்தின் மறைவிலேயே மாம்பழம் தின்று விடுவான்.

—எஸ். என். திருவிக்ரமன்.

தபால்காரன்—ஐயா! தடிராமன் என்பவர் தாங்கள்தானு?

மற்றவர்:—போமையா! என்ன மரியாதையற்றவராய் இருக்கிறீர்? என் பெயர் த. டி. ராமன் அல்லவா?

தபால்காரன்:—ஓஹோ! மன்னிக்கவேண்டும். 'த' என்பதற்குப் பின்னும், 'டி' என்பதற்குப் பின்னும் புள்ளிகிடையாது.

—எம். கமாலுதீன் சாயபு


## கொக்கோக வைபவம்

என்னும் மன்மதன் திருவிளையாடல். இது முற்றிலும் ரகசிய நூல் பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதியது. இதில் காமகலா சாஸ்திர பேரறிஞர்கள் எழுதிய அசல் புத்தகம். இதுகாறும் வெளிவந்துலாவும் போலிப் புத்தகங்கள் போலல்ல. 64 மதன லீலா படங்கள், மன்மத சக்கரம், பஞ்சாட்சர சக்கரம் பூஜா விதானத்துடன் 57 அத்தியாயம் 400 பக்கம் காலிகோ பயிண்டு விலை ரூபா 2. தபால் சார்ஜ் அணு 6. F. M. S. ஆர்டர்கள் முன்பணம் ரூபாய் 3-8-0 அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

இதில் கண்ட விஷயங்கள் இல்லாவிடில் பணம் வாபீஸ்.

துளசிராம் புக்டிபோ,

33, தையப்ப முதலித்தெரு, சென்னை.

# என் அன்பைக் கவர்ந்த கண்ணாளா!...

மயிலை திரு. எஸ். ஐ. நாதன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பின்னர் மரகதம் வெட்கி வெகு ஆத்திரத்துடன் தன் வீடுபோய் சேர்ந்தாள்.

இதையறிந்த சோமசுந்தரம் கோபங்கொண்டான். சிறிதுயோசித்து பின்னர் 'மனோகரி நமது மாளிகையிலிருப்பதால் இவ்வித கஷ்டங்கள் நேரிடுகிறது. ஆகவே அவளை தனிமையாக தங்கி வாழும்படி செய்தால் பின்னர் சுகுணன் வழிக்கு வருவான்' என்று தீர்மானித்து மனோகரியின் தோழியின் மூலமாய் விஷயத்தைக் கூறி ஓர் சிறுகடிதமும் கொடுத்து அனுப்பினான். அவள், மனோகரியைக் கண்டு வணங்கி, 'அம்மா! தாங்கள் ஜெயபுரி பட்டணத்தைப் பார்க்க ஆவல் கொண்டீர்களாம், அவ்விடம் கொஞ்ச நாள் தங்கியிருந்தால் திரேகத்துக்கு நல்ல சுகமாயிருக்குமாம், அதனால் தங்களை அழைத்துக்கொண்டு இரண்டொரு நாளில் மிக்க சௌகரியத்தோடு சொல்லும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். தங்கள் பிரியம் எப்படியோ அப்படியே நடக்க காத்திருக்கிறேன்,' என்று வினயமாக கூறினாள். 'மனோகரி இதில் ஏதோ சூது நடந்திருக்கவேண்டும். எதற்கும் இவர் கடிதத்தைப் படித்துப் பார்க்கலாம்' என்று எண்ணி கடிதத்தை விரித்துப் படித்தாள். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

எனது அன்பும் பிரியமுள்ள மனோகரிக்கு, ஆசீர்வாதம் செய்து எழுதியது. நமது சுகுணனுக்கு மரகதத்தை மணமுடிக்க நான் ஆவல்கொண்டிருந்ததை அவன் தடுத்து உன்னையே கலியாணம் செய்து கொள்வதாக ஒரே பிடிவாதமாயிருக்கிறான். ஆகவே நீ தோழிமார்களோடு ஜெயபுரிக்குச் சென்று கொஞ்சநாள் அவ்விடம் தங்கியிருந்தால், பின்னர் ஒரு வேளை சுகுணன் மனம் வேறுபாடடையும். அவ்விடத்தில் உனக்கு எல்லாவித சௌகரியமும் நடக்கும். புறப்பட்டு போவதற்கு வேண்டிய ஒழுங்கு செய்துகொள். நமது வேலையாட்களைக் கொண்டு உன்னை அவ்விடம் சேர்க்கும்படி செய்கிறேன்.

இப்படிக்கு,

உனது தந்தை சோமசுந்தரம்.

படித்ததும் அவள் முகம் சவம்போல் வெளுத்தது. மிக்க வருத்த மடைந்தாள். பின்னர், 'சுகுணனை நான் உடனே அழைத்ததாகக் கூறு. நாளை காலை இவ்விடம் மேஜையின்மேல் ஓர் கடிதம் வைக்கிறேன். அதை என் தந்தையிடம் கொடுத்துவிடு' என்று தோழியிடம் கூறிவிட்டு அங்குபோடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் ஆழ்ந்த யோசனையோடு சாய்ந்தாள்.

தோழி சென்ற விநாடிக்குள் சுகுணன் அவ்விடம் சென்று மனோகரியின் அருகில் உட்கார்ந்து, 'ஆ காதலி! ஏன் உன் முகம் விகாரமடைந்திருக்கிறது? என்னை கூப்பிட்டனுப்பிய காரணம் யாது?" என்று கேட்டான். மனோகரி நடந்த விஷயங்களை கூறி சோமசுந்தரம் அனுப்பிய கடிதத்தையும் அவனிடம் காண்பித்தாள். அவன் அக் கடிதத்தை படித்து ஆத்திரங்கொண்டான். பின்னர் சிறிது நேரம் யோசித்து, மனோகரியை தழுவிக்கொண்டு, 'மனோகரி! நீ மட்டும் தனிமையாக போகவேண்டாம். நாம் இருவரும் இவ்விடத்தை விட்டு யாரிடமும் கூறாமல் இன்று இரவு வெளியேறி விடலாம்' என்று கூறிவிட்டு தன்னறைக்குவந்து தன் தகப்பனருக்கு ஓர்கடிதமொன்று எழுதி மேஜைமீது வைத்து விட்டு ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

இரவு மணி 10 அடிப்பதற்குள் எல்லோரும் தங்கள் படுக்கைக்குச் சென்றனர். அப்போது சுகுணன் சாதாரணமாக இரண்டு வஸ்திரங்களை யணிந்துகொண்டு தோட்டத்திற்குச் சென்றான். அப்போது மனோகரியும் தான் அணிந்திருந்த எல்லா நகைகளையும் கழற்றி பத்திரமாக பெட்டியில் வைத்துவிட்டு, ஆண்வேடம் தரித்துக் கொண்டு அவ்விடம் வந்து சுகுணனை கட்டிப் பிடித்துக்கொண்டு அவனது அழகிய முகத்தில் முத்தமொன்று ஈந்தாள். இதைக்கண்டு சுகுணன் முதலில் திடுக்கிட்டான். பின்னர் தன் பிரிய மனோகரியே ஆண்வேடம் தரித்திருப்பதைக் கண்டு அவளது மனோதைரியத்தையும், உற்சாகத்தையும் வியந்து அவளை அப்படியே கட்டி யணைத்து, 'என் ஆசை கண்ணாட்டி! நீ பெண்பிள்ளையாக விருந்தாலும் தைரியத்திலும், ஊக்கத்திலும் ஆண்பிள்ளைகள் உனக்கு நிகராகமாட்டார்கள். நீ ஆண்வேடம் பூண்டிருப்பதால் உன்னை மனோகரிக்குப் பதிலாக மனோகரனென்று அழைக்கிறேன்' என்று கூறினான். 'என் காதலரே! உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படியே நான் நடக்க காத்திருக்கிறேன்' என்று கூறி, மல்லிகைக் கொடியானது கொம்பை எப்படி சுற்றிக்கொள்ளுமோ அதுபோல அவனை தழுவிக் கொண்டாள். 'கண்மணி! வெகுநேரம் இவ்விடம் தங்கிவிட்டோம். யாராவது பார்த்துவிட்டால் பின்னர் கஷ்ட முண்டாகும். ஆகவே நாம் சீக்கிரம் இதைவிட்டு புறப்பட்டு விடுவதே நல்லது' என்று கூறினான். இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

மறுநாள் காலை மனோகரியின் தோழி ஓர் கடிதத்தை சோமசுந்தரத்திடம் கொடுக்க, அதை அவன் படித்து பார்த்துவிட்டு, வருத்த

மடைந்தாலும், இதனால் சுகுணன் விஷயத்தில் அனுகூலமே யென்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது விஜயாள், 'கோ' வென்று அலறிக்கொண்டு அவ்விடம் வந்து தான் கொண்டுவந்த கடிதத்தை சோமசுந்தரத்திடம் கொடுத்து, 'ஐயோ! என் திகட்டா வமுதே! நான் ராமேஸ்வரம் முதலிய புண்ணிய தீர்த்தமாடி, வேண்டிய தேவதைகளை ஆராதித்து, அநேக தானதர்மங்களை செய்து உன்னை பிள்ளையாகப் பெற்றேனே. ஐயோ! பாலகா! எங்களைவிட்டு இப்படியும் செல்லலாமா!' என்று கதறியழுதாள். சோமசுந்தரம் விஷயத்தை யறிந்து விஜயாளை ஒருவாறு தேற்றிவிட்டு அன்றுமுதற் கொண்டு அவர்கள் இருவரையும் தேடும்பொருட்டு நாலாதிசைகட்கும் அநேக ஆட்களை அனுப்பினன்.

நிற்க, சுகுணனும், மனோகரியும் வழியில் கல்லிலும் முள்ளிலும் நடந்துசென்றதால் மிகவேதனை யடைந்தார்கள். அப்பெண்மணியின் மிருதுவான சரீரம் சூரிய வெப்பத்தால் தாக்கப்பட்ட புஷ்பம் வாடுவதுபோல் வாடி வதங்கி சோர்வுற்றது. இரண்டு மூன்று நாட்கள் ஸ்நானங்கூட யில்லாமலிருந்தால் அவளது கரிய கூந்தல் சிக்காய் சடைபோல் இருக்கிறது. சில விடங்களில் புசிப்பதற்கு வேண்டிய ஆகாரமில்லாமையால் இரண்டொருநாள் அவர்கள் உபவாஸ மிருக்கவும் நேர்ந்தது. இவ்விதமான துன்பங்களை யனுபவித்தாலும், சுகுணன் மனோகரியை தழுவிக்கொண்டு, 'என் அன்பே! உலகத்தில் எப்பொழுதும் சுகத்தையே அனுபவிக்க முடியாது. சுகமெய்தியோர் துன்பமும், துன்பமெய்தியோர் சுகமும் அடைய வேண்டியது அவசியந்தானே. அரிச்சந்திரன், நளன் முதலியோர் கஷ்டப்பட்டபின்னர் சுகமனுபவிக்க வில்லையா? ஆதலால் கண்ணே! நாம் இக்கஷ்டங்களை எல்லாம் பொறுமையுடன் அனுபவிக்க வேண்டும்,' என்று தேறுதல் கூறினன். மனோகரி, காதுக்கினிய கீதங்களும், பக்திரசங்கொண்ட பாடல்களும் பாடிக்கொண்டுவர இருவரும் கஷ்டங்களை ஒருவாறு சகித்துக்கொண்டு ஓர் செழிப்பான யிடத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் ஒரு சிற்றாறும், அதன் இருகரையிலும் தென்னை, பனை, ஈந்து முதலிய மரங்களும், சிற்சில விடங்களில் இரண்டொரு புளிய மரங்களும், தேக்குமாங்களும் இருந்தன. அதன் அருகில் ஓர் சிறிய பிள்ளையார் கோவிலும் அதன் பக்கத்தில் ஒரு தடாகமு மிருந்தன.

அவ்விடத்தில் கிடைத்த காய்கனிகளை புசித்துவிட்டு இருவரும் அவ்விடத்திலுள்ள இயற்கை விநோதங்களைக் கண்டு களித்தனர். அப்போது மனோகரி 'என் காதலரே! இக்கோயில் சிறியதாயிருந்தாலும் எவ்வளவு அழகாயிருக்கிறது பார்த்தீர்களா! இச்சிறிய கோவிலுக்கு ஓர் துயஸ்தம்பமும், ஒரு சிறு மண்டமும் அமைக்கப்பட்டிருப்பது எவ்வளவு ரமணியமா யிருக்கிறது' என்று இனிமையாக கூறினள். 'கண்ணே! இதோ இச்சிறிய கோவிலுக்குப் பக்கத்தில்

தெரிகின்ற தடாகத்தைப்பார். இதில் ஜலம் எவ்வளவு சுத்தமாக இருக்கின்றது. அன்னங்கள், நீர்க்கோழிகள், வாத்துக்கள் முதலியவைகள் இத்தடாகத்தில் முழுகி விளையாடிக்கொண் டிருப்பது எவ்வளவு அழகாயிருக்கிறது. இவ்வாவியைச் சுற்றிலும் அழகிய புஷ்பச் செடிகளில் நறுமணம் கொடுத்துக் கொண்டிருக்கிற புஷ்பங்களைப் பார். இதோ! நார்த்தை, கொய்யா, செவ்வாழை முதலிய கனிவிருக்ஷங்களின் கனிகளைப் பறிப்பாரின்றி சிந்திக்கிடப்பதை, பக்ஷிகள் புசிப்பது எவ்வளவு அழகாயிருக்கின்றது' என்று கூறினன். அப்போது கதிரவன் மேற்குத் திசையில் ஆழ்ந்தான்.

'என் ஆசை நேசா! பொழுது போய்விட்டது. மேலும் இவ்விடம் நாம் தங்கிவசிக்க பொருத்தமான விடமாயிருக்கிறபடியால், இவ்விடத்தில் தங்கி வாழலாம். பின்னர் கடவுள்விட்ட வழியாகட்டும்' என்று மனோகரி கூறினாள். அவ்வாறே அந்த நந்தவனத்தில் ஓர் பாணசாலை கட்டி அவ்விடத்தில் தங்கி விடியற்காலையில் இருவரும் ஸ்நானம் செய்து அவ்விடத்திலுள்ள புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு அச்சிறிய கோயிலுக்குச் சென்று பிள்ளையாரை அர்ச்சனை செய்துகொண்டு வந்தார்கள். ஒருநாள் இவர்கள் அவ்வனாந்தா முழுவதும் சுற்றிவந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிவிட்டமையால் அன்று வழக்கம்போல் எழுந்திருக்காமல் சற்று நேரங்கழித்து எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு கோவிலுக்கு அர்ச்சனை செய்ய சென்றனர். அப்போது பூக்களும், கனிகளும் அவ்விடமிருக்கக்கண்ட சுகுணன், இவ்விடத்தில் யாரோ அர்ச்சனை செய்துவிட்டு போயிருக்கிறார்கள். அவர்கள் யாராயிருக்கலாம்,' என்று யோசித்தான். பின்னர் அப்பிள்ளையாரை வழிப்பட்டு அர்ச்சனை முதலானவைகளை முடித்துவிட்டு தங்கள் இடத்துக்குச் சென்றனர்.

மிக்க அழகுக்குடை தரித்த, சுமார் 35 வயதுள்ள ஓர் பெண்பிள்ளை. ஏதோ கவலையால் அவள் தேகமிளைத்து, முகம் சற்று விகாரப்பட்டிருந்தது. இருந்தாலும் அவளை சற்றுக் கூர்ந்துநோக்குங்கால், அவள் உயர்ந்த குலத்தில் தோன்றி ஏதோ விதிவசத்தால் மிக்க கஷ்டப்படுவதுபோல் தோன்றும். அவள் கடந்த சில நாட்களாக சூரிய உதயமாவதற்குள்ளாக அக்கானகத்திலுள்ள அப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அதை சுத்திசெய்து, தான் கொண்டுவந்த பூக்களையும், கனிகளையும் அப்பிள்ளையார்க்குப் படைத்து தனது மனக்குறையை எடுத்துக்கூறி அப்பிள்ளையாரை சேவித்துச் செல்வது வழக்கம். இவ்வாறு அவள் சேவித்துக்கொண்டு வருகையில் அப்பிள்ளையார்க்கு அதிகமான பூக்கள் அவ்விடத்தில் இரண்டு மூன்று நாட்களாக யிருந்ததால் 'அக்கோயிலுக்கு யாரோவந்து அர்ச்சனை செய்து போவதாக தெரிகிறது. அவர்கள் யாராயிருக்கலாம்' என்று கருதிய அப்பெண்பிள்ளை, அவர்களை காணும் பொருட்டு ஒருநாள் விடியற்காலையில் அத்தடாகத்தின் அருகில் அடர்ந்த ஓர்

புதரின் கீழ் மறைந்துகொண்டிருந்தாள். அப்போது நமது சுகுணனும், ஆணுடைதரித்த மனோகரியும் அத்தடாகத்துக்குள் வழக்கப்போல் சென்று இருவம் வேறுடை தரித்து மிக உல்லாசமாக கைகோர்த்துக் கொண்டு ஸ்நானம் செய்து கொண்டிருந்தார்கள். இதை கண்ணுற்ற அப் பெண்பிள்ளை, இவர்களது சுவர்ண மயமான மேனியானது துவண்டும், ஒளி பெற்ற முகமானது சற்று ஒளி மங்கியுமிருக்கிறது.



தற்காலம் இவர்கள் யாவற்றையும் துறந்து ஏதோ காரணத்தினால் இவர்கள் ஏழ்மையடைந்திருந்தாலும், இவர்கள் தனவந்தர்களே யாவார்கள். 'சந்தனமென் குறடுதான் தேய்ந்தகாலத்தும் கந்தம் குறைபடாது' என்பதுபோல் இவர்கள் குணம் மேன்மை பெற்று விளங்குகிறதைக் கண்டு தன் குறையை மறந்து ஆனந்தங் கொண்டாள். பின்னர் அப்பெண்பிள்ளை, மனோகரியை சற்றுநேரம் கவனித்தாள். மனோகரியின் ஈரயுடையானது அவளது திரேகத்தை ஒட்டிக்கொண்டிருந்தமையால் அவளது சிறுத்த கொங்கைகள் அவள் கண்ணுக்குத் தோன்றின. 'அவள் ஏதோ காரணத்தை முன்னிட்டு ஆண்பிள்ளையாக மாறுபட்டு தோன்றுகிறாள். இவர்களிடத்தில் ஏதோ பெரியதோர் மர்மமிருக்கிறது' என்று அறிந்த அவள் பின்னும் அவளையே கூர்ந்து நோக்குங்கால் மனோகரியின் வலது தொடையில் ஓர் சிறு மச்சமொன்று இருப்பதை கவனித்து அந்த ஏழை ஸ்திரியானவள் தனது இரண்டு வயது குழந்தை காணாமல் போனதை நினைத்தாள். 'அவள் இப்போது வசித்துக்கொண்டிருப்பாளேயாகில் இவளே எனது குழந்தையாக இருக்கவேண்டும். இம் மச்சமொன்றே அதற்கு ருசு'வென்று எண்ணி அப்பிள்ளையாரை வழுத்தினாள்.

சுகுணனும், மனோகரியும் ஸ்நானம் செய்துவிட்டு உலர்ந்த ஆடையணிந்து அவ்விடத்திலுள்ள புஷ்பங்களை பறித்துக்கொண்டே அப்

புதாண்டை வர, அவ்விடத்தில் இப் பெண்பிள்ளை நிற்கக்கண்டு ஆச்சரியங்கொண்டு நின்றூர்கள். அப்போது அப்பெண்பிள்ளை இவர்களைநோக்கி, 'குழந்தைகளே, நீங்கள் யார்? இவ்விடம் வர காரணம் என்ன? (மனேகரியை நோக்கி) நீ ஆண்வேடம் தரித்திருந்தாலும் நீ ஓர் பெண்பிள்ளை என்பது எனக்கு விளங்கிவிட்டது. ஆகையால் உங்களது வரலாறு முழுவதையும் எனக்கு தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டாள். இதை செவிமடுத்த அவர்கள் இருவரும் ஆச்சரியமும் அச்சமுமடைந்தனர். இப்பெண்பிள்ளை ஏழ்மையாயிருந்தாலும் இவள் யாரோ உயர்ந்த குலத்தில் தோன்றியவளா யிருக்க வேண்டுமென்று சுகுணன் கருதி தங்களது வரலாறு முழுவதையும் சொன்னுன். மனேகரியின் வளர்ப்பைப்பற்றியும் சொல்லி முடித்த உடனே அவ்வேழை ஸ்திரி மனேகரியை தன்னிருகரங்களால் கட்டியணைத்து உச்சிமோந்து, 'கண்ணே! உன்னை என்னிடமிருந்து வெகு காலம்வரைக்கும் பிரித்துவைத்த அக்கடவுளே இப்போது நம்மிருவரையும் எதிர்பாராதபடி சேர்த்து வைத்தார்,' என்று கூறினுள். இவைகளை எல்லாம் கேட்ட சுகுணன் ஆச்சரியத்தால் மெய்சிலிர்த்து அப்பெண்பிள்ளையின் பாதத்தைதொட்டு நமஸ்காரம் செய்து அவள் இவ்விடத்திற்கு வந்துற்ற காரணத்தை கேட்டான். அப்போது அப்பெண்பிள்ளை, 'அப்பா! சுகுணு! நீ எனது தமையன் மகனே. மனேகரியென்று நீ அழைக்கும் இக்குழந்தையே எனது மகள். என்னை கனகவல்லி யென்று அழைப்பார்கள். நாங்கள் சுமார் 13 வருடங்களுக்குமுன் ஜெயபுரி பட்டணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கையில் மனேகரி 2 வருட குழந்தை. அப்போது ஊரில் அதிக திருட்டு நடந்துகொண் டிருந்தது. எங்களுக்கு வெகு நாட்களாக பிள்ளையில்லாது மனேகரி பிறந்தபடியால் எல்லாவித ஆபரணத்தாலும் அக்குழந்தையை அலங்கரித்து நாங்கள் கண்ணூரக் கண்டு மகிழ்ந்துகொண் டிருந்தோம். ஓர் நாள் இக் குழந்தையை யாரோ தூக்கிக்கொண்டு சென்றுவிட்டனர். நாங்கள் எவ்வளவோ பணம் செலவு செய்தும் குழந்தை கிடைக்காதபடியால் எனது கணவன் இதே கவலையால் சிலநாட்களுக்கு பின்னர் இறந்துவிட்டார். தற்கொலை செய்வதால் பாவமே யொழிய நமது ஆத்மா சாந்தியடையாது எனக்கருதி நான் எல்லா சொத்து சுதந்தரங்களையும் அந்த ஜெயபுரி பாங்கியில் கட்டிவிட்டு இக்கானகத்தில் சுமார் 1 மைல் தூரத்துக்கப்பால் ஓர் சிறு குடிசை ஏற்படுத்தி அதில் வசித்துக்கொண்டு இச்சிறிய கோவிலுக்கு வந்து இதிலிருக்கும் அப்பிள்ளையாரை தரிசித்து, காணுமல்போன குழந்தையை கண்டெடுத்து கொடுக்குமாறு உறுதியான பிரார்த்தனை செய்துகொண்டு வருகிறேன். இப்படியாக நாள் தவருமல் அப்பிள்ளையார்க்கு அர்ச்சனை செய்துகொண்டு வரும்போது சிலநாட்களாக அச்சிறு கோவிலில் ஏராளமான புஷ்பங்கள் சிதறி கிடப்பதைக்கண்டு யாராயிருக்கலாமென அறிய ஆவல்

கொண்டு இத்தடாகத்தின் ஓரிடத்தில் மறைந்து நின்று பார்த்தேன். நீங்கள் இருவரும் ஸ்நானம் செய்யும்போது உங்களை கண்டேன்' என்றுகூறி இருவரையும் தழுவி மனோகரிக்கு ஏராளமான முத்தங்க ளளித்தாள்.

பின்னர் மூவரும் அப்பிள்ளையார்க்கு ஏராளமான பூக்களா லும், கனிவர்க்கங்களாலும் அர்ச்சனை, தேவாராதனை முதலியவை கள் செய்தனர். கனகவல்லி இருகரங் குவித்து கண்ணீர்ததும்ப, 'கருணைக் கடலே! முடிவாக உன்னருளால் நானிழந்த பெண் குழந் தையை அடையப் பெற்றேன்.......' என்று தோத்திரம் செய்தாள். பின்னர் சுகுணன் இவர்களை அழைத்துக்கொண்டு தன் தந்தையின் ஊருக்குச் சென்றார்.

இவனது தாய்தந்தையர்களான சோமசுந்தரமும், விஜயாளும் வாடிவதங்கி ஒவ்வொருநாளும் இவர்களது வருகையை எதிர்பார்த் துக்கொண் டிருந்தனர். இம்மூவரும் அவ்விடம் தோன்றினார்கள். அப்போது எதிர்பாராத தன் தங்கையை கண்ணுற்ற சோமசுந்திரம் 'ஆ! தங்காய்' என்று அலறி அவளை அணைத்துக் கொண்டான். விஜயாள் வெகுநாட்களாக இவர்களது வருகையை எதிர்பார்த்திருந் தாளாதலால், இவர்களைக்கண்டதும் அவள் பொங்கியெழுந்த ஆவல் மிகுதியால் 'ஆ' என்று அலறி மூர்ச்சித்தாள். அப்போது மனோகரி, "அத்தான் நான் எக்குலத்தைச் சேர்ந்தவள் என்று ஏங்கியிருந்தேன். தாங்கள் எனது மாமன் மகனே!' என்றுகூறி அவனை தன் மார்புற தழுவிக் கொண்டாள். பிறகு அவர்கள் எல்லா விஷயங் களும் அறிந்து அளவற்ற சந்தோஷ மடைந்தார்கள். கனகவல்லி ஜெய புரிக்குச் சென்று மறுபடியும் தனது ஏராளமான சொத்துகளை யடையப் பெற்றாள்.

ஒருநாள் சோமசுந்தரத்தின் தோட்டத்தின் நீர்நிலை மண்டபத்தின் அருகில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் நமது சுகுணன், இளங்கட்ட ழகியும், பூரண சந்திரனைப் பழிக்கின்ற ஒளிபெற்ற முகத்துடன் அழகாயும் விளங்கும் மனோகரியை தழுவிக் கொண்டு, என் அன்பின் உருவே! எம்பெருமானின் செய

லைப் பார்த்தனையா? இரண்டு வயது குழந்தையாக யிருக்கும்போது உன்னை என் தாய் தந்தையரிடம் கிடைக்கச் செய்து முடிவாக கணக்கற்ற சொத்துக்களுக்கு உரிமையுடயவளாகிவிட்டாய்' என்று சொன்னான். 'காதலா!' எல்லாவற்றிற்கும் தங்கள் அன்பு ஒன்றே காரணம்' என்றுகூறி அவனை தன் மார்புற தழுவிக்கொண்டாள்.

ஜெயபுரி முழுவதும் நாலாவித பூப்பந்தல்களும், கண்ணைக் கவரக்கூடிய அதி அற்புத வேலைப்பாடுகளமைந்த சிங்காரிப்புகளும், நடந்துக்கொண்டிருக்கிறது. சுகுணனுக்கும்-மனோகரிக்கும் கலியாணத்துக்குவேண்டிய ஏற்பாடுகள் யாதொரு குறையில்லாமல் மிக மும்மரமாக நடந்து வருகிறது. பணக்காரர் முதல் ஏழைகள் ஈறாக யாவருக்கும் திருமணப் பத்திரிகை அனுப்பியுள்ளார்கள். நாளைய சுக்கிரவாரத்தன்று முகூர்த்தம். யாவரும் சென்று அக்கலியாணத்தைச் சிறப்பித்து அத்தம்பதிகளை வாழ்த்துங்கள்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.